Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 36 | விலை - 40 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 100 மாசி 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 08 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## பட்டதாரிகளே சம்பளத்துடன் வீட்டில் நில்லுங்கள்

*மஹிந்த கூறுகின்றார்*

கொழும்பு, மார்ச் 8

அண்மையில் ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகள் சம்பளத்தை எடுத்துக் கொண்டு இரண்டு மாதங்கள் வீட்டில் இருந்து விட்டு அதன் பின்னர் பணிக்கு வருவது நல்லது. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஊடகங்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு 33

## ஆள்சேர்ப்பு செய்யப்பட்டோர் விவரங்கள் இணையத்தில்

கொழும்பு, மார்ச் 8

தொழில்பெறும் பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் எதிர்வரும் 11ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தொழிலை எதிர்பார்த்துள்ள பட்டதாரிகளை தொழிலில் அமர்த்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்தகைமை பெற்றுள்ள அனைவருக்குமான நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தகைமை பெற்றுள்ள அனைவரினதும் பெயர் விவரங்கள் மார்ச் 11ஆம் திகதி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்படும். நியமனக் கடிதங் 33



## கச்சதீவுத் திருவிழாவில் 7 ஆயிரம் பேர் பங்கேற்பு

கச்சதீவு, மார்ச் 8

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாவில் இம்முறை சுமார் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை, இந்தியப் யாத்திரிகர்கள் வருகை தந்தனர்.

சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளைக் கடற்படையினர் மேற்கொண்டிருந்த போதும், 7 ஆயிரம் பக்தர்கள் வரையி 28

வடக்கில்

# தமிழ் அரசியல்வாதியை கொல்லச் சதி முயற்சி

## வடமராட்சியில் கைதானவர்கள் பரபரப்பு வாக்குமூலம்

கொழும்பு, மார்ச் 8

யாழ்ப்பாணத்தில் அண்மையில் வெடிபொருள்களுடன் கைது செய்யப்பட்டவர்கள், முக்கிய தமிழ் அரசியல்வாதியொருவரைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டினார்கள் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. கைது செய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்களும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த வாரம் இராணுவப் புலனாய்வு பிரிவினர், பயங்கரவாத தடுப்பு புலனாய்வு பிரிவினர் இணைந்து வடமராட்சி வல்லிபுர ஆலயத்துக்கு அருகில் வீடொன்றை சுற்றி வளைத்தனர். 33

## கச்சதீவில் கொரோனா பரிசோதனை

கச்சதீவு, மார்ச் 8

கச்சதீவுத் திருவிழாவின் நிறைவில், கொரோனா தொற்றுக்குரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருவிழா நிறைவில் ஆலய நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட அறிவித்தலை அடுத்து இலங்கையிலிருந்து சென்றவர்களுக்கு மீளத் திரும்பும் இடத்தில், சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 28

## 24 சுயேச்சை குழுக்கள் கட்டுப்பணம்

2020 நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்காக இதுவரையில் 24 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 10 மாவட்டங்களில் நேற்று முன்தினம் கட்டுப்பணம் செலுத்தியிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பட்டுள்ளது. (ஒ.5)

## கொரோனா வதந்தியால் சாவகச்சேரியில் பதற்றம்

சாவகச்சேரி, மார்ச் 8

கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளான சீனப் பிரஜை ஒருவர் சாவகச்சேரியில் தங்கியுள்ளதாக வெளியான வதந்தியால், சாவகச்சேரி நகரில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி, மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வை 33

## யானைச் சின்னத்தில் போட்டியிடும் ஐ.தே.க.

*தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பு சஜித் அணியினர் கடும் விசனம்*

கொழும்பு, மார்ச் 8

நாடாளுமன்றத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. 33



## இந்தியாவில் கரையொதுங்கிய படகுகளால் கச்சதீவில் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு மற்றும் மன்னாரிலிருந்து கச்சதீவு அந்தோனியார் ஆலயத்துக்கு டிங்கிப் படகுகளில் பயணித்தவர்களின் 8 படகுகள் தமிழகத்தில் கரையொதுங்கின. இதன் காரணமாக அந் 33

## ஒரு லட்சம் வேலை வாய்ப்பு ஆணைக்குழு அனுமதி மறுப்பு

கொழும்பு, மார்ச் 8

மிகவும் வறிய நிலையில் உள்ள ஒரு இலட்சம் குடும்பங்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் திட்டத்தை முன்னெடுக்க அனுமதிக்குமாறு தேர்தல் 33

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# எது நியாயம்?

பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தால் விழி பிதுங்கிப் போய் நிற்கின்றது இலங்கை அரசு. பதவியில் இருக்கும் ஆட்சியாளர்கள் தேர்தல் காலங்களில் தங்கள் அதிகாரத்தின் எல்லைக்குட்பட்ட சகல வளங்களையும் பயன்படுத்தி, வாக்குகளை அள்ளவே முயற்சிப்பார்கள். அப்படியான தூண்டில்களில் முக்கி யமானது, புதிய நியமனங்களை வழங்குதல்.

குறிப்பாக ஒரு அரசு புதிதாக ஆட்சிக்கு வந்தவுடன் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை எடுத்த எடுப்பிலேயே வழங்கி விடுவதில்லை. கொஞ்சக்காலம் இந்தா , அந்தா என்று இழுத்தடித்து, பிரச்சினையின் வீரியத்தை அரசு அதிகரிக்கச் செய்யும் . பின்னர் ஒரு கட்டத்தில் பட்டதாரிகள் பொறுத்தது போதுமென்று பொங்கியெழுந்து, ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கு வேலையில்லாப் பிரச்சினை நாட்டின் பிரதான பேசுபொருளாகும். இவ்வளவும் நடந்து முடிய அடுத்த தேர்தல் நெருங்கிவிடும். அந்தச் சமயத்தில்,இப்போது தான் பட்டதாரிகளுக்கு வேலையில்லை என்ற விடயம் தமக்குத் தெரியவந்ததைதைப் போல ஆட்சியாளர்கள் நாடகம் போடுவார்கள். உடனடியாகவே அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும். பட்டதாரிகளும் இதுவரை நடந்ததையெல்லாம் மறந்து, தமக்கு வேலை கொடுத்த ஆட்சியாளர்களுக்கு தேர்தலின் போது தம் விசுவாசத்தைக் காட்டுவர்.

இதேபாணியில் தான் இம்முறை கோத்தாபய அரசும் பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்களை வழங்கி, அவர்களின் ஆதரவைப் பெற்றுவிட நினைத்தது. அந்த நினைப்பின்படி அவர்களுக்கு பட்டதாரிப் பயிலுநர் நியம னங்களும்வழங்கப்பட்டாயிற்று. சரி, பிரச்சினை தீர்ந்தது, "இனி அவர்கள் அத்தனை பேரின் வாக்குகளும் எங்களுக்குத்தான்" என அரசு கனவில் மிதந்தது. ஆனால் அந்த நினைப்பில் தேர்தல் ஆணைக்குழு, மண்ணள்ளிப் போட்டுள்ளது. தேர்தல் சமயத்தில் இப்படி பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்களை வழங்கியது தவறு, உடனடியாக அவர்களுக்கான சகல பயிற்சிகளையும் நிறுத்த வேண்டும் என தேர்தல் ஆணைக்குழு அதிரடி உத்தரவு போட்டுவிட, இப்போது என்ன செய்வதென்று தெரியாத திரிசங்கு சொர்க்க நிலையில் அல்லாடுகிறது கோத்தா அரசு.

எதிர்க்கட்சியோடு மோதுவது போல தேர்தல் ஆணைக்குழுவோடும் மோதும் முடிவுக்கு இப்போது கோத்தாபய அரசு வந்துவிட்டது. " பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நியமனங்களை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியது ஒருதவறான முன்னுதாரணம். ஏன் அவர்கள் அப்படிச் செய்தார்கள் என்று இன்னமும் எமக்குப் புரியவில்லை. நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க ஒவ்வொரு அரசும் செய்யவேண்டிய கடமையைத்தான் நாங்களும் செய்தோம். இதற்கு அரசியல் சாயம் பூசினால் நாம் என்ன செய்வது?" என்று ஜனாதிபதி கோத்தாபய அப்பாவி போலச் சொல்கிறார்.

பிரதமர் மஹிந்தவோ இன்னும் ஒருபடி மேலேபோய், " பட்டதாரிகளே, ஒருமாதம் வீட்டில் ஓய்வெடுத்தபடி சம்பளத்தை எடுங்கள். அதன் பின் எல்லோருக்கும் வேலை வாய்ப்பை வழங்குவோம்" என்று எகத்தாளமாக, ஆணைக்குழுவுக்கு சவால் விடுக்கிறார்.

கடந்த முறையும், ரணில் அரசு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக கருத்திட்ட உதவியாளர்கள் என்ற பதவி நிலைக்கு ஆயிரக்கணக்கானோருக்கு நியமனம் வழங்கியிருந்தது. ஆயினும் அது தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட நியமனம் என்று கூறி, அதனைத் தேர்தல் ஆணைக்குழு இடைநிறுத்தியது. ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய வென்றதால், ஐ.தே.க ஆட்சியில் இருந்து விலகி புதிய அரசு பதவியேற்றது. இதனால் தேர்தலின் போது இடைநிறுத்தப்பட்ட கருத்திட்ட உதவியாளர் நியமனங்கள் மீள வழங்கப்படவில்லை. நியமனங்களை மீள வழங்கக் கோரி பாதிக்கப்பட்டவர்கள் அரசிடம் கெஞ்சியபோதும், அது கண்டுகொள்ளப்படவில்லை. உண்மையாகவே அரசுக்கு அக்கறை இருந்தால் அந்த நியமனங்களையும் வழங்கியிருக்கலாம். ஆனால் அதனை அரசியல் ரீதியான நியமனம் என்று குப்பைக்கூடைக்குள் தூக்கிப் போட்ட கோத்தா அரசு, தான் வழங்கிய பட்டதாரிப் பயிலுநர் நியமனங்களை மாத்திரம் அரசியல் ஆதாயத்தை எதிர்பார்க்காமல் வழங்கியதாகக் கூறுவது எந்தளவு நியாயம்?

# கொரோனா தடுப்பு பற்றி விளக்குகின்றது அரசு



**கொழும்பு, மார்ச் 8**

**'கோவிட் 19' எனப்படும் கொரோனா வைரஸ் தொற்றுநோய் நிலைமை மற்றும் அதனைத் தடுப்பதற்காக இலங்கை அரசு முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து இராஜதந்திரிகளுக்கு வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தன விளக்கினார்.**

வைரஸ் பரவுவதைக் குறைப்பதற்குப் போதுமான தடுப்பு நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தெரிவித்தார். ஊடகங்களின் வகிபாகத்தைப் பாராட்டிய அதேவேளையில், தேவையற்ற முறையில் அச்சத்தை ஏற்படுத்தாமல், வைரஸின் ஆபத்துக்கள் குறித்து அவதானமாக இருக்கும் அதே நேரத்தில், பொது மக்களுக்கு சரியான தகவல்களை வழங்குவதில் ஊடகங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இலங்கை மாணவர்களை வுஹானில் இருந்து வெற்றிகரமாகவெளியேற்றியமைகுறித்த இலங்கையின் தயார்நிலை மற்றும் அதன் வெற்றிகரமான பெறுபேறு குறித்து வெளிவிவகார செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க தனது ஆரம்ப உரையில் தெரிவித்தார். இந்த நோக்கத்துக்காக சீன அரசு வழங்கிய ஒத்துழைப்புக்கு செயலாளர் பாராட்டுக்களைத் தெரிவித்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால்தெளிவாகவெளிப்படுத்தப்பட்ட வகையில், வைரஸைப் பற்றிய ஆதாரமற்ற அச்சத்தின் காரணமாக எந்தவொரு வெளிநாட்டுப் பிரஜைக்கும் பாகுபாடு காட்டப்பட மாட்டாது என்று தெரிவித்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட சிகிச்சை தொடர்பில் அவ்வப்போது கூறப்படும் சில சம்பவங்கள் நாட்டின் பொதுவான நிலைமையைப்பிரதிபலிக்கவில்லை என்று வெளிவிவகார செயலாளர் ஆரியசிங்க குறிப்பிட்டார் என்று வெளிநாட்டு உறவுகள் அமைச்சு தெரிவித்தது. (த)

## தனியாரின் ஊக்குவிப்புடன் பொருளாதார விருத்திவரும்

*தான் வென்றால் இது நடக்கும் என்கிறார் விக்கி*

யாழ்ப்பாணம், மார்ச் 8

நாடாளுமன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தனியார் துறைகளின் ஊக்குவிப்புடன் பொருளாதார விருத்தியை உறுதிப்படுத்த முடியுமென நம்புகின்றேன்" என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வலிகாமம் கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் மக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்களுக்கு சமூக ரீதியாக சில விடயங்களைக் கூறிவருகின்றோம். நாங்கள் தமிழ்ச் சமுதாயமாக ஒன்றிணைந்து மற்றவரைச் சாராது எம்மை நாமே நம்பி எமது சமூக பொருளாதார விருத்தியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். சகல சமூகங்களும் ஒற்றுமையுடன் பயணிக்க நாங்கள் வழிவகுப்போம்.

பல காணிகளின் சொந்தக்காரர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றார்கள். அவர்களுடன் பேசி குறித்த காணிகளை மிகக் குறைந்த குத்தகைப் பணத்துக்குப் பெற்று அந்தக் காணிகளைப் பயன் பெறச் செய்யும் நடவடிக்கைகளில் இறங்கவுள்ளோம். - என்றார். (த)

## செயலமர்வு

கிளிநொச்சி,மார்ச் 8

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கல்விகற்று 2019 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய சகல துறை மாணவர்களுக்குமான உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியில் இருந்து 12 மணி வரை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன் தலைமையில் நடைபெறவுள்ள செயலமர்வில் கருத்துரைகள் வழங்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ -214)

# கல்வி அமைச்சின் தரவிலுள்ள விவரங்களைச் சரிபார்க்கவும்

*மாகாணத் திணைக்களம் அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கு மாகாணத்திலுள்ள ஆசிரிய சேவையைச் சேர்ந்தவர்கள் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் தரவிட வழங்கிய தகவல்களைச் சரிபார்த்துக் கொள்ளுமாறு மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

கொழும்பு கல்வி அமைச்சின் செயற்றிட்டத்துக்கு அமைவாக வடக்கு மாகாணத்திலுள்ள சகல ஆசிரிய சேவையைச் சேர்ந்தவர்களினதும் சுயவிவரங்கள், குடும்ப விவரங்கள், கல்வித் தகைமைகள் மற்றும் அவர்களின் சேவைக் காலங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் சுயவிவரக் கோவையில் உள்ளபடி தரவுத் தளத்தில் தற்போது பதிவேற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆசிரியர்களுக்குக் கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் என்பனவும் வலயக் கல்வி அலுவலகங்களால் அறியத்தரப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் ஆசிரியர்கள் தொடர்பான முக்கியமான தீர்மானமெடுத்தல் செயற்பாடுகளில் குறித்த தரவுத்தளத்திலுள்ள தரவுகளே பயன்படுத்தப்படும் என்பதால் அனைத்து ஆசிரியர்களும் தங்களுக்கு வழங்கப்பட்ட பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி முறைமைக்குள் உள்நுழைந்து தங்கள் விவரங்களைச் சரிபார்ப்பதுடன் ஏதாவது விவரங்களில் தவறு காணப்படுமாயின் வலயக் கல்வி அலுவலகங்களின் நிர்வாகப் பிரிவுக்கு எழுத்துமூலமாக அறியத்தரல் வேண்டும்.

www.nemis.moe.gov.lk என்ற இணையத்தள முகவரியில் தமது பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை வழங்கி புதிய கடவுச்சொல்லை உருவாக்கிய பின்னரே தங்கள் விவரங்களைப் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)


பாராளுமன்றத் தேர்தல் 2020 யாழ் மாவட்டம்
தமிழ் தேசியத்தின் உறுதிமிக்க பயணத்திற்கான
எதிர்பார்ப்பு..! மாற்றம்..! நம்பிக்கை..!
உரிமைக்காய் குரல் கொடுப்போம்
இனம்வாழ வழி சமைப்போம்
களம் கண்ட கனவுகள் நனவாக
வளம் கொண்ட தமிழினம் உருவாக!
ஆதரவாளர்கள் :-
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)
உங்கள் தெரிவு
குருசுவாமி சுரேந்திரன். MBA
(சுரேன்)


அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்
அபான்ஸ்
வட்டி இல்லை
புத்தாண்டு ஜொலியோ ஜொலி
60 மாதங்கள் வரை வட்டி இல்லை
இலவச நீடித்த உத்தரவாதம்
மாற்றீடு சலுகை
50% வரை தள்ளுபடி
0%
வட்டி இல்லை ஜொலி அதிகம்
ஒற்றைக்கதவு | இரட்டைக்கதவு | சைட் பை சைட் குளிர்சாதனப் பெட்டிகள்
Inverter Linear
Haier
Abans
LG
HRD-1903BRO
ரு.43,990
ALD-190DC
ரு.45,990
விசேட விலை ரு.39,990
GL-B205ALLB
ரு.56,990
விசேட விலை ரு.51,990
GL-B205ALLB
ரு.57,990
ALG-200DD
ரு.55,990
விசேட விலை ரு.49,990
GL-K292SLBB
ரு.85,990
மாற்றீடு விலை ரு.79,990
வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு
வட்டியில்லா 18 மாத கொடுப்பனவு
60 மாதங்கள் வரை வட்டியின்றிய தவணைமுறை கொடுப்பனவு
HSBC
Sampath Cards
HNB
BOC
NDB bank
Standard Chartered
SEYLAN
PAN ASIA BANK
UNION BANK
011 5 999 000
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள்
Abans

# அதிபர்கள் இடமாற்றம் தேர்தல் விதி மீறலா?

## ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கு மாகாண கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட அதிபர்கள் இடமாற்றம் தொடர்பில் தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கிலுள்ள 12 கல்வி வலயங்களிலும் பணியாற்றும் அதிபர்களுக்கான வருடாந்த இடமாற்றமானது மார்ச் மாதம் 2ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலமே வழங்கப்பட்டுள்ளது. மார்ச் மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளிலேயே அவர்களின் கைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலிற்கான அரசிதழ் அறிவிப்பு மார்ச் 2ஆம் திகதி நள்ளிரவு வெளியிடப்பட்டது. அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்களை தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதித்தால் மாத்திரமே முன்னெடுக்க முடியும். இந்த விடயத்தை கவனத்தில் கொண்டே, ஈ.பி.டி.பி. மேற்படி முறைப்பாட்டை, யாழ்ப்பாண மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் முன்வைத்துள்ளது.

'தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடனேயே இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டது' என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார். (ஒ.5,105)

# விளையாட்டு விழா

கொடிகாமம், மார்ச் 8

மட்டுவில் தெற்கு வளர்மதி மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வளர்மதி விளையாட்டு மைதானத்தில் மட்டுவில் தெற்கு வளர்மதி மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி ஜெயந்தி சசிகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் திருமதி யசோதை சரவணபவன், சிறப்பு விருந்தினராக வவுனியா கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி மாலினி புலேந்திரராஜா, கௌரவ விருந்தினர்களாக மட்டுவில் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க சிரேஷ்ட உறுப்பினர்களான திருமதி சிவபாக்கியம் வீரசிங்கம், திருமதி கனகமணி சின்னத்துரை, திருமதி பாக்கியலீலா பத்மநாதன், திருமதி செங்கமலம் தேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

இந்த நிகழ்வில் 16 தொடக்கம் 35 வயது பிரிவினருக்கும் 36 தொடக்கம் 50 வயது பிரிவினருக்கும் 50 வயதுக்கு மேற்பட்டோருக்கும் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-159)

**காணி விற்பனை**

யாழ் கந்தர்மடம் 14, கந்த புராண வீதியில் 1பரப்புக்காணி கிணற்றுப்பங்குடன் அல்லது $\frac{1}{2}$- $\frac{3}{4}$ பரப்பு சேர்ந்து வீடு கட்ட விரும்புவோருக்கு Refer Ikman.lk (Nallur)

தொடர்புக்கு:-
076 849 1738, 078 567 9674

**காணி விற்பனைக்கு**

ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம், பழம் வீதியில் உள்ள $20\frac{1}{2}$ பரப்புத் தென்னைகளுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

**076 024 1354**

**வேலையாள்கள் தேவை**

கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. (இருபாலாரும்) விரும்பத்தக்கது.

தொடர்பு:- 076 196 6600

**இரும்புக் கதவு விற்பனைக்கு**

96 சதுர அடியுள்ள இரும்புக் கதவு விற்பனைக்கு உண்டு. ஒரு சதுர அடி 2,000 ரூபா. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- 077 797 4304

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



**துரை குலநாயகம்**

கடந்த 08.02.2020 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பக் குல விளக்கு அமரர் துரைகுலநாயகம் அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இத் தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (09.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பம் சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

குடும்பத்தினர்.
077 189 4693

(IN 12773)(10)

# விடுமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 8

114 ஆவது வடக்கின் பெருந் துடுப்பாட்டப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றமையால், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை, சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் வே.துசிதரன் தெரிவித்துள்ளார். (ஒ.5,23)

# மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள் இன்று மாலை ஆறு மணிக்கு இளவாலை திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையரங்கில் நடைபெறும். செல்வி யேசுரட்ணம் சாளினி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி லேறாஜி றூபன் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ.5)

# வடக்கில் மதவாத சுவரொட்டிகள்

## தேர்தல் ஆணையத்திடம் கபே முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கில் மதவாதத்தை தூண்டும் வகையிலான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளமை குறித்து, சுதந்திரமான, நீதியான தேர்தல்களுக்கான அமைப்பான கபே, தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், அகமட் மனாஸ் மக்கீன், சைவ வாக்காளர்கள் சைவ வேட்பாளர்களுக்கே, வாக்களிக்க வேண்டும் என்று கோரும் வகையில் சுவரொட்டிகள் வடக்கில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், சாவகச்சேரி, கொடிகாமம், யாழ்ப்பாணம், நெல்லியடி, கைதடி உள்ளிட்ட பல பகுதிகளில் இந்த சுவரொட்டிகள் காணப்படுகின்றன. சிவசேனை என்ற அமைப்பே இந்த சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது, என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வடக்கின் ஏனைய பகுதிகளிலும் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஒ.5)

# பொலன்னறுவைக்குள் முடங்கிய மைத்திரி!

கொழும்பு, மார்ச் 8

பொலன்னறுவை மாவட்டமே இனிமேல் என் அரசியல் தளம். அதற்கு அப்பால் தேசிய அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கழுகு கதை கூறிய தையடுத்து, என்னை இலக்கு வைத்து சிலர் சொற்கணைகளைத் தொடுத்து வருகின்றனர். எதற்காக நான் அவ்வாறு கூறினேன் என்பது கூட தெரியாமல் குறுகிய அரசியல் நோக்கில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. ஆனால், அந்த கதையின் பொருள் பொலன்னறுவை மக்களுக்கு தெரியும்.

அதேபோல் என்னை எப்படித்தான் விமர்சித்தாலும், எனக்கு எதிராக தொடுக்கப்படும் ஒவ்வொரு தாக்குதலும் பொலன்னறுவை மக்கள்மத்தியில் எனக்கான செல்வாக்கை அதிகரிக்கவே செய்யும். அவர்கள் என்னை ஒரு போதும் கைவிடமாட்டார்கள்.

இனி இங்குதான் என் அரசியல் தொடரும். தேசிய ரீதியில் சென்று தேர்தல் கேட்கும் எண்ணம் எதுவும் இல்லை, என்றார். (ஒ.5,44)

# வடமராட்சியில் கைதானவர் 4ஆம் மாடிக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடமராட்சி கிழக்கு கேவில் பகுதியில் கடந்த 4ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி) கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் 4ஆம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவர் பழிவாங்கல் நோக்கில் கைது செய்யப்பட்டிருந்தார் என்றும், நீதிமன்றில் அவரை முற்படுத்த வில்லை என்றும் தெரிவித்து அவரது மனைவி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடுசெய்திருந்தார். இந்த நிலையில் அவர் கொழும்பு 4ஆம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,105)

## நாகபூஷணி திருமண சேவை

பதிவுக் கட்டணங்கள் யாவும் **இலவசம்**
**04.03.2020** முதல் **08.03.2020** வரை
**மணமகள்களுக்கு** மட்டும்.
பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988 உத்தரட்டாதி, செவ்வாய் 4 இல் நிரந்தர தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 711 0459**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் சதயம் 3ஆம் பாதம். 32 கி.பாவம். சூரியன். செவ்வாய் 3ம் இடம் உடைய அரச பொறியியலாளராகத் தொழில்புரியும் மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை.

**பெற்றோர் - 077 025 5934, 077 348 6008**

## தங்கப்பவுண் மீட்பு

அடைவு வைத்து மீட்க முடியாமல் அறுதியாகவுள்ள தங்கநகைகளை மீட்டு நல்ல விலைக்கு விற்று மேலதிக காசினை நீங்கள் பெற்றுக் கொள்ள நாங்கள் உதவுகிறோம்.

அழையுங்கள்:- 077 866 1605







HNB ASSURANCE | HNB General Insurance

**2020 பெப்ரவரி 14 முதல் மார்ச் 31 வரையான காலப்பகுதிக்குள் எம்முடன் காப்புறுதி செய்யும் அனைத்து மகளிர்க்கும் விசேட சலுகைகள் காத்திருக்கின்றன:**

- HNB அஸுரன்ஸிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆயுள் காப்புறுதிக்கும் (ஒரு தவணை காப்புறுதி தவிர) மேலதிகமாக ஒரு மில்லியன் ரூபாய் வரையான ஒரு வருட மேலதிக இலவச ஆயுள் காப்புறுதி
- உங்கள் காப்புறுதி ஒப்பந்தத்துடன் வைத்தியசாலை அனுமதி காப்பீட்டையும் பெற்றிருப்பின், மகப்பேற்று மற்றும் கருத்தரிப்பு தொடர்பான மருத்துவமனை செலவினத்திற்காக ஆகக்கூடியது 3 நாட்களுக்கு நாளுக்கு ஆகக்கூடியது ரூ. 10,000/- வரை காப்புறுதி நன்மைகள்
- HNB ஜெனரல் இன்ஸூரன்ஸிடமிருந்து பெற்றுக்கொண்ட மோட்டார் வாகன காப்புறுதிக்கு ரூ. 500,000/- வரையான தனி நபர் விபத்து காப்புறுதியினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்
- Durdans Hospital வழங்கும் விலைச் சலுகைகள் (1)
  - Mammogram 15%*
  - Ultrasound Breast Scan 10%**
  - Pap Smear 10%***
- Singer Plus இன் விசேட விலைக்கழிவு திட்டம் (2)
  - கையடக்க தொலைபேசிகளுக்கு 5% விலைக்கழிவு
  - ஏனைய உபகரணங்களுக்கு 10% விலைக்கழிவு
- Vision Care நாடு பூராகவும் உள்ள காட்சியறைகளில் நீங்கள் கொள்வனவு செய்யும் மூக்குகண்ணாடிகள் மற்றும் வெயிலில் இருந்து பாதுகாக்கும் கண்ணாடிகள் போன்றவற்றிற்கு 10% விசேட விலைக்கழிவு (3)
- Fashion Bug இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான முழு பெறுமதியிலும் 15% விசேட விலைக்கழிவு (4)

விதிகள் மற்றும் நிபந்தனைகள்

**HNB Assurance PLC** (PQ 108)
3ம் மாடி, ஜுஸ்லைண் பிளேஸ் செண்டர்,
இல. 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு 03.
www.hnbassurance.com
தொலைபேசி : 0114 384 384

**HNB General Insurance Ltd** (PB 5167)
A fully owned subsidiary of HNB Assurance PLC
2ம் மாடி, ஜுஸ்லைண் பிளேஸ் செண்டர்,
இல. 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு 03.
www.hnbgeneral.com
தொலைபேசி : 0114 883 883

# முச்சக்கர வண்டி பதிவுப் பத்திரத்திற்கு

சிறந்த தொகை
குறைந்த வட்டியுடன்
ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்



OD
முறைப்படி
வட்டியைச் செலுத்தல்

இன்றே தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம் 0777 391 449 | வவுனியா 0769 127 751

SINGER FINANCE

Web: www.singerfinance.com | Facebook: SingerFinance

## வேலையாள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள எமது சாரு ஸ்ரூடியோவிற்கு ஆட்கள் தேவை. (பெண்)

T.P: 077 248 7442

## விசா சேவை

போலந்து, ருமேனியா மற்றும் மலேசியா, மத்தியகிழக்கு நாடுகள், கனடா, Work Permit சகல நாடுகளுக்குமான Visit Visa நிராகரிக்கப்பட்ட விசாக்கள் விசாக்குரிய ஆவணங்கள் ஆலோசனைகள் வழங்கப்படும்.

K.K.S.Rd, யாழ்ப்பாணம்.
077 532 3379, 077 295 3667, 021 221 1385

## வீடு வாடகைக்கு

மல்லாகம் - தெ/ புன்னாலைக்கட்டுவன் வீதியில் (ஏழாலை தெற்கு) உள்ள 5 றூம் வீடு உடன் வாடகைக்குண்டு.

077 344 4801

# Cat® மின்பிறப்பாக்கிகள் மூலம் தடையற்ற மின் விநியோகம்



20 Kva முதல்

4 ஆண்டுகள் இலவச பராமரிப்பு

- சகல உதிரிப் பாகங்களும் உலகப் புகழ்பெற்ற Cat® நாமத்துடன் 70 ஆண்டுகளுக்கும் மேலான நம்பிக்கையை வென்றுள்ளது
- 4 ஆண்டுகள் வரையிலான நீடித்த சேவை
- விற்பனைக்குப் பின்னரான இணையற்ற நம்பகமான சேவை
- தொலை கண்காணிப்பு வசதி (Remote monitoring)
- பங்குகள் கையிருப்பில் உள்ளது

யுனைட் ட்ரக்டர்ஸ் அன்ட் இக்விப்மென்ட் (பிரைவேட்) லிமிட்டட்
883, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை.
ஈமெயில்: sales@ute.lk

UTE CAT
www.ute.lk

Follow us on

0763 582389

# ஐரோப்பாவில்

## உயர்கல்வியினை தொடர்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

STUDY in EUROPE | HUNGARY/LITHUANIA BELARUS

**Low Cost, No Interview, No Bank Balance & No Need IELTS**

100% வீசா உத்தரவாதம்

Visa within 10 days உடனடிப்பயணம்

ஆகக்குறைந்த கல்வித்தகைமை G.C.E (O/L)

**PAY AFTER THE VISA**

Other Services: சகல நாடுகளுக்குமான

UK | CANADA | AUSTRALIA & EUROPEAN COUNTRIES

Visit Visa / Tourist Visa / Super Visa
Refused Visa / Online Visa Application /
Embassy Appointment.

Visa பெற்றுக்கொள்வதற்கு தேவையான வங்கி பணவைப்பு (Bank Balance) மத்திய வங்கி அங்கீகாரம் பெற்ற வங்கிகளினூடாக செய்துதரப்படும்.

**EDUPATH CONSULTANT**
Professional Overseas Visa Consultant

103, Main Street, Trincomalee, Sri Lanka.
Tel : +94 77 658 3955, +94 77 222 0659
Whatsapp / Viber : +94 77 907 5593

## அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் முன்னணி பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம்

12th March'20 | 1.30 - 5.30 PM | Edlocate Jaffna @ IIS City Campus



AUSTRALIA

GO8 UNIVERSITIES
Australian National University
University of Melbourne
University of Sydney
University of New South Wales
University of Queensland
University of Adelaide
University of Western Australia
Monash University

Deakin University
RMIT University
Macquarie University
Bond University
Curtin University
Swinburne University
Flinders University
University of South Australia
Charles Sturt University
Murdoch University
Edith Cowan University
University of Tasmania
Charles Darwin University
University of Wollongong
University of Newcastle
Queensland University of Technology
Carnegie Mellon University
University of Western Sydney
James Cook University
Victoria University



NEW ZEALAND

The University of Auckland
Victoria University of Wellington
University of Otago
University of Waikato
Unitec Institute of Technology
MMIT
Southern Institute of Technology
Aspire2 International



MALAYSIA

Monash University
Swinburne University
International Medical University
Curtin University
INTI International University
Taylor's University
Manipal Academy of Higher Education
SEGi University & Colleges
University of Nottingham Malaysia



We are partnered with 75+ Universities & Institutes

Focus of the Event

- FREE Application Processing
- Information on student visa
- Post study work visa 2+ years
- Handling Student Visa FREE of Charge
- Scholarship Information

edlocate
Reach Light Beyond Borders

To Register
0772223178
ENTRANCE FREE

Edlocate Jaffna:
C/O IIS City Campus 441,
Clock Tower Road, Jaffna

பால்மாவுக்கான தேசிய தர நிர்ணயங்களை அங்கர் பூர்த்தி செய்துள்ளதாக இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) உறுதி செய்துள்ளது




- அங்கர் முழு ஆடைப் பால்மா இலங்கையின் தர நிர்ணயங்களையும் பாதுகாப்பு நியமங்களையும் பூர்த்தி செய்துள்ளதாக இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மீள உறுதி செய்துள்ளது. நியுசிலாந்தில் பால் மா உற்பத்தி செயன்முறைகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆழமான மீளாய்வுகளினூடாக இந்த உறுதிப்படுத்தலை இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) வழங்கியுள்ளது.
- அங்கர் பால்மா உற்பத்தியில் ஈடுபடும் நியுசிலாந்தின் ஃபொன்டெராவினால் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படும் சகல தயாரிப்புகளும், இலங்கையில் பால்மா தொடர்பான தேசிய நியமமான SLS 731 நியமத்தை பூர்த்தி செய்வதாக அமைந்திருப்பதாக இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) தெரிவித்துள்ளது.
- SLSI ஆய்வுகூடத்தில் SLS 731 நியமத்தை பூர்த்தி செய்வது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட எழுமாற்றான ஆய்வுகளுக்கு மேலதிகமாக, SLSI இனால் இறக்குமதி செய்யப்படும் பால் மா தொடர்பில் சர்வதேச தரம் வாய்ந்த ஆய்வுகூடங்களில் மேலதிக பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு பால் மாவில் எவ்விதமான கலப்படமும் மேற்கொள்ளப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஆய்வுகளினூடாக பாம் எண்ணெய் போன்ற இதர கொழுப்புகள் எதுவும் இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் கலக்கப்படவில்லை என்பதையும், ஃபொன்டெராவினால் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் சகல பால் மாக்களிலும் பாற் கொழுப்பு மாத்திரம் அடங்கியிருப்பதாக SLSI உறுதி செய்துள்ளது.

பல தசாப்த கால அன்னையரின் நம்பிக்கை

-DOMEX- WE DELIVER ISLANDWIDE
நாடளாவிய ரீதியிலான பொதிகள் சேவை
50 இற்கு மேற்பட்ட கிளைகள்
24 X 7 விரைவு சேவை நாடு முழுவதும்
யாழ்ப்பாணம் / கிளிநொச்சி / வவுனியா - 076 823 4610
திருகோணமலை / மட்டக்களப்பு / கல்முனை - 077 106 7810
பிராந்திய முகாமையாளர் : 077 108 2883
இணைய முகவரி : www.domex.lk
மின்னஞ்சல் முகவரி : info@domex.lk

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற முன்னணி கட்டட ஒப்பந்த நிறுவனமொன்றில் பணிபுரிவதற்குப் பின்வரும் பணியாள்கள் தேவைப்படுகின்றனர். தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தொழில்நுட்பவியலாளர் 2. கணிய அளவையியலாளர் (Quantity Surveyor)
3. களஞ்சியப்பொறுப்பாளர் 4. வாகன சாரதி (இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம்)
5. கொங்கிறீட் கல் அரிவதற்கு

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 15.03.2020 முன்பு எமக்குக் கிடைக்கக் கூடியதாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்
கேமாஸ் கட்டட ஒப்பந்த நிறுவனம்
இல.05, முத்தட்டுமட வீதி, கோண்டாவில்.
மின்னஞ்சல் முகவரி:- kmasengineering@gmail.com

MASSIVE VEHICLES AUCTION SALE



11th of March
LOLC VEHICLE FACILITY CENTRE
NO.383, MANNAR ROAD, VEPPANKULAM
VAVUNIYA
Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81
On View - 08th, 09th & 10th March
(Please refer the Udayan On 09th of March 2020 For the Full List Of Vehicles)
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME
One Country, One Auctioneer, Celebrating 178 Years of Service Excellence.
Web: www.sandslanka.com



EL-TORO இல்லத்திடமிருந்து உங்கள் இல்லத்திற்கும் அலுவலகத்திற்கும்

சூழலுக்கிசைவானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான மரத்தளபாட மாற்றீடு

உங்கள் கனவு இல்லத்தின் மரத்தளபாட தேவையை பூர்த்தி செய்யும் வகையில் Siding, Skirting, Cladding ஆகிய சூழலுக்கிசைவான சகல (Wood Substitute) மரத்தளபாட மாற்றீட்டுத் தயாரிப்புகளும் இப்போது EL-TORO இல்லத்திடமிருந்து.

ஸ்திரத்தன்மை | வேலைக்கு எளிதானது | சூழலுக்கு ஏதுவானது | கரையான் மற்றும் பங்கஸ்களிலிருந்து பாதுகாக்கும் | தீயை எதிர்க்கும்

நாடெங்கிலுமுள்ள EL-TORO காட்சியறைகளிலும், விற்பனை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம். ரூ.210/- தொடக்கம்

தரச்சான்றுகள்:
CE EUROPEAN STANDARDS SGS ISO

துரித இல.: 011 7 661 661

எல்டோரோ ரூஃபின் ப்ரொடக்ட்ஸ் லிமிடெற்.
இல.752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09, இலங்கை.
தொ.பே.: 0112 674 212 | தொ.ந.: 0112 674 214 | மின்னஞ்சல்: info@eltoro.lk
EL TORO
எதிர்காலத்திற்கான நாளைய பார்வை

## தேவை

நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள

**RVG கம்பனிக்கு**

- விற்பனை உதவியாளர்
- களஞ்சிய உதவியாளர்

- வயதெல்லை : (21 - 35) இற்கு இடைப்பட்ட (ஆண்)
- தகைமை : க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

**RVG COMPANY**
**No. 58, Nallur Cross Road,**

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தியாகராசா அரசரத்தினம்**
(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி காரைநகர்)

பிறப்பு 18.04.1942
இறப்பு 14.02.1995

இருபத் துடிப்பாக என்றும்
இருந்த எங்கள் அப்பாவே!
இயமன் உங்களைக் கவர்ந்து
இருபத்து ஐந்தாண்டுகள் மறைந்தாலும்
இதயம் முழுதும் உங்கள் நினைவில்

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் எஸ்.ஆர். **ஜெயப்பிரகாசம்**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - உடுவில்)

மறைவு
06.03.2011

எங்களுக்காகவே வாழ்ந்து எம்மை வாழவைத்த அப்பா
பொறுப்புக்கள் தீர்ந்துவிட்டது போதும் இனி வாழ்க்கை என்றெண்ணி
எம்மைத் தவிக்கவிட்டுப் போனீர்கள் ஆறவில்லை எம்மிதயம்
உயிர் உள்ளவரை எம் உள்ளத்தில் இருப்பீர்கள்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 . 06 . 1955
மறைவு 07 . 02 . 2020

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சபாபதிப்பிள்ளை நவரத்தினராசா**

அன்பு மகனாய் பாசமுள்ள சோதரனாய்
வையகத்தில் வாழ்வாங்கு வாழ
எமக்கு உறுதுணையாய் இருந்துவிட்டு
அகம் மகிழும் வேளையில் நீ முந்திக்கொண்டதேனோ?
விதியென்று வரம் தந்த இறைவா உன் சோதனையோ?
நன்றியுடன் நினைத்திடுவோம் நிதமுமுனை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை — சிறியதந்தை குடும்பத்தினர்

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தையல் நிலையத்திற்கு தையல் தெரிந்த பெண்கள் வேலைக்கு தேவை

075 353 5422

## மணமகள் தேவை

யாழ் இந்து 1977 உத்திரட்டாதி கி.பா 17 ¼. உயரம் 5'2" சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
குறிப்பு: தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: 076 449 6275

## திருமண இணைப்பு சேவை

எம்மிடம் டொக்டர், இஞ்சினியர், ஆசிரியர், வெளிநாடு (லண்டன், கனடா, பிரான்ஸ்) கிறிஸ்தவ மணமகள்மார் உண்டு. இன்றே எங்களுடன் தொடர்பு கொண்டு பொருத்தமான மணமக்களை தெரிவு செய்யுங்கள்.

K.K.S.Rd, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா
077 532 3379, 077 295 3667, 021 221 1385

## வேலைக்கு ஆள் தேவை

சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள கூல்பாருக்கு சமையலாளர், உணவு பரிமாறுவோர் ஆகியோர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 863 0268

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் **Hotel** ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- சமையலாளர் (ஆண். பெண் இருபாலாரும்)
- **Tea Maker** (ஆண்)
- உணவு பரிமாறுபவர்கள் (ஆண். பெண் இருபாலாரும்)

மருத்துவச்சான்றிதழ் பெற்றவர்கள் விரும்பத்தக்கது

தொடர்பு - 077 623 8129

## உணவகம் விற்பனைக்கு

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் உணவகம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 9938348

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பாமா குளிகை - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி. இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிகை
இந்த எண்ணெயைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

புதிய பிரிவுகள் - 25

- Diploma in English / Spoken English
- Diploma in Ms-Office / ICT

ஆரம்பம்:- 14,15 - 03 - 2020
சனி, ஞாயிறு 10.00 Am

- காலம்: 3 மாதங்கள் - அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

**Diploma in Teaching English (பிரிவு - II)**

- க.பொ.த (சா/த) தகைமை
- விரிவுரை காலம் : 6 மாதங்கள்
- பயிற்சிக் காலம் 6 மாதங்கள் சம்பளத்துடன்
- அரச / தனியார் துறை வேலைவாய்ப்புக்கள்

ஆரம்பம் 12,15 - 03 - 2020

**IELTS** (Academic/ General)
**IELTS** LIFE SKILLS A1

- வெளிநாடுகள் செல்வோருக்கானது.
- பிரத்தியேக/ குழு வகுப்புக்கள்.
- சிறப்புத் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்கள்

ஆரம்பம் 15.03.2020 10.00Am

**IPS** to your future
யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229, 077 602 1794

## மரண அறிவித்தல்

### சிவஞானசம்பந்தபிள்ளை கந்தப்பசேகரம்
(வர்த்தகர்)



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடியை பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசம்பந்தபிள்ளை கந்தப்பசேகரம் அவர்கள் கடந்த (06.03.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானசம்பந்தபிள்ளை சிவபாக்கியம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும். காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமி திருவருட்சக்தி அம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கிருபாலினியின் அன்புக்கணவரும் சிவஞானம் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர். கோப்பாய் பிரதேச செயலகம்). சிவச்செல்வி (ஆசிரியை. யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்) சிவரூபன் (இளநிலை நிறைவேற்றுனர் செயலாற்றுகைப்பிரிவு. செலிங்கோலைப் தலைமைக்காரியாலயம் - கொழும்பு). சிவகஜன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்). சிவலக்ஷ்மன் (மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும். பிரபாகரன் (ஆசிரியர் - யா/சிதம்பராக்கல்லூரி. வல்வெட்டித்துறை) அவர்களின் அன்பு மாமனாரும் அஸ்விகாவினுடைய அன்புப்பேரனும். கருணாகடாட்சி. சந்திரசேகரம் (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான குகஞானாம்பாள். சதானந்தசிவம். சிவப்பிரகாசம். விஜயரட்ணம். குமாரசுவாமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மங்கயற்கரசி. ஸ்ரீகாந்தன் (முன்னாள் இ.போ.ச வடபிராந்திய பரிசோதனை முகாமையாளர்)' தேவகி. தயாபரி குமுதினி. விஜயலட்சுமி. கௌரி மற்றும் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா. சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு. சூரியகுமாரன் மற்றும் சந்திரமோகன் ஆகியோரின் சகலனும் யமுனாமலரின் உடன்பிறவாச் சகோதரனும் நகுலேஸ்வரி - தயாசிவம். நித்தியானந்தன். ரதிதேவி - ஸ்ரீகாந்தா. ஸ்ரீஸ்காந்தன் - பகவதி. கலாதேவி - சண்முகானந்தன். சியாமளாதேவி - பவளநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும். சிவசங்கர் (நிர்வாக இயக்குநர் - சங்கரா தொழில்நுட்ப நிறுவனம்) - சிவதேவி. Dr. கோபிசங்கர் (என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலை) - நிலானி. Dr.உமாசங்கர் (பேராசிரியர் றொவான்ஸ் பல்கலைக்கழகம் நியுயோர்க் அமெரிக்கா) - பத்மரூபி. Dr.உதயசங்கர் (சிரேஷ்ட விரிவுரையாளர் மொரட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ரவிச்சந்திரன் - ஜெயவதனி(கனடா). ஸ்ரீசுகந்தி - சதீஷ்(கனடா). சிவச்சந்திரன் - கம்ஷா (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையாரும் அஸ்னா . விதுசன். அஸின். லஸனன். கிஷானன் ஆகியோரின் சிறிய பாட்டனாரும் ரமணன். மயூரன். செந்தூரன் - தர்மிஷா. பிரமகீதை. பிரமாட்சரன் ஆகியோரின் பெரிய தந்தையாரும். ஜனகரூபன் - தர்சிகா. ஜங்கரன் - அனோஜா. பரதகுமரன். கங்காசுதன் - பிரவீனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் பத்தினிப்பிள்ளையின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கைதடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவில் வீதி, கைதடி தெற்கு, கைதடி

தகவல்:- குடும்பத்தினர்.
தொடர்பு:- 077 716 4613

MÄGA
the saga of quality construction

# போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் தேவை

மாக இன்ஜினியரிங் கம்பெனி (MAGA ENGINEERING) வடக்கு மாகாணத்தில் மேற்கொண்டு வரும் சாலை அபிவிருத்தித் திட்டம் தொடர்பான பணிகளுக்கு போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கான விலை கோரல்

கீழ் காணும் பொருட்களை அவை இருக்கும் இடங்களில் இருந்து நிர்மாணப்பணிகள் நடைபெறும் இடங்களுக்கு அவைகளின் எடை மற்றும் கியுப் (CUBE) அல்லது மீடர் கியுப் ($m^3$) அடிப்படையில் போக்குவரத்து செய்வதற்கு நீங்கள் அறவிடும் கட்டணங்களை (போக்குவரத்து கட்டணம் மாத்திரம்) எமக்கு தெரிவிக்கவும்.

நீங்கள் பயன் படுத்தும் வாகனங்களின் வகை, தயாரிப்பு வருடம், பதிவு இலக்கம், கொள்ளளவு எடை, வாகனத்தின் உயரம், நீளம் மற்றும் அகலம் (கன அடி அளவு) போன்ற தகவல்களையும் எமக்குத் தருவது கட்டாயமாகும்.

**போக்குவரத்து கட்டணம் (ஒரு கியுப் (CUBE) ஒரு கிலோ மீட்டருக்கு போக்குவரத்து செய்வதற்கான கட்டணம் இலங்கை ரூபாயில்)**

1. பேஸ் கோஸ் (ABC)
2. கொங்க்ரீட் கற்கள் ¾
3. கருங்கல் (Boulders)
4. மதில்களுக்கான கருங்கற்கல் 6"x4", 6"x9"
5. மணல் மற்றும் கற்தூள்
6. மண்
7. தார் காபட் (Asphalt Materials) (டொன்களில் (TON))

மேற்படி விபரங்களுடன் கூடிய விண்ணப்பத்தை தயவு செய்து 14-03-2020 திகதிக்கு முன் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Deputy General Manager (Construction)
MAGA Engineering (Pvt) Ltd
200, Nawala Road, Narahenpita, Colombo 05

தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: நிஹால் ரத்னசேன
தொலைபேசி : 773 957 059 மின்னஞ்சல் : wndr@maga.lk

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

## வீடு வாடகைக்கு

யாழ்.இந்துக்கல்லூரிக்கு மிக அருகில் 831/34. கே.கே.எஸ்.வீதியில் மூன்று அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு அரச உத்தியோகத்தர் அல்லது தனியார் குடும்பத்துக்கு கொடுக்கப்படும்.

**021 222 1781**

## Jaffna College Institute of Agriculture Registered with Tertiary and Vocational Education Commission under P25/0026

**விவசாய உற்பத்தித்தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாபாடநெறிக்கு விண்ணப்பம் கோரல் -2020**

**Diploma in Agricultural Production Technology (NVQ 5 or 5 and 6)**
**ஆங்கிலமொழி மூலம் /English medium**

**பயிற்சிநெறிக்காலம்**

ஒன்றரை/ இரண்டரை வருடங்கள் (ஆறுமாதகால தொழிற்பயிற்சி உள்ளடங்கலாக)

**அனுமதி பெறுவதற்கான தகைமைகள்**

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ஆங்கிலமொழி அறிவு (க.பொ.த. (சா.த.)/ சமமான ஏற்றுக் கொள்ளக் கூடிய தகைமை )
அத்துடன் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் அல்லது தொழில்நுட்பவியல் துறை அல்லது விவசாயப் பாடத்தினைக் கற்று அப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

விவசாயத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமை **(NVQ Level-4)** பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பயின்று சான்றிதழைப் பெற்றுக்கொண்டவிண்ணப்பதாரிகள்.

**வயது எல்லை**

விண்ணப்பதாரிகள் 18 வயது தொடக்கம் 35 வயதுவரை

தங்களின் சுயவிவரக் கோவையுடன் அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 2020.03.24 ஆந் திகதிஅல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் **"விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பம்"** எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.
நேர்முகத் தேர்விற்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளிற்கு அவர்களின் சுயவிவரக்கோவையில் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு / மின்னஞ்சல் முகவரிக்கு அதுதொடர்பாக தெரியப்படுத்தப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்புவதற்கு / மேலதிக தகவல்களுக்கு**

**Principal**
**Jaffna College Institute of Agriculture,**
**Maruthanarmadam, Chunnakam,**
**Email :** *jcinstituteofagriculture@gmail.com*
**Tel : 021 224 1420,**

(CS31719)(II.17)

E/S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

PFIRC **பிரசாந்த்** குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

36 & 36A, Velachery Main Road,
Velachery, Chennai - 600 042,
Tamilnadu, INDIA

INTERNATIONAL ACCREDITED CLINIC



medicare

**இலவச மருத்துவ ஆலோசனை முகாம்!**

6, 7, 8 MARCH 2020 — கொழும்பு B.M.I.C.H, Stall No. BP-2

20, 21, 22 MARCH 2020 — யாழ்ப்பாணம் Veerasingam Hall, Stall No. L1

பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் கலந்து கொள்ளும் இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

குறைந்த கட்டண ஐவிஎப் சிகிச்சை!

27 ஆண்டுகளாக இலங்கைத் தம்பதிகளின் நம்பிக்கையைப் பெற்று குழந்தைக் கனவை நனவாக்கி, உலகளவில் சிறப்பு அங்கீகாரங்களைப் பெற்ற பிரசாந்த் மருத்துவமனை!

மகப்பேறின்மை பிரச்சனைகளுக்கான உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார். ஆலோசனைகளைப் பெற்றுப் பயனடையுங்கள்!

**முன்பதிவுக்கு:**
**07601 55881**



**பிரசாந்த்**
மருத்துவமனை தகவல் மையம்
ரோயல் மருத்துவமனை
62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
infopfrcsl@gmail.com www.pfrcivf.lk

**உலக மகளிர் தினத்தை முன்னிட்டு குழந்தையின்மைக்கான அதிநவீன சிகிச்சைகளுக்கு மாபெரும் சிறப்புச் சலுகைகள்!!**

விபரங்களுக்கு:
**075 40000 12**

## மலேசியாவில்

உயர் கல்வியை தொடர ஆசைப்படுபவரா நீங்கள்?

**MASTER OF EDUCATION**
(Educational Leadership & Management)

SEGi University & Colleges

**Duration: 1.5 YEARS**



**UGC APPROVED**

பதிவுகளுக்கு கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

0112761969 (General)
0761666630 (Chamila)

Braintree campus
142 3rd floor, Galle Road, Dehiwala.
(Opposite to concord cinema)

## ஆசியாவின் நம்பிக்கையின் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பிம்புத் பைனான்ஸ் பிஎல்சி



தயா குழுமத்தின் அங்கத்துவ நிறுவனங்களில் ஒன்றான பிம்புத் பைனான்ஸ் பி.எல்.சி 2019ஆம் ஆண்டுக்கான ஆசியாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய நிறுவனம் என்ற விருதினை சுவீகரித்துள்ளது. அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக முத்திரை ஆலோசனைக் கூட்டுத்தாபனத்தால் இவ் விருது வழங்கப்பட்டுள்ளது. இந் நிறுவனம் ஒரு பல்தேசிய வர்த்தக ஆலோசனை மற்றும் சந்தை ஆய்வு நிறுவனமாகும்.

ஆசியா முழுவதிலும் இருந்து பல்வேறு தொழில்துறைப் பிரிவுகளைச் சார்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட கம்பனிகளில் மிகவும் நம்பிக்கைக்குரிய கம்பனிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 50 கம்பனிகளில் ஒன்றாக பிம்புத் பைனான்ஸ் பிஎல்சி தெரிவு செய்யப்பட்டுள்ளது.



நடப்பாண்டின் சந்தை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு வித்தியாசமான தொழில்துறை வகைப்படுத்தல்களின் அடிப்படையில் ஆசியாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய நிறுவனாங்கள் தெரிவு செய்யப்படுகின்றன. தமது நேர்மைக்கு பங்கம் ஏற்படாத வகையில் பிரத்தியேகமான முறையில் செயத்திறன் மிக்க சேவையூடாக சமுகத்தை வழி நடத்துவதில் பெரும் பங்காற்றிய சாதனைகளுக்கான அங்கீகாரமாகவே இவ் விருது வழங்கப்படுகிறது.

இக்கீர்த்திமிக்க கூட்டாண்மை விருதை வென்ற பிம்புத் பைனான்ஸால் அதன் ஒட்டு மொத்த சந்தைப் பெறுமதி, உற்பத்திகள், சேவைகளின் தரம், தொழில் செய்யும் இடத்தின் கலாசாரம், புத்தாக்கம், தலைமைத்துவம், வர்த்தக விழுமியங்கள், சமூக பொறுப்பு, நற்பெயர் மற்றும் இதரகாரணாங்களை அடிப்படையாகக் கொண்டதுடன் ஆக்கபூர்வத்தன்மை உழைப்பு, வெற்றி மற்றும் பொறுப் புணர்வு என்பன பாராட்டப்படும் விடயங்களாகவும் அவதானிக்கப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிப்பதின் ஊடாக வழங்கப்பட்ட தேசத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பிம்புத் பைனான்ஸ் பிஎல்சி ஆனது கடந்த பதின்மூன்று வருடங்களாக நாடளாவிய ரீதியில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கிளைகளுடன் நிதியியல் சார் தீர்வுகளை வழங்குகிறது.

பிம்புத் பைனான்ஸ் நிறுவனத்தின் பிரதித்தலைவரும் வெற்றிகரமான இளம் முதலீட்டு ஜாம்பவானுமான திரு.சமந்திர கமகேயின் தந்திரோபாய முகாமைத்துவ ஆலோசனைக்கமைவாகவும் வங்கி மற்றும் நிதியியற் துறையில் சிறந்த அனுபவமும் பாண்டித்தியமும் கொண்ட கலாநிதி பத்மநாதன் நிரஞ்சனின் வழி நடத்தலிலும் தேர்ச்சிபெற்ற முகாமைத்துவ குழாமின் ஒத்துழைப்புடன். தற்போதைய சவால்களுக்கு முகம் கொடுத்து மூலதன சந்தையில் ஸ்திரமான இடத்தை இந் நிறுவனம் பெற்றுள்ளது.

## ஈடு வைத்து மீளப்பெறமுடியாத உங்கள் நகைகள்

## உங்களுக்கே திரும்ப பெறுவதற்கு ஓர் அரிய

## சந்தர்ப்பத்தை வழங்க காத்திருக்கின்றோம்.

**தொடர்பு:**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, கல்முனை, பருத்தித்துறை, சாவகச்சேரி, புதுக்குடியிருப்பு, சுண்ணாகம், செங்கலடி, முல்லைத்தீவு, றாகல, ஹட்டன், தலவாக்கலை, நாவலப்பிட்டி, மாத்தளை, கம்பளை

**0777 947 120**

## வேலையாள் தேவை

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்துக்குப் பட்டதாரி **Trainee** கணக்காளர் ( **Trainee Accountan**) தேவை. (**A/L** ம் கருத்தில் கொள்ளப்படும்)

**மற்றும் கடை வேலைக்கு விற்பனையாளர்கள் தேவை.**

**வயது எல்லை :- 18 - 35, ஆண்.**

**NST MOTORS (Pvt) Ltd**
179, Stanley Road, Jaffna.
**021 221 4605 / 076 717 3234**

(CS/21745)
(11,17)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

தோற்றம்
14 . 05 . 1945



மறைவு
14 . 02 . 2020

விகாரி வருஷம் மாசித்திங்கள் 2 ஆம் நாள் (14.02.2020) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி

### ஸ்ரீமதி சபாரத்தினக்குருக்கள் அலமேலு அம்மா

**(அமிர்தாம்பிகை அம்மா)**

அன்னாரின் ஞாபகார்த்தமாக நாளை (09.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எங்கள் குலதெய்வமாகிய **குளத்தடி நாச்சிமார் கோயிலடியில்** நடைபெறும் அபிஷேக பூஜை வழிபாடுகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.
குடும்பத்தினர்.

(cs31709) (.1713)

சூரியகாந்தி
உதயன்
08.03.2020
ஞாயிறு சிறப்பம்சம்





# இதுவும் கடந்து போகும்...

ஆர்.பிரகாஷ்

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது போர்க் குற்றங்கள் அரச தரப்பால் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன. எனவே ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசை விசாரணையில் இருந்து தப்பவிடக் கூடாது. மேலும்மேலும் அவகாசங்களை வழங்கக்கூடாது என்று விடுக்கப்பட்ட அறைகூவல்கள் அனைத்தும் சட்டென ஓய்ந்து, ஒழிந்து போயுள்ளன. உரோம் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடவில்லை. ஆதலால் இலங்கையைப் போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த முடியாது என்றவர் தொடக்கம், மியன்மாருக்குள் சென்று விசாரணை செய்யாதபோதிலும் மியன்மாரை ஐ.நா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஏற்றியதைப்போல் இலங்கையையும் ஏற்ற வேண்டும் என்று விளாசித் தள்ளியவர் வரையில் அனைவரும் தற்போது மௌனித்துள்ளனர். காரணம் தேர்தல் திருவிழா!.



> சிங்கள அரசியல்வாதிகள் தமது மக்களிடம், படையினரை காட்டிக் கொடுக்காமல், ஐ.நாவுக்கு அடிபணியாமல், இறைமை அதிகாரத்துடன் முன்னோக்கிச் செல்லவும், அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் எமக்கு வாக்கிடுங்கள் என்று விளாசுவார்கள்.

**முழுக் கவனமும் தேர்தல் பரப்புரையில்**

இறுதிப்போரில் இடம்பெற்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு ரணில் அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. இந்த இணை அனுசரணையின் மூலம் நாட்டை ரணில் தரப்புக் காட்டிக் கொடுத்துவிட்டது என்று முழங்கித் தள்ளி ஜனாதிபதித் தேர்தலில் இமாலய வெற்றி பெற்ற கோத்தாபய, மிகச் சமீபத்தில் இலங்கை அரசு வழங்கிய இணை அனுசரணை என்ற தீர்மானத்தில் இருந்து விலகுகின்றோம் என்று அறிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் தமக்குக் கிடைத்த வெற்றியின் மூலம் தீர்மானத்தில் இருந்து விலகும் அதிகாரத்தை மக்கள் தமக்குத் தந்துள்ளனர் என்று தெரிவித்த கோத்தாபய அரசு, ரணில் தரப்பினர் எவருடனும் எந்தக் கலந்துரையாடல்களையும் நிகழ்த்தாது, நாடாளுமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றாது, அமைச்சரவையில் அங்கீகாரம் பெறாது இணை அனுசரணையை வழங்கியிருந்தது என்றும் ஐ.நாவில் குற்றஞ்சாட்டியது. தமது வெற்றியின் மூலம் இணை அனுசரணையில் இருந்து விலக முடியுமென்றால், ரணில் அரசு 2015ஆம் ஆண்டு பெற்ற வெற்றியின் மூலம் ஏன் இணை அனுசரணை வழங்கத் தீர்மானிக்க முடியாது என்பது கோத்தாபய அரசுக்கே வெளிச்சம். எனினும் இன்னும் ஒரு வாரத்தில் தமிழர்களும் ஐ.நாவும் இங்குள்ள பேரினவாத அரசியல் தலைவர்களுக்கும், தமிழ் அரசியல் பிரமுகர்களுக்கும் மிகவும் தேவை.

**நாம் பகடைகள்**

பொதுத் தேர்தல் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இடம்பெறும் என்று திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான வேட்பாளர்கள் தொடர்பில் தற்போது பரிசீலனைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் சரியாக ஒரு வாரத்தில் எவரெவர் போட்டியிடவுள்ளனர் என்று தெரியவந்துவிடும். அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபை, தமிழர்கள், போர்க் குற்றம், விசாரணை, இறைமை என்ற சொற்பதங்கள் இலங்கைத் தீவு முழுவதும் சூழ்ந்திருக்கும். போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்தி, இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவும், அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும், அபிவிருத்திகளை மேற்கொள்ளவும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கவும் எமக்கு வாக்கிடுங்கள் என்று தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் முழங்கித் தள்ளுவார்கள். மறுமுனையில் சிங்கள அரசியல்வாதிகள் தமது மக்களிடம், படையினரைக் காட்டிக் கொடுக்காமல், ஐ.நாவுக்கு அடிபணியாமல், இறைமை அதிகாரத்துடன் முன்னோக்கிச் செல்லவும், அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் எமக்கு வாக்கிடுங்கள் என்று விளாசுவார்கள். இலங்கையில் தேர்தல்கள் என்றால் இந்த வகையறாப் பரப்புரைகள் இயல்பானவை என்றாகிவிட்டன. அதிலும் பொதுமக்கள் முன்னணி ஒருபடி மேல் சென்று இனவாதக் கக்கல்களை வெளிப்படையாகவே மேற்கொள்ளும். ஜனாதிபதிக்கு ஏற்ற பிரதமர் வேண்டும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தால்தான் நாடாளுமன்றத்தில் எம்மால் தனித்துச் செயற்பட முடியும் என்று தற்போதே வலியுறுத்திவரும் பெரமுன, ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றியைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது உறுதியே. ரணில் தரப்புக்குள் எழுந்துள்ள குழப்பம் பெரமுனவுக்கு இன்னும் பலம் சேர்க்கும்.

**இதுவும் கடந்து போகும்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்த வருடத்துக்கான அமர்வு ஜெனீவாவில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கு இலங்கை தொடர்பான பேச்சுக்கள் முடிந்துவிட்டனவே தவிர அமர்வு இன்னும் முடியவில்லை. இலங்கை இணையனுசரணையில் இருந்து விலகியபோது ஓரளவு எதிர்ப்பை வெளிப்படுத்திய தமிழர் பிரதிநிதிகள் தற்போது அடங்கிவிட்டார்கள். அவர்கள் தேர்தலில் 'பிஸி'யாகி விட்டார்கள். வேட்பாளர்கள் விவரம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் மீண்டும் பேசத் தொடங்குவார்கள். இந்தக் கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று, அரசியல் உரிமைகளை வென்றெடுக்க... ஐ.நாவில் இலங்கையைப் பொறுப்புக்கூறச் செய்ய... இலங்கைக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணையை நடத்த... மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க... அபிவிருத்திகளை மேற்கொள்ள... என்றவாறாக அவர்களின் முழக்கங்கள் காதைப் பிளக்கும். ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் முடிந்தபின்னர் அவர்கள் மீண்டும் மௌனிப்பார்கள். மறுமுனையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தம் உறவுகளைத் தேடி அலைவது தொடர்கதையாகும், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி எம் உறவுகளின் போராட்டம் நீண்டுசெல்லும், காணி விடுவிப்புக் கோரிக்கைகள் மேலும்மேலும் தொடரத்தான் செய்யும்.

எம் தமிழ்ப் பிரதிநிதிகள் மீண்டும் பேசத் தொடங்குவார்கள், உரத்துக் குரல்கொடுப்பார்கள். ஆனால் அதற்கு நாம் அடுத்த தேர்தல் வரையில் காத்திருக்க வேண்டும். இதுவும் கடந்துபோகும் என்று இருப்பதைத் தவிர வேறு என்ன செய்வது?



> அரசியல் உரிமைகளை வென்றெடுக்க... ஐ.நாவில் இலங்கையைப் பொறுப்புக் கூறச் செய்ய... இலங்கைக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணையை நடத்த... மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க... அபிவிருத்திகளை மேற்கொள்ள... என்றவாறாக அவர்களின் முழக்கங்கள் காதைப் பிளக்கும். ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் முடிந்தபின்னர் அவர்கள் மீண்டும் மௌனிப்பார்கள்.

---

## வைன் கோப்பைகளில் வழியும் இரத்தம்...

■ எஸ்.சிவசேகரன்



*ஏழுதீவுகளிலிருந்தும்*
*எட்டுப்பேர்கள் வந்திருந்தார்கள்*
*ஒன்பதாவது கிரகவாசிகளைப்போல*
*பத்துவிரல்களிலும் பயங்களை ஏந்தியபடி..*

*யார் நீங்கள்?*
*“நாங்கள் பவித்திரர்கள்”*

*ஏன் வந்தீர்கள்??*
*“உங்களை பரிசுத்தப்படுத்த..” என்றபடி*
*வரவேற்பறையை உடைத்து*
*பரிசுத்தமாக்கினார்கள்*

*பரிசுத்த வசனங்களை*
*ஏகோபித்தபடி பாடிக்கொண்டு*
*கிழித்தெறிந்தார்கள்*
*எங்கள் திருப்பாடல்களை..*

*பின்னர்*
*எங்கள் புனிதத்தை எரித்து*
*பரிசுத்தக் கொடியை நாட்டினார்கள்*

*பாவப்பிறவியை பரிசுத்தப்படுத்திய*
*அந்த மகாவேள்வியின் முடிவில்*
*பரிமாறப்பட்ட கோப்பைகளில்*
*நிரம்பி வழிவது என்ன??*



> ஜெனீவாத் தீர்மானத்தில் இருந்து விலகியதன்மூலம் நாம் புலம்பெயர் புலிகளைத் தோற்கடித்துள்ளோம்.
>
> படையினரைக் காப்பாற்றியுள்ளோம்.
>
> கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றியுள்ளோம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய முழுமையான செவ்வி இங்கே பிரசுரமாகியுள்ளது.

## மனித உரிமை பேரவையில் இருந்து

# அமெரிக்கா விலக முடியுமானால் எம்மால் ஏன் முடியாது?

தமிழில்
எம்.ஐ.முபாறக்

**கே**: சுதந்திர கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து கூட்டமைப்பு உருவாக்கியமைக்கு மஹிந்த ராஜபக் ஷவின் விசுவாசிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அது ஏன்?

**ப**: ஆம்..அப்படியோர் எதிர்ப்பு எமது கட்சிக்குள் உள்ளது. கடந்த ஆட்சியில் எம்மை சிறையில் தள்ளியவர்களுடன் கூட்டமைப்பு அமைத்திருக்கின்றோம் என்ற கருத்து எங்களது கட்சிக்குள்ஆதரவாளர்கள் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் உண்டு. நாம் செய்யாத குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டோம். சுமார் 80 முதல் 90 பேர் அளவில் இவ்வாறு தண்டனையை அனுபவித்தோம். என்னை மூன்று தடவைகள் சிறையில் தள்ளினார்கள். அத்தனையும் அரசியல் பழிவாங்கல்கள். அந்தக் கவலை எமது ஆதரவாளர்களுக்கு உண்டு. அவர்கள் இந்தக் கூட்டமைப்பை எதிர்க்கத்தான் செய்கிறார்கள். ஆனால், எமது பிரதான அரசியல் எதிரியார் என்று பார்த்தே நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அதையே நாம் செய்து வருகிறோம். அதன் அடிப்படையிலேயே இந்தக் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளோம்.

**கே**: இருந்தாலும், பலமான ஒருவருடன் அல்லவா கூட்டணி அமைக்க வேண்டும். ஆனால், நீங்கள் பலவீனமான மைத்திரிபால சிறிசேனவுடன் அல்லவா கூட்டணி அமைத்துள்ளீர்கள்.?

**ப**: எமது பிரதான அரசியல் எதிரிகள் யாரென்று பார்த்தே நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டமைப்பே எமது பிரதான எதிரி.

அந்தக் கூட்டமைப்பில் உள்ளவர்களை பாருங்கள். ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் மற்றும் சம்பந்தன் போன்ற இனவாதிகளும் பிரிவினைவாதிகளுமே அதில் உள்ளனர். இவர்களிடம் இருந்து எமது அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டியது கட்டாயம். எமது கூட்டமைப்பில் உள்ளவர்கள் இப்படியான இனவாதிகள் அல்லர். நாட்டை நேசிப்பவர்களே உள்ளனர்.

மைத்திரி போன்ற தனிப்பட்ட ஒருவரை வைத்து அரசியல் தீர்மானங்களை எடுக்க முடியாது. எமது அரசியல் எதிரிகளை வைத்தே முடிவெடுக்க வேண்டும். அந்த முடிவையே நாம் எடுத்துள்ளோம். எமது கூட்டமைப்பைப் பார்த்தால் அது புரியும்.

**கே**: ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் அரசுக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை இருக்கவில்லை. இந்த நிலையில், ஏன் நீங்கள் அரசை அமைத்தீர்கள்?

**ப**: ஜனாதிபதித் தேர்தல் முடிந்தகையோடு நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதற்கே நாம் விரும்பி னோம். ரணில் விக்கிரமசிங்க அதற்கு உடன்பட்டார். ஆனால், சஜித் தரப்பு மறுத்துவிட்டது. மஹிந்த பிரதமராக் கப்படுவார் என்ற எதிர்பார்ப்பில்தான் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாவுக்கு வாக்களித்தனர். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காகவும் நாம் சிறுபான்மையைக் கொண்டு அரசை அமைத்தோம்.

இது ஒருபுறமிருக்க, நாம் அரசை அமைக்காவிட்டால் கோட்டா தனிமைப்படுத்தப்படுவார். அந்தப் பக்கம் அரசு. இந்தப் பக்கம் ஜனாதிபதி என்ற நிலை இருந்தால் நாட்டுக்கே ஆபத்து. மக்களுக்கு சேவை செய்ய முடியாது. கடந்த ஆட்சியில் நாம் அதைப் பார்த்தோமே.

**கே**: ஆட்சி அமைத்து இந்த மூன்று மாதங்களில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லையே. கடந்த ஆட்சிபோலவே இதுவும் செல்லுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறதே?

**ப**: நாங்கள் கொடுத்த வாக்குறுதிக்ளில் எதை நிறைவேற்றவில்லை? பல முக்கியமான தீர்மானங்களை எடுத்துள்ளோம். அரச கட்டமைப்பைப் பலப்படுத்தியுள்ளோம். ஜனாதிபதி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளார். பதவிக்கு வந்து 24 மணி நேரத்தில் அதைச் செய்தார். நாட்டு மக்கள் சுதந் திரமாக வாழும் நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். கடந்த அரசு நான்கரை வருடங்களாக பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கவில்லை. ஆனால், ஜனாதிபதி 45 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். அதற்கான நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

அதுமட்டுமா? சாதாரண தரம் சித்தி அடையாத ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவாத் தீர்மானத்தில் இருந்து விலகுவதற்காக 69 லட்சம் மக்கள் கோட்டாபாய ராஜபக் ஷவுக்கு வாக்களித்தனர். அவர்களின் அந்த வேண்டுகோளை நாம் நிறைவேற்றியுள்ளோம். புலம்பெயர்ந்து வாழும் புலி ஆதரவாளர்களுக்கு பயந்து நாம் அந்தத் தீர்மானத்தோடு ஒத்துப்போகவில்லை. நாடாளுமன்றில் நாங்கள் சிறுபான்மையாக உள்ளோம். அங்கு முக்கியமான தீர்மானங்களை எடுக்கமுடியாமல் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கடன்களை அடைப்பதற்காக நாம் நாடாளுமன்றில் வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது அதை அக்கட்சி எதிர்த்தது. அதையும் தாண்டி பல சேவைகளை செய்து வருகிறோம்.

**கே**: மஹிந்த இந்தத் தேர்தலில் எந்த மாவட்டத்தில் போட்டியிடுவார்?

**ப**: 2015 இல் குருநாகலில் போட்டியிட்டார். இந்த முறையும் அந்த மாவட்டத்திலேயே போட்டியிட வேண்டும் என்று ஜோன்சன் பெர்னாண்டோ அழைப்பு விடுத்திருக்கிறார். அதேபோல், மேலும் பல மாவட்டங்களில் இருந்தும் அழைப்பு வருகின்றது.

எந்த மாவட்டத்தில் போட்டியிட வேண்டும் என்று மஹிந்தவால் தீர்மானிக்க முடியாது. அதைக் கட்சியே தீர்மானிக் கும். இருந்தாலும், இந்த முறையும் மஹிந்த குருநாகலில் போட்டியிடும் வாய்ப்பே அதிகம் உண்டு.

**கே**: சஜித் இம்முறை ஹம்பாந்தோட்டையில் போட்டியிடமாட்டார் என்று சொல்லப்படுகிறது. ஹம்பாந்தோட்டையில் போட்டியிடும் உங்களுக்கு அது சாதகம் அல்லவா?

**ப**: இல்லை. அது ஒரு சோம்பேறித்தனமான போட்டியாக இருக்கும். போட்டிக்கு சரியான ஆள் இல்லாவிட்டால் போட்டி சுவாரசியமாகவும் சவால்மிக்கதாகவும் இருக்காது. சஜித் ஹம்பாந்தோட்டையில் போட்டியிட வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். அவரது ஹம்பாந் தோட்டை ஆதரவாளர்களும் அதையே விரும்புகிறார்கள்.

நான் அவரைத் தனிப்பட்ட முறையில் அழைக்கிறேன். அவர் ஹம்பந்தோட்டையிலேயே போட்டியிட வேண்டும். நான் விடுக்கும் அழைப்பை அல்லது சவாலை அவர் ஏற்க வேண்டும். ஹம்பாந்தோட்டையில் என்னை எதிர்த்து அவர் போட்டியிட வேண்டும்.

**கே**: ஜெனீவா தீர்மானத்தில் இருந்து விலகியமை நாட்டுக்கு தேவையற்ற சர்வதேச அழுத்தத்தை கொண்டுவராதா? சர்வதேசத்துடன் மோதும் நிலையை ஏற்படுத்தாதா?

**ப**: இல்லை. இதை நாங்கள் உரிய முறைப்படியே செய்தோம். ஜனாதிபதித் தேர்தலில் எமக்குக் கிடைத்த மக்கள் ஆணைக்கு ஏற்பவே இந்தத் தீர்மானத்தில் இருந்து விலகினோம். அடுத்ததாக, நாம் இறைமையுள்ள நாடு. யாருக்கும் அடிபணிய முடியாது. மனித உரிமைப் பேரவையில் இருந்து அமெரிக்காவால் விலக முடியும் என்றால் ஏன் எம்மால் முடியாது? அவர்களுக்கு ஒரு நியாயம். எங்களுக்கு ஒரு நியாயமா?

ஜெனீவாத் தீர்மானத்துக்கு உடன்பட வேண்டும் என்பது புலம்பெயர் தமிழர்களின் நிலைப்பாடு அல்ல. புலம்பெயர் புலிகளின் நிலைப்பாடாகும். அவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப நடக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. எமக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களின் விருப்புக்கு ஏற்பவே நாம் செயற்படுவோம். புலிப் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடிய பிரிவினைவாதத்தை முறியடித்த படையினரை எம்மால் காட்டிக்கொடுக்க முடியாது. இந்தத் தீர்மானத்தில் இருந்து விலகியதன்மூலம் நாம் எமது படையினரைக் காப்பாற்றி இருக்கின்றோம். புலம்பெயர் புலிகளைத் தோற்கடித்துள்ளோம்.

**கே**: வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் போதுமான ஆதரவை உங்களுக்கு வழங்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுமா?

**ப**: அவர்கள் யுத்தத்தால் பாதிக்க்ப்பட்டவர்கள். அவர்களின் உள்ளங்களை ஒரே நாளில் வென்றுவிட முடியாது. இன்னும் காலம் எடுக்கும். ஆனால், எங்களுக்கென்று ஒரு கடமை உண்டு. அவர்களை நாம் தேசிய அரசியலுக்குள் கொண்டுவர வேண்டும். அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அனைத்தும் இனவாதக் கட்சிகளாகும். அதுதான் பிரச்சினை. அதில் இருந்து அந்த மக்களை காப்பாற்ற வேண்டும். இருந்தும், இந்த இனவாதத்துக்கு எதிராக ஒன்றரை லட்சம் தமிழ் முஸ்லிம் மக்கள் எங்களுக்கு வாக்களித்தனர். இதை எண்ணி நாம் மகிழ்ச்சியடைகிறோம். வாக்குகள் குறைந்தன என்பதற்காக வடக்கு- கிழக்கை கைவிட முடியாது. என்றோ ஒருநாள் அவர்கள். உண்மையை விளங்கி தேசிய அரசியலில் சங்கமிப்பார்கள்.

# தென்கிழக்கு திசையில் இருந்து....



அனார்கலி



## தேர்தல் திருவிழா....

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் (திகாமடுள்ள தேர்தல் மாவட்டம்) அரசியல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

இம்முறை முஸ்லிம் அரசியல் கட்சிகள் சார்பாக புதுமுகங்களும் களமிறங்கத் தயாராகி வரும் நிலையில், ஏற்கனவே இந்த மாவட்ட முஸ்லிம்கள் சார்பில் மக்கள் பிரதிநிதிகளாக இருந்து வந்த சிலர் அதன் நிலை கவலைக்கிடமாக மாறும் சூழ்நிலை தென்படுவதாக விமர்சனங்களும் எழுந்துள்ளன.

இதேவேளை இந்த மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சில அதிகாரம் கொண்ட அரசியல்வாதிகள் முஸ்லிம் பிரதேசங்களுள் அரசியல் நோக்கில் ஊடுருவவும் தொடங்கியுள்ளனர். மேலும் இந்த மாவட்டத்தின் தமிழ் பிரதேசங்களில் மழைக்கு முளைத்த காளான்கள் போல் சிலர் அரசியல் ஜாம்பவான்களாகவும் தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை கொண்டவர்களாகவும் காட்டி வலம் வரவும் தொடங்கியுள்ளனர்.

**திருவிழா திருவிழா தேர்தல் திருவிழா!!**

## சிறுபோகம்!



அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற் செய்கைக்கான ஆரம்ப ஏற்பாடுகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு ஏதுவாகப் பிரதேச செயலக ரீதியாக சிறுபோக நெற்செய்கை தொடர்பிலான முன்னோடிக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றமையுடன் விரைவில் ஆரம்பக் கூட்டங்களை நடத்திச் செய்கைக்கான விதைப்புக்குரிய கால எல்லைகளும் தீர்மானிக்கப்படவுள்ளன.

இதேவேளை மாவட்டத்தின் நீர்ப்பாசனத்துக்குப் பொறுப்பான சேனநாயக்க சமுத்திரத்தில் போதிய நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளதால் சகல விவசாயக் கண்டங்களிலும் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்படும் என விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**தை பிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம் தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம்!**



## உள்ளக அரங்கு!

கல்முனை சந்திரங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் உள்ளக விளையாட்டரங்கு நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் எச்.எம்.எம் ஹரீஸ் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியின் பயனாக 155 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த உள்ளக அரங்கு நிர்மாணப்பணிகள் இடம்பெறவுள்ளன. கல்முனை மாநகர சபைப் பிரிவில் உள்ள முக்கிய விளையாட்டு மைதானமாக சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் அக்கறையுடன் சேவையாற்றி வருவதாக பொதுமக்கள் பெரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**விளையாட்டு மைதானத்தின் முக்கியத்துவம் உணர்ந்த செயற்பாடு இது!**

## பதவிப்பிரமாணம்!

கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரியாக வைத்தியர் அர்ஷாத் காரியப்பர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து அவர் புதிய கடமையைப் பொறுப்பேற்றார்.

புதிய பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்ஷாத் காரியப்பர் வழிகாட்டலில் மாநகர சபை சுகாதாரப் பிரிவு வினைத்திறனுடன் சேவைகளை முன்னெடுக்கும் எனப் பதவிப் பிரமாண நிகழ்வில் முதல்வர் றகீப் நம்பிக்கை வெளியிட்டார்.

**அர்ப்பணிப்பான சேவையே தேவை!**

## வெள்ளரிப் பழ சீஸன்!

தென்கிழக்குப் பிரதேசத்தில் வறட்சி கோரத் தாண்டவமாடி வருவதால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இந்நிலையில் கூடிய வெப்பநிலையால் ஏற்படும் தாக சாந்திக்கு ஏதுவாக வெள்ளரிப் பழ சீஸனும் ஆரம்பமாகியுள்ளது. மட்டக்களப்பு படுவான்கரை, எருவில், களுவாஞ்சிகுடிபோன்ற பிரதேசங்களில் உள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்கள் விளைவிக்கும் வெள்ளரிப்பழங்களை ஏனைய பிரதேசங்களுக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்து வருவதில் பலர் ஈடுபட்டு நாளாந்த வருமானமும் பெற்று வருகின்றனர்.

உடல் உஷ்ணத்தைத் தணிக்கும் வெள்ளரிப் பழங்களை வாங்குவதில் பொதுமக்களும் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**தாகசாந்தி தரும் பழம்!**



## ஓரணியில் திரள்வோம்!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திகாமடுள்ள தேர்தல் மாவட்டத்தில் முஸ்லிம்கள் ஓரணியில் போட்டியிடுவதற்கான முயற்சி ஒன்று தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முஸ்லிம்கள் கட்சி ரீதியாகப் பிரிந்து நின்று போட்டியிடுவதால் முஸ்லிம் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு பிரதிநிதித்துவம் குறைவடையலாமென்ற அச்ச நிலை உருவாகியுள்ளதால் வழக்கமான நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களைத் தக்க வைக்கும் நோக்கில் இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. மாவட்டத்தில் மூத்த முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் தலைமையில் எடுக்கப்பட்டு வரும் இந்த முயற்சிக்கு முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் பச்சைக்கொடி காட்டியுள்ளன என்றும் தெரியவருகின்றது.

தேர்தலின் பின் குறுநில மன்னராக அரசோச்ச மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவர் சமூகம் சார்ந்த இந்த முயற்சி குறித்து அலட்டிக் கொள்ளாமலே செயற்படுகிறார் என இந்த முயற்சியின் சூத்திரதாரியான குறித்த மூத்த அரசியல்வாதி கவலை வெளியிட்டார்.

## வரிக் குறைப்பு!

கல்முனை மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அறவிடப்படும் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வரியை 30 வீதத்தினால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர மேயர் சட்டத்தரணி ஏ.எம். ரகீப் தலைமையில் மாநகர சபையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றின் போது மக்கள் நலன் கருதி இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் திண்மக் கழிவகற்றல் சேவைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 4 இலட்சத்து 50 ரூபாவும் மாதம் ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி 35 லட்சம் ரூபாவும் செலவிடப்படும் நிலையிலும் மக்கள் நலன் கருதி மேற்படி வரி குறைப்பு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வரிச்சுமை குறையட்டும்!**



# மாறுபட்ட வாழ்வியல் கோலங்கள்

■ உடுவிலூர் கலா

நுகர்வோர் கலாசாரத்தோடு ஒன்றித்து விட்ட இன்றைய மனிதனின் மிகப் பெரும் தேவையாக பணம் உள்ளது. பணத்தைத் தேடி ஓடிக் கொண்டிருக்கும் மனிதனோடு வணிகம் கைகோர்த்துப் பயணிக்கிறது. இதன் விளைவாக உணவு வன்முறை, சமூக வன்முறை என வன்முறைகளை அனுபவித்து, உடல் ஆரோக்கியத்தை இழக்கும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. 30 வருடங்களுக்கு முன்னர் இருந்த எமது பாரம்பரிய உணவு முறை இன்றில்லை. எல்லாமே மாற்றம் பெற்று மாரடைப்பு, நீரிழிவு, புற்றுநோய், சிறுநீரகக் கற்கள், உயர் குருதி அமுக்கம் போன்ற தொற்றா வாழ்வியல் நோய்கள் எம்மை ஆட்டிப் படைக்கின்றன.

மிகக் கொடும் நோயெனக் கருதப்படும் புற்றுநோய் இன்று வயது வேறுபாடின்றி மிகச் சாதாரணமாக பலருக்கும் ஏற்படுகின்றது. சிறுவர்களைக் கூட நீரிழிவு தாக்குகின்றது. முப்பது வயதானாலே மாத்திரைப் பொட்டலத்துடன் வலம் வருகிறான் மனிதன். எடை குறைப்பதற்கான முறைகள் இன்றைய வாழ்வியலின் கட்டாய பகுதியாகி விட்டது. இவையெல்லாம் ஏன்? இந்த நிலை எப்படி வந்தது? நாம் எதை இழந்தோம்? எப்படி மாறினோம்? எதை எம்மிடம் இருந்து யார் பிடுங்கி எடுத்தார்கள்? எப்படி வாழ்ந்தோம்? எப்படி வாழ்கிறோம்? என்பனவற்றை எல்லாம் நம்மை நாமே கேட்கவேண்டும்.

### ஆரோக்கியமற்ற இன்றைய தலைமுறை

பாரம்பரிய உணவின் சொந்தக்காரர் நாம். உணவே மருந்து என வீரமுழக்கம் இட்டவர்கள். எமது உணவு முறையினால் பண்பாடும் பாரம்பரியமும் பாதுகாக்கப்பட்டது. ஆரோக்கியம் பேணப்பட்டது. எழில் குன்றா இளமை கிடைத்தது. நோய்கள் துரத்தி அடிக்கப்பட்டன. நீண்ட ஆயுள் தக்கவைக்கப்பட்டது. ஆனால் இன்று.....? பொதியிடப்பட்ட உணவுகளும், மென்பானங்களும், வெதுப்பக உற்பத்திகளும், ஹோட்டல் உணவுகளும் நம்மை வளைத்துப் பிடித்து விட்டன. இதனால் உணவே மருந்தென வாழ்ந்த நாம் மருந்தே உணவென மாற்றம் பெற்றோம். ஆரோக்கியம் காவு கொள்ளப்பட்டு விட்டது. திரும்பும் இடமெங்கும் நோய்களின் தாக்கமும் இளவயது மரணங்களும் எம்மைக் கொன்று போடுகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் கொரோனாவின் துயரை விட கொடுந்துயரை நாம் சந்திக்கும் நிலை ஏற்படும். எனவே இடையே தொற்றிக் கொண்ட உணவு, வாழ்வியல் பழக்கவழக்கங்களில் இருந்து விடுபட்டு எமக்குச் சொந்தமான உணவு முறைக்கு நம்மை நாமே இட்டுச் செல்ல வேண்டும். இதுவே அடுத்த தலைமுறைக்கு நாம் செய்யும் பெருநன்மையாகும். தவறின், அடுத்த தலைமுறையின் மரணத்தை அருகில் இருந்து பார்க்கும் பரிதாப துர்ப்பாக்கிய நிலை இன்றைய தலைமுறைக்கு உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது என்கிற கசப்பான உண்மையை வேதனையுடன் பதிவு செய்கிறேன்.

### துரித உணவுகளால் ஆபத்து

தகரத்தில், போத்தலில், பொதிகளில் அடைக்கப்பட்ட உணவுகளில் ஊட்டச்சத்துக்கள் எவையும் இல்லை. பதப்படுத்தி நீண்டகால பாவனைக்காக சேர்க்கப்படும் இரசாயனச் சேர்வைகள் அவ்வுணவின் சத்துக்களை அழித்து விடுகின்றன. இவ்வுணவுகள் உணவுக் கால்வாய் ஊடாகப் பயணிக்கும் போது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். பழங்களைப் பழுக்கவைக்க பயன்படுத்தும் சேர்வைகளால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உண்டு. வியாபாரத்தில் அதிக வருமானம் பெறுவதற்காக வணிகம் செய்யும் உணவு வன்முறை இது.

1965 ஆம் ஆண்டு வரை சிறு தானியங்கள் உணவாக அதிகம் உட்கொள்ளப்பட்டன. சிறுதானியங்கள் ஒவ்வொன்றிலும் அதிகளவான ஊட்டச் சத்துக்கள் நிரம்பியுள்ளன. இன்று அவையெல்லாம் எங்கோ மறைந்து விட்டன. காதல் பறவைகளுக்கு (love bird) உணவாகக் கொடுக்கப்படும் தினை அன்று நம்மவரின் ஆரோக்கிய உணவாக இருந்தது. அதன் ஆரோக்கியம் காரணமாகவே காதல் பறவைகள் அழகாய் மிளிர்கின்றன. குதிரைகளின் உணவான ஓட்ஸ் இன்று எம்மக்களின் விருப்புணவாக மாறி விட்டது.

> "
> **தகரத்தில், போத்தலில், பொதிகளில் அடைக்கப்பட்ட உணவுகளில் ஊட்டச்சத்துக்கள் எவையும் இல்லை. பதப்படுத்தி நீண்டகால பாவனைக்காகச் சேர்க்கப்படும் இரசாயனச் சேர்வைகள், அவ்வுணவின் சத்துக்களை அழித்து விடுகின்றன.**

செம்பு நிறைய நீரைக் குடித்து தாகசாந்தி பெற்ற எம் சமூகம், போத்தல் நீரோடு வாழ்வை நகர்த்துகின்றது. தோட்டங்களில், வயல்களில் வேலை செய்பவர்கள் வெறும் தேநீர் குடித்து புத்துணர்ச்சி பெற்றனர் அன்று. இன்று பதினாறு விதமான சேர்வைகள் தேயிலையில் சேர்க்கப்படுவதாகப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. எல்லா உணவுகளும் கலப்படமாகவே உள்ளன. எம் கையில் இருக்கும் உணவை முகர்ந்து கவனிக்க வேண்டியது நம் கடமை. தரம், ஆரோக்கியம், சுவை என்பவற்றைத் தெரிந்து உண்ணப் பழக வேண்டும். சிறுசிறு தவறுகளால் பெரிய பெரிய நோய்கள் நம்மை வந்தடைகின்றன என்பதை நாம் உணர்வதில்லை.

அம்மா தந்த உணவில் ஆரோக்கியம் மட்டுமல்ல, அன்பும் அறமும் நிரம்பி யிருந்தது. அம்மா, மனைவி, சகோதரி என்கிற பெண் உறவுகளால் ஆக்கப்பட்ட ஆரோக்கிய உணவு வீடுகளில் ஒவ்வொரு மனிதனுக்கும் காத்திருந்தது. அவன் அதனை உண்டு ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் இருந்தான். இன்று பெண்களே உயர் ரக விடுதிகளில் முண்டியடித்து உணவு உண்டு மகிழ்கின்றனர். பணமும் நேரமும் செலவாகி, உடல் எடை அதிகரித்து நோய்களும் மிக இலகுவாக எம்மை வந்தடைகின்றன.

### பணத்தைச் செலவு செய்து நோய்களை வாங்குகின்றோம்

இன்று அழகின் தேடல் பரவலாய் உள்ளது. ஒரு வாரத்தில், ஒரு மாதத்தில் வெண்மை நிறம் தரக்கூடிய கிறீம்கள் பல கவர்ச்சிகர விளம்பரங்களுடன் விற்பனையாகின்றன. இவை அனைத்துமே இரசாயனக் கலவைகள் என்பதை புரியாது விலை கொடுத்து வாங்கி தோலுக்கு தீமையைத் தேடிக் கொள்கின்றனர். இலக்கியங்களில் பெண்களின் அழகு பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மஞ்சள், அக்காலத்திலேயே அழகுப் பொருளாக விளங்கியுள்ளது. எம் முன்னே கொட்டிக் கிடக்கின்ற ஆரோக்கிய உணவுகள் பல இருந்தும் நாம் அவற்றை ஒதுக்கி விட்டு உடலுக்கு தீங்கான மரணத்துக்கு இட்டுச் செல்கின்ற உணவைத் தேடி ஓடுவது எவ்வளவு கொடூரமானது? மேலை நாட்டவர்களுக்கு கிடைக்காத வாய்ப்புக்கள் எமக்கு கிடைத்துள்ளன. உடனடிப் பழங்களும், பச்சிலைகளும், காய்கறிகளும், சிறுதானியங்களும் நம்முன்னே போதியளவு உள்ளன.

பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து நோய்களைத் தேடுவதைவிட இவற்றை நாம் சத்துக் கெடாமல் சமைத்தும் பச்சையாகவும் உண்ணுவதன் மூலம் நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்க முடியும். நாளாந்தப் பாவனையில் உள்ள கிரைண்டர் போன்ற இயந்திரங்களை விட்டுவிட்டு அம்மி, ஆட்டுக்கல், உரல் என்பவற்றைப் பயன்படுத்தலாம். சூரிய ஒளியை சுத்தமான காற்றை தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

எம்மை நாம் முற்றிலுமாக மாற்றிக் கொள்ள வேண்டும். முதலில் உணவைப் பற்றியும், நோய்கள் பற்றியும் புரிதலும் விழிப்புணர்வும் எமக்குத் தேவை. உணவென்பது நிலத்தோடு நீரே என இந்து புறநானூறிலும் அதேபோல் உணவை எப்படி உண்ண வேண்டும் என்பதை பதின்மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆசாரக்கோவை என்னும் நூலிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. நம்மை இப்படி வாழவைத்த சமூகத்துக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் நிறைய உண்டு. அவற்றில் முக்கியமானது நலிந்து மெலிந்து போய்க் கொண்டிருக்கும் சமூகத்தை உணவு வன்முறையில் இருந்து பாதுகாத்து ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். புரிதலில்லா சமூகமாக மாறி விட்ட எம் சமூகத்தின் விழிகளை திறக்க வேண்டும். நம்மவரை பீடித்துள்ள நோய்களுக்கு தீர்வு மட்டுமல்ல அவை ஏற்படா வண்ணம் பாதுகாக்கும் வழிமுறைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். நோய்களுக்கான உண்மைக் காரணங்களை கண்டறிய வேண்டும்.

தற்போது அதிகளவான நீரிழிவு நோயாளிகள் எம்மத்தியில் உள்ளனர். இவர்கள் ஆரம்ப இடை, முழுவதுமான நிலைகளில் உள்ளனனர். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு ஏனைய நோய்கள் சுலபமாகத் தாக்கும். இவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களாகவே பெரும்பாலும் காணப்படுவர். இவர்கள் இப்படி ஆனமைக்குக் காரணம் என்ன? என்றால் இதற்கான ஒரே பதில் மாறுபட்ட உணவுப் பழக்கவழக்கங்களும் உடலுழைப்பின்மையுமே. முதலில் பதப்படுத்தப்பட்ட உணவுகளில் இருந்து மீள வேண்டும். சேர்க்கப்படும் சேர்வைகள் உணவின் தன்மையை மாற்றி பதப்படுத்துவது போல, உடலுக்குள் செல்லும் போதும் உறுப்புகளின் தன்மையை மாற்றிவிடும் என்பதைப் புரிந்து கொண்டாலே, எமக்கு நோய்நொடிகளிலிருந்து விடுதலை கிடைத்துவிடும்.

### இயற்கை உணவு முறைகளை பெற்றுக்கொள்வோம்

ஆக மாறிவிட்ட நம் உணவுமுறை பாதகமான பாரதூர விளைவுகளையே தந்து விட்டது. இன்றைய ஆரோக்கியத்தை அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு. பாரம்பரிய உணவுப் பழக்கத்துக்கு நம்மை மாற்றுவதே அதற்கான சிறந்த வழி. உடலுழைப்பை உறுதிசெய்து விட்ட தவறுகளைத் திருத்தி வாழ மனம் கொள்ள வேண்டும். நமக்கு நாமே எதிரிகளாய் இது வரை வாழ்ந்து விட்டோம். இயற்கை தந்த கொடைகளை எம் ஆரோக்கியத்துக்காக மகிழ்வுடன் பெற்றுக் கொள்வோம். மாறுபடாத மாற்றங்களுக்காய் மாறுவோமா மானிடரே.






ரிச்சர்டு கிராமத்தை சேர்ந்தவர். இரட்டை கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுச் சிறைக்கு செல்கிறார். பின்னர் பிணையில் வெளியே வரும் ரிச்சர்டு, சென்னையில் தனது நண்பருடன் தங்குகிறார். ராயபுரத்தில் இருக்கும் பதிவாளர் அலுவலகத்தில் டீ விற்று வருகிறார். அங்கே திருமணப் பதிவு விஷயத்தில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதையும் போலித் திருமணங்கள் நடத்தப்படுவதையும் கண்டுபிடிக்கிறார். இதற்கு அரசு அதிகாரியான பதிவாளரும் உடந்தை என்பதால் இந்தக் குற்றத்தைப் பொறி வைத்துப் பிடிக்க ரிச்சர்டு திட்டமிடுகிறார். இந்தச் சூழலில் போலி திருமணங்கள் செய்து வைக்கும் நபர்களைக் கொன்று அதன் வீடியோக்களை பொலிஸுக்கு அனுப்பி வைக்கிறார். இதையடுத்து ரிச்சர்ட் என்ன செய்தார்? அவர் மனைவி திரௌபதிக்கு என்ன ஆனது? திருமண மோசடிகளுக்கு அவர் தீர்வு கண்டாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.



ரிச்சர்டுக்கு படத்தையே தாங்கும் கதாபாத்திரம். பொறுமை, ஆக்ரோஷம் இரண்டையும் காட்டும் கதாபாத்திரம். நடிப்பில் வித்தியாசம் காட்டுகிறார். அவரது மனைவியாக வரும் ஷீலா ராஜ்குமார் சிறப்பான நடிப்பு. சமூகத்துக்காக அவர் பேசும் வசனங்கள் கைதட்டல்கள் வாங்குகின்றன. சின்ன கதாபாத்திரத்தில் வந்தாலும் கருணாசுக்கு நிறைவான வேடம். மற்ற கதாபாத்திரங்களும் சிறப்பான பங்களிப்பை கொடுத்துள்ளார்கள்.

பொய்யான காதலை எதிர்க்கிறேன் என்று ஒட்டு மொத்த காதலர்களையும், காதலையும் கொச்சைப்படுத்தி இருக்கவேண்டாம்.

அதேபோல் பெற்றோர் சம்மதத்துடன் மட்டுமே திருமணங்கள் நடக்கவேண்டும் என்பது கற்காலத்துக்கே எம்மை அழைத்து செல்வதுடன் நகைப்புக்குரியதாகவும் இருக்கிறது.

குறைகள் இருந்தாலும் திருமண மோசடிகளை விளக்கும் படமாக திரௌபதி அமைந்துள்ளது. விழிப்புணர்வு படமாக மோகன்.ஜி கொடுத்துள்ளார். ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் திறம்படக் கையாண்டுள்ளார். மனோஜ் நாராயணனின் நேர்த்தியான ஒளிப்பதிவும், ஜூபினின் பின்னணி இசையும் படத்துக்குப் பலம் சேர்க்கின்றன.

**நடிகர் :ரிச்சர்டு**
**நடிகை: ஷீலா ராஜ்குமார்**
**இயக்குநர்: மோகன்**




**நடிகர்: துல்கர் சல்மான்**
**நடிகை: ரிது வர்மா**
**இயக்குனர்: தேசிங் பெரியசாமி**

நாயகன் துல்கர் சல்மானும், ரக்ஷனும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் வேலைக்கு போகாமல், வீட்டில் இருந்து கொண்டு ஆப் மூலம் சம்பாதித்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலையில், நாயகி ரிது வர்மாவை பார்த்தவுடன் காதல் வயப்படுகிறார் துல்கர் சல்மான்.

இருவரும் காதலித்து வரும் நிலையில், பொலிஸ் அதிகாரியாக இருக்கும் கவுதம் மேனன் இவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடுகிறார். அதன்பின் துல்கர் சல்மானின் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுகிறது. இந்தக் கதையை 2 மணி நேரம் 40 நிமிடங்கள் எடுக்க என்ன இருக்கிறது என்று தியேட்டரில் போய் உட்கார்ந்தால், முழு நேரமும் உங்களை எழுந்திரிருக்க விடாமல் படத்தை ரசிக்க வைத்திருக்கிறார்கள். இதுதான் இந்தக் கதையின் சிறப்பம்சம்.

படத்தின் நாயகனாக நடித்திருக்கும் துல்கர் சல்மானுக்கு இந்தப் படம் 25ஆவது படம். சத்தமே இல்லாமல் வெளியானாலும் ரசிகர்களைத் திருப்திபடுத்தும் அளவுக்கு நடித்திருக்கிறார். நண்பராக வரும் ரக்ஷன் ஆங்காங்கே காமெடியில் கலக்கி இருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் ரிது வர்மா அழகாலும், நடிப்பாலும் ரசிகர்களைக் கவர்ந்திருக்கிறார். பிற்பாதியில் ரசிகர்களுக்கு அதிர்ச்சி கொடுக்கிறார். மற்றொரு நாயகியாக வரும் நிரஞ்சனிக்குக் கொஞ்சம் சீரியசான கதாபாத்திரம். அதை உணர்ந்து சிறப்பாக நடித்திருக்கிறார். பொலிஸ் அதிகாரியாக வரும் கவுதம் மேனன் நடிகராக முத்திரை பதித்திருக்கிறார். கதாபாத்திரத்தை உணர்ந்து கச்சிதமாக நடித்திருக்கிறார். இவரது குரல் படத்திற்கு பலம் சேர்த்திருக்கிறது. முதல் படம் என்று தெரியாத அளவிற்கு படத்தை சுவாரஸ்யமாக எடுத்து சென்றிருக்கிறார் இயக்குநர் தேசிங் பெரியசாமி. திரைக்கதையில் பல திருப்பங்கள் கொடுத்து ரசிக்க வைத்திருக்கிறார். கதாபாத்திரங்களை மிகவும் திறமையாக வேலை வாங்கி இருக்கிறார். பாடல்களும், பின்னணி இசையும் கேட்கும் ரகம்.



கே.எம்.பாஸ்கரின் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்து படைத்திருக்கிறது.

மொத்தத்தில் 'கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்' கண்களுக்கு விருந்து.

## அமீர்கான் படத்துக்காக 25 கிலோ எடை குறைக்கவுள்ளார் விஜய்சேதுபதி



தமிழ் பட உலகில் முன்னணி நடிகராக உயர்ந்துள்ள விஜய் சேதுபதி, தற்போது விஜய்யின் 'மாஸ்டர்' படத்தில் வில்லன் வேடத்தில் நடித்து வருகிறார். ஏற்கனவே மாதவனுடன் 'விக்ரம் வேதா', ரஜினியின் 'பேட்ட' படங்களில் வில்லனாக வந்தார். வேறு மொழிகளில் இருந்தும் பட வாய்ப்புகள் குவிகின்றன. சைரா நரசிம்ம ரெட்டி தெலுங்கு படத்தில் சிரஞ்சீவியுடனும், மார்கோனி மதாய் என்ற மலையாளப் படத்தில் ஜெயராமுடனும் நடித்துள்ளார். அமீர்கானுடன் 'லால் சிங் சத்தா' என்ற இந்தி படத்தில் நடிக்கவும் வாய்ப்பு வந்துள்ளது.

பிரபல ஹாலிவுட் நடிகர் டாம் ஹான்க்ஸ் நடிப்பில் 1994இல் வெளியாகி 6 ஆஸ்கார் விருதுகளை வென்ற 'பாரஸ்ட் கம்' படத்தின் இந்தி மறுதயாரிப்பாக 'லால் சிங் சத்தா' தயாராகிறது. இந்தப் படத்தில் அமீர்கான் உடல் எடையை 21 கிலோ குறைத்து நடிக்கிறார். அவரது தோற்றம் ஏற்கனவே சமூக வலைத்தளத்தில் வெளியாகி படத்துக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுபோல் விஜய் சேதுபதியும், 'லால் சிங் சத்தா' படத்தில் 25 கிலோ உடல் எடையை குறைத்து நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த படத்தைத் தமிழில் டப்பிங் செய்து வெளியிடவும் திட்ட மிட்டுள்ளனர். விஜய் சேதுபதி கைவசம் தற்போது 'லாபம்', 'கடைசி விவசாயி', 'மாமனிதன்' உள்ளிட்ட 6 படங்கள் உள்ளன

# தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை...!

முல்லைக்கவி தனுஜா

"என்னப்பா நீ..... எப்ப பார்த்தாலும் படி... படி எண்டு கொண்டிருக்கியே...அதைச் செய் இதைச் செய் எண்டா நான் என்ன ரோபோவா?" என்று முணு முணுத்துக்கொண்டே சிவா ரி.வி யை நிப்பாட்டி விட்டு விறாந்தைக்கு வந்தான்.

" அம்மு கண்டறியாத பிள்ளை வளக்கிறியள்..... என்னவாவது செய்து துலையுங்கோ .....இப்ப இந்த அப்பன் சொல்லுற சொல் கேக்காது ....செத்தாப் பிறகு தான் யோசிப்பியள்.சரி நீர் ரீயை ஊத்தும். வாழைக்கு கொஞ்சம் தண்ணி கட்டோனும்.குலையும் வரவர சின்னனா வருது" என்று கதை சொல்லியவாறே தந்தை கனகேந்திரம் மெதுவாக சாய்மனைக் கதிரையில் அமர்ந்தார்.

எல்லாவற்றையும் காதில் வாங்கிக் கொண்டு எதையும் கேட்காதவள் போல சிவாவை நினைத்து மனதிற்குள் நொந்து கொண்டு ரீயையும் கணவரின் தம்பியாரின் மகள் கொண்டு வந்த விசுக்கோத்து பக்கற்றையும் இரண்டு கண்டோசயும் எடுத்துக் கொண்டு தானும் அமர்ந்தாள் அம்மு.

" என்னப்பா உது கண்டோசு.....???" என்று கனகேந்திரம் விடுப்புக் கேட்டார்." அது ஒண்டும் இல்லையப்பா உவள் மாலா யூனிவேசிற்றிக்கு எடுபட்டிருக்கிறாளாம் எண்டு மத்தியானம் வந்துட்டு போனவள்." அப்படியே சங்கதி ! தகப்பன் இல்லா பிள்ளை . அதுவும் இந்த யுத்தத்துக்க இருந்து எவ்வளவோ கஷ்டப்பட்டதுகள் .அவள் ராசாத்தி பெட்டையள கஸ்ரப்பட்டு படிப்பிச்சுப் போட்டாள்.தகப்பன் செத்தாப்பிறகு பெரியப்பா பெரியப்பா எண்டு ஓடி வருவாள்.அவளிட்டையும் ஒருக்கா போய் அவள் ஆசைப்படுறதுகளை வாங்கிக் குடுக்கோனும்....." என்று சொல்லியவாறே ரீயை வேகமாக குடித்தார் கனகேந்திரம்.

" நீ எப்ப அப்பு யுனிவேசிற்றிக்குப் போகப்போறாய் ??? இன்னும் 4 மாதங்கள் தானப்பு இருக்கு எக்சாமுக்கு" என்றாள் தாய்.

" சும்மா இருங்கம்மா ...அங்க போய் அஞ்சு வருசம் மல்லுக்கட்டி பேந்து வேலை தேடி அலையிறதை விட இங்கயே இருந்து ஏதாவது தொழில் பண்ணலாம் " என்று சிவா கூறிக்கொண்டிருக்கும் போதே தந்தை கனகேந்திரம் கண்கள் கலங்க மெதுவாக எழுந்து வெளியே சென்றார்.

ஆம், அது நடுத்தரமான நகரம்.அங்கே தான் கனகேந்திரமும் மனைவியும் சிவாவும் வாழ்கிறார்கள். கனகேந்திரம் கிராமத்தவர் தான் .பல இன்னல்கள் கஷ்டங்களைக் கண்டவர்.பல போராட்டங்களின் மத்தியில் வேலை செய்து உயர்ந்தவர்.இப்பொழுது 24 ஏக்கர் வயலுக்கும் இரண்டு புடவைக் கடைக்கும் சொந்தக்காரன். திருமணமாகி சீதனக் காணி நகரத்தில் இருந்ததால் மகனை கஷ்டம் தெரியாமல் வளர்ப்பதற்காக நகரத்திலேயே தங்கி விட்டார்கள். கனகேந்திரத்தின் தம்பி, மனைவி பிள்ளைகளோடு வன்னிப்பிரதேசத்தில் வாழ்ந்தான்.அவர்களைப் பிரிந்து உறவுகளை விட்டு வாழ கனகேந்திரம் விரும்பா விட்டாலும் மகனைப் படிப்பிப்பதற்காக நகரத்தில் வாழ்ந்தார்.

அவர் திருமணம் ஆகிய காலத்தில் கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்தாலும், சிவாவைப் பக்குவமாகத் தனியொருவனாக வளர்த்தார்.கேட்பது, நினைப்பது, பார்ப்பது என அனைத்தையும் வாங்கிக் கொடுத்து குறைவில்லாமல் வளர்த்தார். காலங்கள் நகர்ந்தன......

சிவா வளர்ந்து பெரியவன் ஆனான். எல்லோருக்கும் வருவதைப் போல வயதுக்கோளாறு அவனை தட்டி எழுப்பியது.மீசை மெதுவாக அரும்பு விட்டு துளிர்த்தது. வீட்டுக்கு ஒரு பிள்ளை என்ற காரணத்தால் க.பொ.த. வகுப்பு பாஸ் பண்ணியவுடன் கணினி ஒன்றையும் வாங்கிக் கொடுத்து விட்டார்கள்.இனி என்ன



கொண்டாட்டம் தானே.லீவில் தொடங்கியவன் தான் தன் வினையான விளையாட்டுக்களை..... படிப்பைக் குறைத்து மெதுவாக காதல், தொலைபேசி, தொலைக்காட்சி, முகப் புத்தகமென அவற்றில் நாட்டம் செலுத்த தொடங்கினான்.

தந்தை கனகேந்திரத்திற்கு தன் மகன் படித்து ஒரு தொழிலை பெற்று விட வேண்டும் என்பதே கனவாக இருந்தாலும், சிவா அதை நிறைவேற்றுகின்ற நிலையில் இல்லை. உயர்தரப் பரீட்சை எழுதிய பெறுபேறுகள் வெளி வந்தன. உயர் தர கணித பிரிவில் படித்தத ச

மூன்று பாடங்களிலும் சித்தி பெறவில்லை. ஒரு கணம் அதிர்ந்து போனான்.செய்த தவறுகள் கண் முன் ஊசலாடின.அப்பா தன்னை படிக்கும் படி வற்புறுத்திய காரணத்தைப் புரிந்து கொண்டான். கலங்கி கண்ணீர் சொரிந்தான். இதனை அவதானித்த தந்தை கனகேந்திரம் மகன் சிவாவைக் கட்டி அணைத்தார்." இது உன் தோல்வி அல்ல.உனக்கு கிடைத்த அனுபவ வெற்றி என நினைத்துக் கொள்.இப்பொழுது நீ சித்தியெய்திருந்தால் ஒரு மகனுக்கு உரிய பொறுப்பை,தவறுகளை உணர்ந்திருக்க மாட்டாய். பழையநிலையில் தான் இருந்திருப்பாய்.இது உனக்கு கிடைத்த சந்தர்ப்பம் என எடுத்து மீண்டும் முயற்சிசெய்.தோல்வி என்பது வெற்றியின் படிக்கல்.முயற்சித்தால் முன்னேறலாம் என்றார் சிவாவின் தந்தை கனகேந்திரம்." அப்பா .... "என்று வாய்விட்டே அழுது விட்டான் சிவா. கால்களில் விழுந்து " அப்பா என்னை மன்னிச்சிடுங்கப்பா....நான் செய்தது தவறு தான். கண்டிப்பாக அடுத்த வருடம் பரீட்சையில் பாஸ் பண்ணி ஒரு பெரிய இஞ்சினியரா வாறன் பாருங்கோ என்னை நம்புங்கப்பா..... பிளீஸ் பா.....எனக் கலங்கினான்.தாயும் அழுது விட்டாள்.

" நீ என்ர மகனடா செல்லம். கண்டிப்பாக இஞ்சினியரா வருவாயடா எப்பவும் உன்ர அப்பாட ஆசி இருக்குமடா ஒண்டையும் யோசிக்காத நல்லாப்படி! இப்ப வெளிக்கிடு நாங்கள் ஹோட்டல் போவம்.இண்டையான் மதிய சாப்பாடு ஹோட்டல்ல தான்.பின்னேரம் கடலுக்கு போவம். றிலாக்ஸ் பண்ண.என்றவாறே கனகேந்திரம் சேட்டை எடுத்து கொழுவிக் கொண்டு ஓட்டோவை ஸ்ராட் பண்ணினார். தாய்,மகன், தந்தை மூவரும் போய்க்கொண்டிருக்கிறார்கள். எதிரே லொறி ஒன்று வருகிறது. தகப்பனும் " தலையை சுற்றுகிறது எனக்கு " என்று சொல்லுகிறார்.அப்பா நிப்பாட்டுங்கோ நான் ஓட்டோவை ஓடுறன் எண்டு சொல்லி முடிப்பதற்குள் " பஸார்...."என்று ஒரு சத்தம்."அப்பா அப்பா......"இரத்த வெள்ளத்தில் இருந்த தந்தையை தூக்கினான். தாய்க்கு நெற்றியிலும் காலிலும் சிறு காயம்.சிவாவுக்கு

காயம் ஒன்றும் ஏற்படவில்லை. உடனே வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார் தந்தை.

"யார் இங்க சிவா?? " " நான் தான் டாக்டர் சொல்லுங்க" " உங்கள பேசன்ற் பாக்கோனுமாம்...அம்மா நீங்க அவர் மனைவியா? நீங்களும் போய் பாருங்கம்மா "என்றார் டாக்டர். சிவா கண்ணீருடன் மெதுவாக உள்ளே நுழைந்தான்.கனகேந்திரத்தக்கு இப்போது தான் வயது 54 ஐத் தாண்டுகிறது. ஆனாலும் இளமை மாறாத உடல் தோற்றப் பொழிவுடம் கவர்ச்சியான கவர்ச்சியான அழகும் கொண்டவர்.

" ஏனப்பு கண் கலங்குறாய்.அழாதையடா எல்லாம் கடவுள் எழுதி வைத்த விதி .எதுவோ அதுப்படி தானே நடக்கும்.அது போல தானப்பு நானும்.உன்னை விட்டு போகப்போறன்டா. அம்மாவை வடிவாப் பார்த்துக் கொள்ளடா.இனி எனக்கு எந்த கவலையும் இல்லை.நீ பொறுப்பானவனாய் வந்துட்டாய் இனி எப்படியாவது இஞ்சினியரா வந்துடுவாய்....." என்று கூறிக்கொண்டு இருந்தார்.

" அப்பா நீங்க எங்கள விட்டு போகமாட்டிங்கப்பா தயவு செய்து அப்படி சொல்லாதீங்க அப்பா " என்று விம்மியவாறே சிவா தகப்பனின் கையைப் பிடித்தான். " இல்லையப்பு நான் உயிர் பி.ைாக்க மாட்டன். அம்மாவை வடிவாப் பார்த்துக் கொள்.நீ கட்டாயம் இஞ்சினியரா வருவாயடா என சொல்லி முடிப்பதற்குள்.

" எ...!!!!! என்று ஒரு சத்தம்.கனகேந்திரத்தின் உயிர் காற்றோடு கலந்தது." அப்பா ......அப்பா..... அப்பா... என்ர அப்பா..... " சிவா சிறு பிள்ளை போல் கத்தினான்.கதறினான்.அம்மாவைக் கட்டியணைத்து அழுதான்.

" எனக்கு என்ர அப்பா வேணும்.அப்பா .....என்று கத்தினான்.தான் செய்த தவறை உணர்ந்த வேளையில் தன்னோடு அப்பா இல்லையே என ஏங்கினான்.நாட்கள் செல்லச் செல்ல அப்பாவின் கனவை நினைவாக்க ஊக்கத்தோடு படித்தான்.

தன்னுடைய மாவட்டம் தாண்டி மாகாண ரீதியில் அதியுயர் சித்திகளைப் பெற்று அப்பாவின் கனவை நனவாக்கினான். தன்னைப் போல் வேறு பிள்ளைகள் பெற்றோரின் அருமை தெரியாமல் வளரக்கூடாதென பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்கிதோடு உதவிகள் செய்தும் வறுமைப்பட்ட பிள்ளைகளை தன் செலவில் கற்பித்தும் சேவைகள் செய்தான். தாயைக் கண் கலங்காமல் காத்தான். தன் தந்தையின் சொல்லை மதித்திருந்தால் தான் முதல் முறையே தான் சித்தி பெற்று இருக்கலாம்.

தன்னாலேதான் தன் தந்தையும் இறந்து விட்டார். என எண்ணி தந்தையின் படத்துக்கு அருகில் சென்று அழுது மன்னிப்பு வேண்டினான். " தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்பதை உணர்த்தான். சிவா இவ்விதம் வேதனைப்படுவ தைக்கண்டு அவனருகில் சென்று அவனைத் தன் மடியில் கிடத்தி தலையைக் கோதி ஆறுதல் கூறி னார் சிவாவின் தாய்.அப்போதுதான், தந்தையின் தோளில் தான் உப்பு ஏறிய ஞாபகங்கள் மனதில் நிழலாட கண்ணீர் கண்களை நனைத்தது சிவாவுக்கு.



## இறைவனுக்கு நன்றி

காட்டுத் தீயினால்
கரியாகிப் போன
கானக மரங்களுக்கு நல்ல
காலம் பிறந்ததுவே!

கானக மரங்கள்
துளிர் விட்டதை வெறும்
கவிவரியால் நான்
சொல்லி விட முடியாது!
எரிந்த மரங்கள்
ஏற்றம் காண வேண்டும்
இனிமேல்
எம் உலகம்
எழுச்சி பெற வேண்டும்!

அவுஸ்ரேலியக் காட்டின்
அழகு மீண்டு வர வேண்டும்
அதற்கு இறைவன் தான்
அருள் தர வேண்டும்

தமிழ்மதி

## என் இனிய நட்புக்கு...

எங்கோ பிறந்தோம்
பாடசாலையில் இணைந்தோம்
நாம் நண்பர்கள் ஆனோம்
நட்பில் வாழ்வை கழித்தோம்
நட்பில் பலர் நம்மைப் பிரித்தும்
சிலர் நம்மை சேர்த்தும் வைத்தனர்
நட்பின் பயணம் இது போன்று
என்றும் எவருக்கும் ஏற்பட்டிருக்காது
எந்த ஜென்மம் எடுத்தாலும்
நம் நட்பைப் பிரிக்க எவருமில்லை
எமக்குக் கவலையில்லை
நாம் சில காரணங்களால் பிரிவோம்
பின்பு இணைவோம்
ஆனால் இனி நம் நட்பின்
பயணம் இடைவிலகாது
பல பட்டம் பெற்றும்
நாம் பகிர்ந்தே மகிழ்வோம்
எந்த ஜென்மம் எடுத்தாலும்
நாம் நட்பின் இலக்கணமாய்
இணைவோம்



- கல்பனா பவன்ந்திகா

## பொய் - மெய்

பொய்கள் இருப்பதில்லை
உண்மைகள் இறப்பதில்லை
தொட்டுவிடும் தூரம்தான்
உண்மைகள் என்றாலும்
சட்டென்று கண்களுக்குத்
தெரிவதில்லை
உண்மையாய்..,
தொடமுடியாத் தூரம்தான்
பொய்கள் என்றாலும்
கைக்கெட்டும் தூரம்போல்
தோன்றும்
பொய்யாய்..,
பொய்கள் இருப்பதில்லை
உண்மைகள் இறப்பதில்லை

நா.சேகர்

## விதியென்ற விந்தை

நானாகக் கேட்டுப்பெற எனக்கும் வாயில்லை
நீயாகத் தருவாயென நினைத்ததும் நியாயமில்லை!!
கொடுத்தே பழகிய குடியில் பிறந்ததால்
கேட்காமலே போனேன் பெண்ணே உன்காதலை !!

மனதில் நின்ற உன்னை மறந்ததாய்க் காட்டிக்கொண்டு
மணமேடை தன்னிலே மௌனமாய் நான் !!
கண்களெனும் வாசலிலே கண்ணீர்பூக் கோலமிட்டு
வாழ்த்தொலிக்கும் கூட்டத்தில் கடைசியாய் நீ!!

சிங்கார வதனத்தில் சிறுபுள்ளி பொட்டிட்டு
கூரான மூக்கிலோர் சிகப்புக்கல் முத்திட்டு
சீரான வடிவெடுத்து சிறப்பான நடைவைத்து
நேராக வந்ததடி பாழும்விதி பெண்ணாகி!!

போனவெள்ளம் போனபின்னே புலம்புவதில் இலாபமென்ன??
ஆனதெல்லாம் ஆனபின்னே அழுவதிலே நியாயமென்ன ??
நேற்றுவரை இருந்ததுபோல் இன்றுங்கூட இருந்துவிடு
நாளையென்ன ஆகுமென்ற கவலையை மறந்துவிடு!!

நிச்சயிக்கப் பட்டதெனில் நடந்துதான் தீருமென்னும்
உச்சபட்ச உண்மையை உள்ளத்தில் ஊன்றிவிடு!!
மீதமுள்ள வினைகள்யாவும் தகர்க்கப்போட்ட கணக்கிது
மீதமுள்ள நாட்களை நகர்த்தபோட்ட பிணக்கிது!!

வழியில்லை என்றாலும் வாழ்வதில் நியாயமுண்டு
பழியில்லை என்றாலும் பாதைமாறத் தகுமோ??
விழிபார்த்துப் பேசினாலும் விளங்கிடுமே உன் எண்ணம்
மொழிசேர்த்து நீ பாடினால் பரவிடுமே பொன்வண்ணம்!!!

– கார்த்தி கண்ணதாசன்



## மாதராக மதியுங்கள்



தெய்வமாகப் போற்றியது போதும்
மாதராக மதியுங்கள்
சாதித்தவர்களைப் புகழ்ந்தது போதும்
சார்ந்து இருப்பவர்களைப் போற்றுங்கள்
விடுதலை என்று கத்தியது போதும்
ஆதிக்கத்தை விட்டு விடுங்கள்
உவமைகள் படைத்தது போதும்
உண்மையாக வாழ வழிசெய்யுங்கள்
காவியங்கள் கண்டது காணும்
கனவுகளை அடையப் பாருங்கள்
அவளை அவளாக ஏற்றுக் கொள்ளுங்கள்
சிலையைச் சீதையை போற்றுவதை விடுத்து
தாயைச் சேயைப் போற்றுங்கள்

மனதை மெல்ல மகிழ்வாய் திறந்து
உலகில் அன்பைத் தெளிவாய் விதைத்து
பெண்ணை என்றும் சமனாய் மதித்து
தன்னைத் தானே உயர்த்தி வையுங்கள்

மதுவைத் தள்ளி மங்கையைப் போற்றி
மகிழ்வை நோக்கி மனதை மாற்றி
வாழ்வை ஏற்றி பெண்ணியம் எண்ணி
வாழ வேண்டும் தம்பி

வினோத், வட்டக்கச்சி.

## சுதந்திரமில்லை

தந்திரங்கள் நிறையுலகில் இன்னும்
தூய்மையான சுதந்திரமில்லை
எதுவும் நிரந்தரமுமில்லை
இங்கிலீசுக்காரனிடமிருந்து
பெற்ற சுதந்திரம்
உள்ளூர்க்காரன் கைகளிலே
அது தந்திரம்
போதையின் பிடியிலிருந்து
சுதந்திரமில்லை
அடாவடித் தனங்களிலிருந்து
சுதந்திரமில்லை
கோஷ்டி மோதல்களிலிருந்து
சுதந்திரமில்லை
பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து
சுதந்திரமில்லை
சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து
சுதந்திரமில்லை
பழிவாங்கும் எண்ணத்திலிருந்து
சுதந்திரமில்லை
பலியெடுக்கும் நிலைமையிலிருந்து
சுதந்திரமில்லை
சுத்தமான சுதந்திரத்தை
எப்போது அனுபவிப்போம்??
எம்மை ஆள்பவனே இது
உமக்கே சமர்ப்பணம்!

எம்.ரி.ஆர்
யாழ்ப்பாணம்



## சடலம்

மூச்சு ஓடும் வரை
ஆட்டம்
மூச்சு நின்று விட்டால்
சடலம்
புதைக்கலாம் எரிக்கலாம்
கல்லறை கட்டி
கவிதை பாடலாம்
எழுந்து வருமா சடலம் ?

சித்தன் சொன்னாலும்
பித்தன் சொன்னாலும்
நான் சொன்னாலும்
நீங்கள் சொன்னாலும்
தத்துவம் அதுதான்
நச்சுப் பொய்கை கேட்ட
கடைசி உண்மையும்
அதுதான் !



- கல்பனா

# இந்த வார ராசிபலன்

08.03.2020 முதல்
14.03.2020 வரை

## மேடம்

இந்த வாரம் பொருளாதாரச் சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். இதுவரை இருந்து வந்த சிரமங்கள் கொஞ்சம் சொஞ்சமாக குறையும். நீங்கள் எதிர்பார்க்கும் புதிய விஷயங்கள் அனுகூலமாகும். சுபகாரிய முயற்சிகள் முன்னேற்றமாகும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்குத் தொழில் ரீதியான சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கல்வியில் கடினமான சூழ்நிலை இருக்கும். கலை, இலக்கியம் முன்னேற்றம் பெறும். விவசாயிகளுக்கு பணிகளில் கடின உழைப்புகள் இருக்கும். பெண்களுக்குக் குடும்பப் பணிகளில் சிரமம் கூடும். புதிய பொறுப்புகள் அதிகரிக்கும்.

## இடபம்

இந்த வாரம் பொருளாதார சூழ்நிலைகள் லாபகரமாக இருக்கும். உங்கள் புத்திசாதுார்யமான செயல்பாடு பாராட்டுப் பெறும் வகையில் இருக்கும். புதிய வியாபாரத் தொடர்பு அனுகூலமாகும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு முன்னேற்றம் மிகுந்திருக்கும். லாபம் கூடும். உற்பத்தி திறன் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் மிகுந்திருக்கும். கல்வியாளர்கள், மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றம் இருக்கும். கலை, இலக்கியம் மேன்மை தரும். விளையாட்டுப் போட்டிகள் உற்சாகம் மிகுந்திருக்கும். பணிகளில் முன்னேற்றம் இருக்கும். லாபகரமான சூழ்நிலை இருக்கும். பெண்களுக்குக் குடும்பப்பணியில் சிரமம் கூடும்.

## மிதுனம்

இந்த வாரம் உங்கள் பொருளாதாரச் சூழ்நிலைகள் மேன்மையாக இருக்கும். தன தான்ய சேர்க்கை பக்தி பெருக்கு குடும்ப மகிழ்ச்சி என மன நிறைவாக இருக்கும். செய்யும் தொழிலில் நல்ல முன்னேற்றம் இருக்கும். எதிர்பாராத செலவு வரும். தொழிலதிபர்கள் வியாபாரிகளுக்குத் தொழில் ரீதியான முன்னேற்றம் நிதி நிலைமை உயர்த்தும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் பெருகும். கல்வியாளர்கள் மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமாக இருக்கும். பெண்களுக்கு குடும்பப்பணிகளில் முன்னேற்றம் வரும். புதிய பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும். கடன்சுமை குறையும்.

## கடகம்

இந்த வாரம் உங்கள் பொருளாதாரச் சூழ்நிலைகள் சுபிட்ஷமாக இருக்கும். பேச்சு சாதுார்யம் நன்மை ப்யக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். செய்யும் தொழிலில் கடின உழைப்பு இருக்கும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு தொழில் ரீதியான சூழ்நிலை கடினமாக இருக்கும். வியாபாரத்தில் கடின உழைப்பு, போட்டிகள் சிரமப்படுத்தும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கல்வியில் காரியத்தடை வரும். கடினமான சூழ்நிலை இருக்கும். முழு ஈடுபாடு காட்ட வேண்டும். விடாமுயற்சி தேவை. பெண்களுக்கு குடும்பப்பணிகளில் சிறப்பு கூடும்.

## சிம்மம்

இந்த வாரம் உங்கள் பொருளாதாரச் சூழ்நிலைகள் சுமாராக இருக்கும். தொழில் ரீதியான சூழ்நிலை முன்னேற்றமாக இருக்கும். சிறப்பு சேர்க்கும். சுகபோகம் அயன சயனபோகம் மிகுந்திருக்கும். போக்குவரத்தில் முன்னெச்சரிக்கை தேவை. தொழிலதிபர்கள் வியாபாரிகளுக்கு தொழில் ரீதியான சூழ்நிலை முன்னேற்றமாக இருக்கும். கல்வியாளர்கள் மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் மிகுந்திருக்கும். கலை இலக்கியம் மேன்மை பெறும். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி கிட்டும். வரவுக்கு ஏற்ற செலவுகள் இருக்கும். பெண்களுக்கு குடும்பப்பணிகளில் சிறப்பு கூடும். சூழ்நிலையை அனுசரித்து கோபப்படாமல் செயல்படவும்.

## கன்னி

இந்த வாரம் உங்கள் பொருளாதார சூழ்நிலைகள் வரவுக்கு ஏற்ப செலவுகள் இருக்கும். புதிய பொருள் சேர்க்கை, பணவரவுகள் மகிழ்ச்சி தரும். தேக ஆரோக்கியக்குறை குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதம் வரும். அனுசரிப்பது நன்மை. கடன் சுமை குறையும். கூட்டாளிகள் இணக்கமின்றி செயல்படுவார்கள். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு தொழில் ரீதியான சூழ்நிலை சிரமம் தரும். வியாபாரத்தில் உங்கள் புத்திசாலித்தனம் லாபத்தைப் பெருக்கும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாராத சிரமங்கள் நெருக்கடி தரும். கலை இலக்கியம் விளையாட்டு சுமாராகவே இருக்கும். பெண்களுக்குக் குடும்பப்பணிகளில் சிரமம் கூடும்.

## துலாம்

இந்த வாரம் உங்கள் பொருளாதாரச் சூழ்நிலைகள் லாபகரமாக இருக்கும். தேக ஆரோக்யம், குடும்ப நலன், உறவுகள் மேன்மை, கடன் நிவாரணம் என நற்பலன்கள் கிடைக்கும். வீடு,மனை போன்ற விஷயங்கள் லாபம் தரும். கடன் சுமை குறையும். புதிய பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்குத் தொழில் ரீதியான சூழ்நிலை லாபகரமாக இருக்கும். வியாபாரத்தில் லாபம் பெருகும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கல்வியில் சுமாரான சூழ்நிலை நிலவும். தேக ஆரோக்யக் குறை காரியத்தடையாகும். பெண்களுக்கு குடும்பப் பணிகளில் சிரமம் கூடும். தேக ஆரோக்யக் குறை சிரமப்படுத்தும்.

## விருச்சிகம்

இந்த வாரம் உங்கள் பொருளாதார சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். தொழில் ரீதியான முன்னேற்றங்கள் இருக்கும். வருமானம் கூடும். குடும்ப மகிழ்ச்சி,லாபம் பெருகுதல், புதிய வியாபாரத் தொடர்பு என நற்பலன்கள் இருக்கும். ஆனாலும் எதிர்ப்புகள் இருக்கும். தேக ஆரோக்யக் குறை சிரமப்படுத்தும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்குத் தொழில் ரீதியான சூழ்நிலை முன்னேற்றமாக இருக்கும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு முன்னேற்றமாக இருக்கும். பெண்களுக்குக் குடும்பப் பணிகளில் முன்னேற்றம் மிகுந்திருக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

## தனுசு

இந்த வாரம் உங்கள் பொருளாதாரச் சூழ்நிலை திருப்தி தரும். உறவுகள் மேம்படும். சுபகாரிய ஈடுபாடு மகிழ்ச்சி தரும். தொழில் மேன்மை,அரசு அனுகூலம் வீடு மனை போன்ற விஷயங்களில் லாபம் என நற்பலன்கள் கிட்டும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு தொழில் ரீதியான சூழ்நிலை மேன்மை பெறும். வியாபாரத்தில் கடின உழைப்பு வியாபார விருத்திக்கு வழி வகுக்கும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமாக இருக்கும். கலை இலக்கியம் மேன்மை பெறும். விளையாட்டு போட்டிகளில் முன்னேற்றமாக இருக்கும். பெண்களுக்குக் குடும்பப்பணிகளில் முன்னேற்றமாக இருக்கும். புதியபொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.

## மகரம்

இந்த வாரம் உங்கள் பொருளாதாரச் சூழ்நிலைகள் சுமாராக இருக்கும். செய்யும் தொழிலில் டென்ஷன் மிகுந்திருக்கும். பணவரவு வசதி வாய்ப்புகளை பெருக்கினாலும் அதற்கேற்ப செலவினங்களும் வரும். போக்குவரத்தில் முன்னெச்சரிக்கை அவசியம் தேவை. தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு தொழில் ரீதியான சூழ்நிலை கடின உழைப்பு காரியத்தடை என சிரமம் இருக்கும். வியாபாரத்தில் நெருக்கடி மிகுந்திருக்கும். கல்வியாளர்கள் மாணவர்களுக்கு ஞாபகமறதி தொல்லை முன்னேற்றத் தடையாகும். சோம்பலான சிந்தனை சிரமப்படுத்தும். பெண்களுக்குக் குடும்பப்பணியில் சிரமம் கூடும்.

## கும்பம்

இந்த வாரம் உங்கள் பொருளாதாரச் சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். உங்கள் செல்வாக்கு உயரும். தொழில் ரீதியான சூழ்நிலைகள் கடின உழைப்பு இருக்கும். தொழில் ரீதியான வருமானம் கூடும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்குத் தொழில் ரீதியான சூழ்நிலை நல்ல முன்னேற்றமாக இருக்கும். உற்பத்தி திறன் கூடும். வியாபாரத்தில் கடின உழைப்பு ஏற்ற லாபம் பெருகும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. பெண்களுக்கு குடும்பப்பணிகளில் சிறப்பு கூடும்.

## மீனம்

இந்த வாரம் உங்கள் பொருளாதார சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. தொழில் ரீதியான சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். குடும்பத்தில் தேவைகள் பூர்த்தியாகும். பணவரவுகள் சிரமங்களைக் குறைக்கும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு தொழில் ரீதியான சூழ்நிலை முன்னேற்றமாக இருக்கும். நிதிநிலைமை சீராகும். வியாபாரத்தில் லாபகரமான சூழ்நிலை இருக்கும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு முன்னேற்றமாக இருக்கும். கலை, இலக்கியம் முன்னேற்றமாக இருக்கும். விளையாட்டு போட்டிகள் வெற்றியாகும். தனதான்ய விருத்தி உண்டாகும். குடும்ப பெண்களில் சிறப்பு கூடும்.

## புதிய பார்வை சரியில்லை...

நீண்டு கிடக்கும் பாதையைக் கடக்க
மூன்று கால்களோடு
முடங்கி நிற்கும் பாட்டி

தாமதித்துச் செல்ல
யாரும் முனையாததால்
இரண்டு வேளை உணவை
நின்ற படியே நினைத்துவிட்டு
நா வறட்சியோடு இரவுக்காகக் காத்திருக்கிறாள்.

இயற்கைக் கடனை
இயந்திர மயமாக்கல்
தடுக்க முடியுமா..?

கட்டட நிழலில் ஒதுங்க முற்பட்டவளிடம்
உரத்த குரலில் விரட்டியடிக்கும்
பல மனிதர்கள்.

அவள் கவலைகள் எல்லாம்
தன் வீட்டில் முளை விட்டிருக்கும்
பல ஆண்டுகள் கடந்து கனி கொடுக்கும்.
மரங்ளை பற்றியே சுற்றிக் கொண்டு.

இயற்கையால் அது வளரும்
என்றாலும்
தன்னால் ஓர் துளி நீராவது ஊற்ற வேண்டும்.

தன்னம்பிக்கை கொண்டபடி
இப்போதும் முயற்சித்துக்
கொண்டுதான் இருக்கின்றாள் பாட்டி
தாமதித்துச் செல்லத்தான் யாருமே இல்லை.



காரையன் (கதன்)
காரைதீவு.

சூரியகாந்தி

வாசகர்களே...!

நீங்களும் எழுதலாம்...!

உங்கள் படைப்புக்கள் சூரியகாந்தியில்
பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- கட்டுரைகள்
- கவிதைகள்

எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்

'சூரியகாந்தி'
உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி
u.sooriyakanthy@gmail.com

# நித்திய சுகம் 459

உடலே கோயில்

ஆரோக்கியா

## கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவேண்டும்

ஆரோக்கிய வாழ்க்கைக்கு மூன்று வேளையும் உணவு உட்கொள்வது அத்தியாவசியமானது. இருந்த போதிலும் எம்மில் பலர் காலை உணவை தவிர்த்துக் கொள்கின்றனர். பாடசாலை செல்லும் சிறுவர்கள், இளைஞர், யுவதிகள் இதில் அடங்குவர். இதற்கான முக்கிய காரணங்கள் நேரமின்மை, உணவில் விருப்பமின்மை, சுவையின்மை, தேகம் மெலிய வேண்டும் போன்றவைதான். காலை உணவை தவிர்ப்பதால் நாம் பல ஆபத்தான பின் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். ஆகவே நாம் உணவைத் தயாரிக்கும் போது, சத்தானதாக, இலகுவில் உண்ணக் கூடிய விதத்தில் விரும்பி உண்ணக் கூடிய வகையில் தயாரிப்பது அவசியம்.

அரிசி சோறை எமது பிரதான உணவாகக் கொண்டாலும், அதைவிட அரிசியுடன் வேறு உணவுப் பொருள்களையும் சேர்த்து உணவுகளைத் தயாரிக்கும்போது அந்த உணவின் போசணைப் பெறுமானம் அதிகரிக்கப்படுகிறது. அந்த வகையில் நாம் அரிசிக்கஞ்சிக்குப் பதிலாக சத்தூட்டக் கஞ்சி தயாரிக்கும் முறை ஒன்றைப் பார்ப்போம்.





**போசணைக் குறிப்பு:**
உடலுக்கு தேவையான விற்றமின்கள் இரு வகைப்படும். கொழுப்பில் கரைபவை, நீரில்கரைபவை. பச்சை அரிசியில் காணப்படும் விற்றமின் B, நீரில் கரையும் விற்றமின் ஆகும். பச்சையரிசித் தவிட்டுடன் சேர்ந்து இந்த விற்றமின் காணப்படுகிறது. ஆகவே அளவுக்கு மீறி பிசைந்து கழுவுவதால் அரிசியில் காணப்படும் விற்றமின் B வீணாகி விடும். விலை கொடுத்து வாங்கும் சத்தான உணவுப் பொருள்களின் உணவுச் சத்துக்களை எம் அறியாமையினால் இழந்து விடக்கூடாது.

### சத்தூட்டக் கஞ்சி



**தேவையான பொருள்கள்:**
சிவப்பு பச்சையரிசி - 1 சுண்டு
வறுத்துக் குற்றிய பாசிப்பருப்பு - ¼ சுண்டு
வறுத்த உழுத்தம்மா - 1/2 சுண்டு
தேங்காய்ப்பால் - ½ தேங்காய்
ஏலம் - 3,4
உப்பு அளவாக
சீனி விரும்பிய அளவு

**செய்முறை:**
அரிசி, பாசிப்பருப்பை நன்கு கழுவி அளவாக தண்ணீர் சேர்த்து அவியவிடவும். உப்பு ஏலம் சேர்க்கவும். அரிசி நன்கு வெந்ததும் கடைந்து எடுக்கவும். தேங்காய்ப்பாலில் உழுத்தம் மாவைக் கரைத்து அவிந்த அரிசி பருப்புடன் சேர்க்கவும். அகப்பையால் நன்கு கலக்கி, கஞ்சிப் பதத்தில் தேவையாயின் மேலும் சுடுநீர் சேர்த்து கிளறவும். அடுப்பில் இருந்து இறக்கும் வரை அகப்பையால் கிளறியபடி இருக்க வேண்டும். நன்கு கொதிக்கவிட்டு இறக்கவும். அளவாக சீனி சேர்த்து பரிமாறவும்.
சீனியைத் தவிர்த்தும் குடிக்கலாம்.

## சொர்க்கமே என்றாலும் எம் நாட்டைப் போலாகுமா...?











ஆசியா கண்டத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ள நாடு இலங்கை, உள்ளூர் மற்றும் வெளியூர் வாசிகளின் கவனத்தை ஈர்ப்பது இயற்கை என்றால் அது மிகையாகாது.

இலங்கை ஒரு குட்டித் தீவாக இருந்தாலும் இங்கு கொட்டிக் கிடக்கும் இயற்கை வளங்களும் ஆச்சரியங்களும் உள்நாட்டவர்களையும், சுற்றுலாப்பயணிகளையும் தன் பக்கம் வசப்படுத்தும் வல்லமை கொண்டது.

பலகோடி பார்வையாளர்களையும் கட்டி ஈர்க்கும் சக்தி இலங்கையின் இயற்கைக்கு காணப்படுகின்றது.

"நான்கு பக்கமும் கடலால் சூழ, மத்தியில் மலைகளும், அடர்ந்த காடுகளும், அதன் நடுவே விசாலமான நீர்வீழ்ச்சிகளும் என ஒரு குட்டி சுவர்க்கத்தையே எம் கண் முன் காட்டிவிடுவதாய் அமைந்ததுதான் எமது தீவு."

ந.கோபிராம்
சண்டிலிப்பாய்

# மனவலிமை படைத்தவள் பெண்



இன்று என்ன நாள்? அப்படியென்ன விசேஷம் உள்ளது இத்தினத்தில்? இன்றுதான் சர்வதேச மகளிர் தினம் பங்குனி மாதம் 8ஆம் திகதிதான் சர்வதேச மகளிர் தினம் என்பது பெரும்பாலானோரும் அறிந்த ஒன்றாகும். இத்தினத்தில் பல்வேறு தேசங்களிலும் பெண்கள் எழுச்சி நிகழ்வுகளும், பெண் கொடுமைக்கு எதிரான கண்டனப் பேரணிகளும், நிகழ்த்தப்படும். இவ் 2020ஆம் ஆண்டுக்கான மகளிர் தினம் 109 வது மகளிர் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

**சர்வதேச மகளிர் தினம் என்றால் என்ன?**

பெண்களின் பின்னணிகள், முக்கியத்துவம் முதலானவை கூறப்பட வேண்டியது முக்கியமானது ஆகும். சர்வதேச பெண்கள் தினம் பெண்ணுரிமைக்காக போராடிய பெண்களுக்காகவும், பெண் இயக்கங்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்ல நவீன உலகில் பெண்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான முக்கியமான நிகழ்வாக இது உள்ளமை சிறப்பு எனலாம்.

எங்கேயெல்லாம் அடிமைப்படுத்தலும், ஒடுக்குமுறையும் ஏற்படுகின்றதோ, அங்கே சுதந்திரத்திற்கான எழுச்சி ஏற்படுகின்றது. அதுபோலவே பெண்களுக்கான புரட்சிகளும், எழுச்சிகளும் ஏற்பட்டன. கிபி 1789 ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரான்சிய புரட்சியிலே சுதந்திரம், சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற மூன்று பிரதான கொள்கையின் அடிப்படையில் பெண்களும் இணைந்து தமது போராட்டத்தை நடத்தினர். இவர்கள் தமது வாக்குரிமை, ஊதியம் (8 மணி நேர வேலைக்கேற்ற ஊதியம்) என்பனவற்றிற்காக ஆயுதம் தாங்கி போராட்டம் நடத்தினர். உலகிலேயே முதன்முதலாகப் பெண்களால் நடத்தப்பட்ட போராட்டமாக இது அமைகின்றது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கப் புரட்சியிலும், ரஷ்யப் புரட்சியிலும் பெண்கள் மேற்கொண்ட போராட்டம் சரித்திரத்திலேயே திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. 1909 ஆம் ஆண்டு பாரிஸ் நகரத்தில் இடம்பெற்ற உலக மாநாட்டில் உலக மகளிர் செயலாளராக கிளாரா என்ற பெண்மணி தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து பெண்களின் உரிமைப் போராட்டங்கள் அதிகரிக்கத் தொடங்கின. இதன் தொடர்ச்சியாக 1911 ஆம் ஆண்டு பங்குனி 8 ஆம் நாள், சோவியத் யூனியன் பெட்டோகிராட் நகரில் கிளாரா ஜெட்கின் சர்வதேச மகளிர் தினம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மகளிர் தினம் இன்று வரை சிறப்பாக இடம்பெற்று வருகிறது. இன்று பெரும்பாலான நாடுகள் மகளிர் தினத்தைக் கொண்டாடி வருகின்றது. பெண்களின் சம உரிமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் இவ் விழா கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

பெண்கள் முன்னைய காலத்திலேயே தமக்கென சிறந்த இடத்தை பெற்றுள்ளனர். மனித நாகரிகம் கால்கொள்ளத் தொடங்கிய காலத்திற்கு முன்பே சமூகத்தின் தலைமைப் பொறுப்பை பெண் தனதாக்கிக் கொண்டிருந்தாள். அக்கால சமுதாயம் தாய்வழிச் சமுதாயம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதும், குடும்பத்தை பெண்கள் வழிநடத்துவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முற்பட்ட கால காப்பியங்கள் கூட, பெண்களின் பெயரால் அமைந்திருப்பது இதனை எடுத்தியம்புகிறது. குண்டலகேசி, மணிமேகலை, வளையாபதி, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலான ஐம்பெரும் காப்பியங்கள் பெண்களின் வாழ்வு, துறவு, விழுமியப்பண்பு கள் என்பவற்றை சிறப்பாக எடுத்துக் கூறி இருக்கின்றன. கண்ணகி தெய்வமாக போற்றப்படுவதும், காந்தியடிகள், தேவநந்தி முதலானோரின் வரலாறுகளும் மாதவி, மணிமேகலை ஆகியோரது துறவு வாழ்க்கையும் பெண்களைப் பற்றி நிறையவே அறிய வைக்கின்றன.

தரம்13ற்கான உயர்தர தமிழ் பாடத்திலே சிலப்பதிகார ஊர்காண் கதையில் மாதவியின் நிலை, மணிமேகலையிலே துறவின் மகிமை என்பன குறிப்பிட்டுள்ளமை இக்கால மாணவ சமூகத்தக்கு அதனை அறிய வைப்பதற்காகும். இவை தவிர பெண்ணின் ஒழுக்கம், காதல் வாழ்வு, விழுமியம் என்பவற்றைப் பறைசாற்றுகின்றமை (அத்துடன் பெரிய புராணத்தில் 28 பெண்கள் பற்றி குறிப்பி டப்பட்டுள்ளமை) குறிப்பிடத்தக்கது.

**இன்று சர்வதேச மகளிர் தினம்**

இவை தவிர அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர்களும் இலக்கியப்பணி, சமயப்பணி, வீரம் சார்ந்த ஒழுக்கம் முதலானவற்றைப் பேணி பெண்களின் மேன்மையை எடுத்துக் காட்டியுள்ளனர். ஔவையார், வேலுநாச்சியார், ஜான்சிராணி, அன்னை தெரேசா முதலான பல பெண்களைப் பற்றி அறிந்தும், அவர்களைப் பற்றி எண்ணியும் மகிழ்ந்திருப்போம்.

பின்பு காலம் செல்லச் செல்ல பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள், இழிவுகள் என்பவை அதிகரிக்கத் தொடங்கின. ஆனாலும் கூட பெண்களின் முன்னேற்றமும் அவர்களுக்கான வாய்ப்புகளும் சரியாக வழங்கப்படுவதன் மூலம் பெண்கள் தங்களை நிரூபிக்க வாய்ப்புக் கிட்டுகிறது. அல்லாதுவிடில் ஒடுக்குமுறை ஏற்பட்டு போராட்டம் தலைதூக்க காரணமாகின்றது. பெண்களுக்கான ஊர்வலமும் போராட்டமும் டாக்காவிலும், 1975இல் சிட்னியிலும், இந்தியா இலங்கை முதலான நாடுகளிலும் ஏற்பட்டதை அறியமுடிகின்றது

வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப காலகட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளில் ஆண்களுக்குச் சமனாகவும் அவர்களை விட அதிகமாகவும் முன்னேறியிருப்பதை காணலாம். விளையாட்டு, விஞ்ஞானம் போன்றவற்றிலும் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் முதலான அரசியல், கல்வி போன்ற பதவிகளில் பெண்கள் கால்பதித்து சாதித்தமை அனைவரும் அறிந்த ஒன்றாகும். பல்வேறுபட்ட துறைகளில் பெண்கள் பெரும் சாதனைகளையும் படைத்துள்ளனர். ஒடுக்குமுறை காரணமாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த பெண்கள் இன்று விண்வெளி வரை சென்று ஆய்வுகளை மேற்கொண்டிருப்பதும் வியக்கத்தக்க விடயமாகும்.

**பெண் உரிமை மதிக்கப்படல் வேண்டும்**

இவ்வாறு இருந்தாலும் கூட சில நாடுகளில் பெண்களுக்கான ஒடுக்குமுறைகள், வன்புணர்வு, சிசுப்படுகொலை, பாலியல் துஸ்பிரயோகம் முதலானவை அதிகரித்து பெண்களை தமது வட்டத்தை விட்டு வெளிவராத வகையில் அவர்களை கட்டி வைத்துள்ளமை வருந்தத்தக்க ஒன்று. எனினும் பொது உணர்வு தூண்டப்பட்டு சமூகத்தில் பெண்கள் பற்றி சரியான அந்தஸ்தும் புரிந்துணர்வும் ஏற்படுத்தப்பட வேண்டும். பெண்களுக்கான உரிமை, திட்டங்கள், தேவைகள், சுதந்திரம் முதலானவற்றை வழங்கி அவர்களை முன்னேற்ற வேண்டும்.

ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் நிச்சயமாக இருப்பாள் என்று கூறுவார்கள். அது உண்மைதான். தாய், மனைவி, மகள், தங்கை என பெண்ணின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. உடலுறுதி பெற்றவன் ஆணாக இருந்தாலும், மனவலிமை படைத்தவள் பெண்ணாகவே இருப்பாள் என்பதுதான் உண்மை. யுகக்கவிஞன் பாரதி தனது கவிதையிலே,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்று கூறிய கவி வரி மகளிர் தின சிறப்பையும், பெண்களின் சிறப்புத் தன்மையையுமே விளக்குகின்றது.

**ஆணுக்குப் பெண் சமம்**

ஆணுக்குப் பெண் இளைத்தவளல்ல என்பதை உலகின் அண்மைக்காலச் செயற்பாடுகள் காட்டுகின்றன. அவர்களுக்கான பொருளாதார சுதந்திரம், வேலைவாய்ப்பு, கவனயீர்ப்பு, கல்வி, அரசியல் முதலானவற்றில் பெண்கள் சாதனை படைத்து வருவது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். "பெண்மையே மிகப்பெரிய சக்தி என்று கூறும் அளவுக்கு பெண்களின் நிலை இன்று ஓங்கியுள்ளமை மகளிர் தின பெண்முதன்மையை சுட்டிக்காட்டு கின்றது.

ஆகவே ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்த உலகில் பெண்ணும் ஆணும் தெளிவுடனும், ஆற்றலுடனும் வாழ்வது சிறந்தது. எனவே பெண்களின் உரிமைகளை வழங்கி, அவர்களை மதிப்பளித்து சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பாக கொண்டாடுவோம்.

"பெண்ணின் பெருமையே மண்ணின் பெருமை"

## பெண்ணியம்

ந.கோபிராம்

பெண் இன்றி இவ்வுலகம் இல்லை
அவளின்றி உலகில் புன்னகைக்கு இடமில்லை
கவலையை உதறிவிட்டு கனவுகளைத் துரத்திப் பிடித்து
சிறகை விரித்து வானத்தில் பற

சோதனைகளைத் தோள்களில் சுமந்து
வேதனைகளை நீக்கி சரித்திரம் படைப்பாய் உலகிலே
உயிரோடு உயிராகத் தோழியாகச்
சகோதரியாக நின்று சாய்வளே

ஆட்டி வைக்கும் காலம் போய்
ஆழச்சொல்லி அழைக்கும் உன்னை
சாதிக்க வாமுன்னே
சோதனைகளை நீ தகர்த்திடுவாய்

அடுப்படியில் வாழ்ந்தது அன்றுதான்
அகிலம் போற்ற உயர்ந்து விட்டாய் இன்று நான்
உலகின் விலை மதிப்பில்லா பொக்கிசமே – உன்னை
நாம் பெண்ணியம் போற்றுவோம்



# இறை வழிபாட்டுக்குரிய சிறந்த நாள் மாசி மகம்

மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தன்.

மாசி மாதத்தில் இரண்டு விசேட விரத தினங்கள் வருகின்றன. ஒன்று சிவபெரு மானை நோக்கி அனுஷ்டிக்கின்ற மகாசிவராத்திரி மற்றையது சிவத்தின் கூறாகிய சக்தியை நோக்கி மேற் கொள்ளப்படுகின்ற மாசி மகம். 'மகம்' என்பது இருபத்தேழு நட்சத்திரங்களுள் ஒன்று, மாதந்தோறும் வருகின்ற மக நட்சத்திரத்தோடு கூடிய நாள். இறைவழிபாட்டுக்குச் சிறந்த நாள் ஆகும். எனினும் மாசி மாதத்து மகம் பொருந்திய நன் நாள் மிகவும் புனிதம் நிறைந்த புண்ணிய நாளாக நூல்களில் பேசப்படுகின்றன.

**தாட்சாயினி அவதரித்த திருநாள் மாசிமகம்.**

மாசி மாதத்திலே மக நட்சத்திரத்திலே தக்கன் என்பவனுடைய மகள் தாட்சாயினி அவதரித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தக்கன் தனது மகளாகச் சிவபெருமானின் சக்தியாகிய உமா தேவியார் வந்து பிறக்க வேண்டும் என்று வேண்டிப் பெருந்தவம் இயற்றினான்.

தக்கன் பிரமனின் புத்திரர்களின் ஒருவன் என்றும், பிரம்மனின் கட்டை விரலிற் பிறந்தவன் என்றும் கூறுவர். தக்கன் செய்த தவத்தைக் கண்ட சிவபெருமான் அவன் முன் தோன்றிய பொழுது, தான் உமாதேவியாரை மகளாகப் பெறவும், சிவபிரானை மருமகனாக அடையவும் வரம் வேண்டினான். தக்கன் கேட்ட வரத்தை மறுக்காமல் சிவன் கொடுத்தார். உமாதேவியாரும் வந்து தக்கனுக்கு மகளாகப் பிறந்தார். தெய்வக் குழந்தைக்குத் தாட்சாயினி எனத் தக்கன் பெயரிட்டு அன்போடு வளர்த்துச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்வித்தனர்.

தாட்சாயினி மாசிமகத்தன்று திருவவதாரம் செய்தமையினால் தேவியின் பிறந்த தினமான இப் புனிதநாள் மகத்துவம் பெறுகிறது.

**கும்ப கோணத்தில் மாசிமக உற்சவம்**

தென்னிந்தியாவில் கும்பகோணத்தில் மாசி மக உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகம் வருகிறது. அப் புண்ணியமான திருநாளில் கும்பகோணத்தில் புனித நதியில் தீர்த்தமாடித் தங்கள் பழம் வினைகளைப் போக்கி உய்வு பெற்றுக்கொள்ளப் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் எதிர்பார்த்திருப்பர்.

வட இந்தியாவில் "கும்பமேளா" எனும் விழா வெகு விமர்சையாக இக் காலப்பகுதியில் கொண்டாடப்படுகிறது. கும்ப மாதம் என்பது "மாசிமாதம்" எனவே "கும்பமேளா" என்றால் மாசி மாதத்தில் நடைபெறுகின்ற விழா எனப் பொருள்படும்.

**தீர்த்தமாடி பாவங்கள் போக்க வல்ல திருநாள்.**

தீர்த்த மாடி பாவங்களைப் போக்க வல்ல திருநாள் மாசிமகம். கங்கையில் தீர்த்தமாடிப் பாவங்களைப் போக்குவர். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றின் மகிமைகளைப் பற்றி புராணங்கள் கூறுகின்றன. தீர்த்த விசேடம் பெற்றுள்ள திருத்தலங்கள் பல உள்ளன. அங்குள்ள நதி, ஆறு, குளம், கிணறு, கடல் ஆகியவற்றின் தீர்த்த விசேடம் இத்தலங்களுக்குத் தனிச்சிறப்பைத் தருகின்றன. இன்ன இன்ன புண்ணிய காலங்களில் இத் தீர்த்தங்களில் நீராடினால் இகபர சுகங்களைப் பெறலாம்.

மாசிமகமும் தீர்த்தத்தோடு தொடர்புள்ள புனித நாளாகக் கொள்ளப்படுகின்றது. கும்ப கோணம் மாசி மகத் தீர்த்தத்திற்கு விசேடம் பெற்றுள்ள திருத்தலம் ஆகச் சொல்லபடுகிறது. கங்கை, கோதாவரி, நர்மதை, சிந்து, சரஸ்வதி, மதுரா, மாயா, அவந்தி, கோடிதீர்த்தம், யமுனை, பாபநாசம், சேது போன்ற தீர்த்தங்களும் தீர்த்த மகிமை பெற்றவை. இத்தகு தீர்த்தங்களில் மாசி மகத்தன்று தீர்த்தமாடுவது மேலும் பல சிறப்புக்களைத் தரும்.

**வர்ண பகவானுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோசம் விடுபட்ட திருநாள் மாசி மகம்**

ஒருமுறை சமுத்திர ராஜனான வருண பகவானுக்குப் பிரம் மஹத்தி தோஷம் ஏற்பட்டு விட்டது. அப்பொழுது அவர் கட்டப்பட்டுக் கடலில் போடப்பட்டிருந்தார். வருண பகவான் தொழிற் படாமையினால் உலகில் மழையின்றி வரட்சியும், பஞ்சமும் ஏற்பட்டது. உயிர்கள் துன்புற்றன. தேவர்கள் உடனே முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானிடம் சென்று வருண பகவானை விடுவிக்கும்படி வேண்டிப் பிரார்த்தித்தனர். சிவபிரானும் இரக்கங் கொண்டு வருண பகவானை விடுவித்து அருளினார். வருணபகவான் விடுதலை பெற்ற பெருநாளும் மாசி மகம்தான். இத்தகு மகத்துவமான நாளில் இந்துக்கள் ஆகிய நாமும் புனித தீர்த்தங்களில் நீராடி மகிமை பெறுவோம்.

---

# செபமாலைத்தாசர் துறவறசபையை இந்தியாவில் வாழ்ந்து காட்டி அறிமுகப்படுத்தியவர்

# அந்தோனி சூசைநாதர் அடிகளார்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

*ஊடக வருகை விரிவுரையாளர்,*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*

ஜனவரி 2020 அன்று யாழ் ஆயர் கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்ட நிகழ்வு பற்றிய விடயங்களை முடிவுக்குக் கொண்டு வரும் கூட்டம் ஒன்று யாழ் ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் முக்கிய பிரமுகராக உறோமாபுரியில் இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக செயற்படும் றோலண் அடிகளார் கலந்து கொண்டார். மேற்படி கூட்டத்தில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இறையடியரர் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்காக யாழ் மறைமாவட்டத்தில் செபிக்குமாறு அழைப்பு விடுத்தரர் என உதயன் கிறிஸ்தவ ஞாயிறு அன்பு நெஞ்சங்களுக்கு அண்மையில் தெரிவித்திருந்தோம்.

செபமாலைத்தாசர் துறவறசபையை இந்தியாவில் வாழ்ந்து காட்டி அறிமுகப்படுத்திய அந்தோனி சூசைநாதர் அடிகளாரை திருத்தந்தை பிரான்சிஸ் இறையடியார் நிலைக்கு உயர்த்தியிருக்கிறார். இந்நிகழ்வு தூத்துக்குடி மறைமாவட்டப் பேராலயத்தில் ஆயர் யுவோன் அம்புரோஸ் தலைமையில் திருப்பலியோடு கொண்டாடப்பட்டது. அந்தோனி சூசைநாதர் அடிகளரர் பற்றியே இவ்வாக்கம் பேசுகிறது. செபமாலைத்தாசர் சபையின் மாகாண முதல்வராக மூன்று தடவைகள் பணியாற்றியவரும் செபமாலைத்தாசர் சபையின் உயர் தலைவராக 2006 முதல் 2012 வரை பணியாற்றியவருமான ஏ.எம்.ஸ்ரிபன் அடிகளரர் இவ்வாக்கத்திற்கான தகவல்களை வழங்கினார்.

**அந்தோனி சூசைநாதர் அடிகளரர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு**

18.12.1882இல் அந்தோனி சூசைநாதர் அடிகளரர் பிறந்தார். 17.12.1910இல் குருத்துவ அருட்பொழிவு பெற்றார். புனித சூசையப்பர் பேராலயம், திண்டுக்கல் மரிய மதலேனம்மாள் ஆலயம், அய்யம்பிட்டி திரு இருதய ஆண்டவர் ஆலயம், பஞ்சம்பட்டிபுனித அந்திரேயா ஆலயம், உவரி புனித தோமையார் ஆலயம், கூடுதாழை பனிமயமாதா பேராலயம், தூத்துக்குடி ஆகிய பங்குகளில் பணியாற்றிய பினனர் குருத்துவ வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை 1935ஆம் ஆண்டு கொண்டாடினார்.

பின்னர் புனித சவேரியரர் ஆலயம், பன்னைகாயல் புனித யாகப்பர் ஆலயம், மணப்பாடு ஆகிய பங்குகளில் பணியாற்றி மணவை வட்டார முதன்குருவாக பணியாற்றி 1939ஆம் ஆண்டு தோலக்கட்டி துறவு சபையில் சேர்ந்தார். இதன் பின்னர் செபமாலைத்தாசர் சபையில் நவதுறவு முதல் வார்த்தைப்பாடு இறுதி வார்த்தைப்பாடு என்பவற்றை எடுத்து 1944இல் பாத்திமாகிரி ஆசிரமத்தையும் 1952இல் மணப்பாறை, புஷ்பவனம் ஆசிரமத்தையும் தொடங்கினார். 1960ஆம் ஆண்டு குருத்துவ பொன்விழா கொண்டாட்டிய பின்னர் 1968இல் இறந்தார்.



திருத்தந்தை பிரான்சிஸ் அந்தோனி சூசைநாதர் அடிகளாரை இறையடியார் நிலைக்கு உயர்த்தல்

அருள்பணியாளரும் துறவியுமாகிய அந்தோனி சூசைநாதர் அவர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் இறையடியார் நிலைக்கு உயர்த்தியிருக்கிறார். நீண்டகாலமாக இறையடியார் அந்தோனி சூசைநாதர் அவர்கள் வடக்கன் குளம் அருகிலுள்ள பாத்திமாகிரி ஆசிரமத்தில் செபமாலைதாசர் துறவியாக வாழ்ந்தவர் என்றே அதிகமாக அறியப்பட்டவர். திருச்சி மறைமாவட்டத்திலுள்ள திண்டுக்கல் (1910-12) அய்யம்பிட்டி (1912-16), பஞ்சம்பட்டி (1916-1921) போன்ற பணித்தளங்களில் மிகச் சிறப்பாகவே இவர் பணியாற்றியிருக்கிறார்.

**இறையடியார் அந்தோனி சுசைநாதர் வாழ்வும் பணியும் என்ற நூல்**

இறையடியார் அந்தோனி சுசைநாதர் வாழ்வும் பணியும் என்ற நூலை எழுதி தனிநாயகம் பதிப்பகம் 2017ஆம் ஆண்டு வெளியிட்ட ரா.பி.சகேஸ் சந்தியா அடிகளார் சம்பிட்டி பங்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு.லூர்துசாமி என்ற பண்டாரம் வாத்தியாரை நேர் காணல் செய்து தெரிவிக்கும் சில விடயங்களாவன;

அந்தோணி சூசைநாதர் அடிகளாருடைய அருமை பெருமைகளை எடுத்துச் சென்னார். இங்குள்ள கோவிலில் உள்ள பீடப் பணியாளர் இப்பங்கின் பங்குத்தந்தையாக இவர் இருக்கும் போது தூத்துக்குடியிலுள்ள சிலரது உதவியால் நிறுவப்பட்டது. பலகாலம் மழையின்றி மக்கள் பசியும் பட்டினியுமாக வாடிய சமயத்தில் வடக்கன்குளம் ஆசிரமத்திலிருந்து பணியாளரை இங்கு அழைத்து வந்த போது மழை கொட்டித் தீர்த்தது என்றார். அடிகளாருடைய நேர்மைமிக்க மன்றாட்டு, ஒரு பக்கத்தில் இவர் இறைவன் மீது வைத்திருந்த உறுதியான நம்பிக்கையையும், மறுபக்கம் மக்கள் மீது வைத்திருந்த அன்பு அக்கறையையும் காட்டுகிறது. இவர் நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்ட இறைவன் மக்களுக்கு மழையைத் தந்தார்.

திருச்சி மறைமாவட்டத்திலிருந்து 1923ம் ஆண்டு தூத்துக்குடி மறைமாவட்டம் பிரிந்தது. இதற்கு முன்பே அந்தோனி சூசைநாதர் அவர்கள் 1921ஆம் ஆண்டிலிருந்து உவரியில் பங்குத்தந்தையாகப் பணியாற்றியிருக்கிறார். தூத்துக்குடி மறைமாவட்டம் 1929ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பணி செய்திருக்கிறார். குடிப்பழக்கத்தால் மக்கள் வாழ்வு சீரழிந்து கிடந்தது. இங்கு மதுவிலக்கு சபையைத் தொடங்கியிருக்கிறார். இங்குள்ள மக்கள் அன்னை மரியா மீது மிகுந்த பற்றுள்ளவர்கள் என்பதை அடியார் கண்டு உணர்ந்தார். எனவே மாதாவை வணங்க கோவிலுக்குள் வர நான் இனி மது அருந்த மாட்டேன் என்ற வாக்குறுதியை சத்தியத்தை மக்களிடமிருந்து கேட்டுப் பெற்றிருக்கிறார். அவர் அன்று தொடங்கிய அமலோற்பவ மாதா மதுவிலக்குச் சபை இன்று 31 பங்குகளுக்கு மேல் பரவி நூற்றாண்டு கண்டிருக்கிறது என்பதை உவரி அந்தோனிசாமி சுவைபட விளக்கிச் சொல்கிறார்.

இதுபோல கூடுதாழை (1929-1930) தூத்துக்குடி பனிமய மாதா (1931-1936), மணப்பாடு, புனித யாகப்பர் ஆலயம் (1936-1938) பங்குகளிலும் ஆக்கபுர்வமாகவும் படைப்பாற்றலோடும் பணியாற்றியிருக்கிறார். அவர் மணப்பாட்டில் பணியாற்றிய போதுதான், செபமாலைதாசர் துறவு மடத்தில் சேர உள் உந்துதல் பெற்றார். தமது 57 வது அகவையில் (1882-1939) துறவு மடத்தில் நவசந்நியாசம் புகுந்து 61வது வயதில் இறுதி அர்ப்பணம் கொடுத்தார். பின்பு வடக்கன்குளம் பாத்திமாகிரி (1944) மணப்பாறை புஷ்பவனம் 1952) போன்ற இடங்களில் துறவு மடங்களைத் தொடங்கினார். தூத்துக்குடி பண்டாரம்பட்டியில் இருக்கும் பெண்களுக்கானத் துறவுமடமும் இவரால் 1954 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதே.

அந்தோனி சூசைநாதர் அடிகளாரின் துறவு வாழ்வு குறித்து அவரை அறிந்தவர்களிடம் தமிழகத்திலும் இலங்கையிலும் நேர்காணல் செய்தோம். அனைவரும் ஒருமனப்பட்டு சொன்னது இவர் துறவு வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக மேல்வரிச் சட்டமாக வாழ்ந்தார். இவர் துறவு வார்த்தைப்பாடுகளைத் துல்லிய மாகக் கடைப்பிடித்தார். ஏழ்மை வார்த்தைப்பாட்டின்படி இவர் மிக எளிமையாக வாழ்ந்தவர். ஏழைகளோடு தம்மை அய்க்கியப்படுத்திக் கொண்டவர். அவர்களது சேவையில் தம்மைக் கரைத்துக் கொண்டார். இவரது கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடு இறைவனுடைய திருவு ளத்தை இறைவேண்டலில் தேர்ந்து தெளிவதிலும் மக்களுடைய குரலில் இறைகுரலைக் கேட்பதிலும் அதைச் செயலாக்குவதிலும் அடங்கியிருந்தது. இவரது பணி இவரது இறைவேண்டலுக்கு பொருள் அர்த்தம் தந்தது.

இவரது இறைவேண்டல் இவரது பணிக்கு இறைப்பரிமாணம் தந்தது. இவரது மணத்துறவு உடல் சார்ந்த தூய்மையையும் கடந்து, அது இதயம் நிறை அன்பிலும் நீதி விடுதலைச் செயல்பாட்டிலும் வெளிப்பட்டது. சோதிக்காவிளை, மகாதேவன்குளம், வாகைநேரி போன்ற தளங்களில் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களுக்கு இவர் செய்த விடுதலைப் பணிகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

# காற்றில் பறந்து விட்டது கோத்தாபய வாக்குறுதி

## சரத் பொன்சேகா கூறுகின்றார்

ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டார். இப்போது பொதுத் தேர்தலில் ஆட்சியை கைப்பற்ற புதிய வாக்குறுதிகளை கொடுக்கின்றார். ஆனால் இவை அனைத்துமே பொய்யானவை என்பதை மக்கள் உணர வேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டு வருகின்ற நிலையில் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மற்றும் அரசியல் நகர்வுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முர ண்பாடுகள் வெகுவிரைவில் தீர்க்கப்படும். அதில் மக்கள் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. இப்போது கருத்து முரண்பாடுகள் இருக்கின்றன என்பதற்காக கட்சி பிளவுபடும் என்ற எண்ணப்பாடு கொள்ளத் தேவையில்லை. ஜனநாயக கொள்கை உள்ள கட்சியாக நாம் சகலரது கருத்துகளுக்கும் செவிமடுக்கின்றோம்.

இந்த முறை தேர்தலில் கூட்டணியாக பல கட்சிகளை இணைத்துக்கொண்டு களமிறங்குவோம். அரசை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மக்களின் வாக்குகளை கேட்டு நிற்கின்றோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் அவரது அணியினரும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் என்ன என்பதை தற்போது மறந்துள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ மக்களுக்கு கூறிய விடயங்கள் இன்று கைவிடப்பட்டுள்ளன. கொடுத்த வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன. விலை குறைப்பு, சம்பள கொடுப்பனவுகள், வேலைவாய்ப்புகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்படும், கடன்கள் அடைக்கப்படும் என கூறினார். ஆனால் இவற்றில் ஒன்றேனும் நிறைவேற்ற ப்படவில்லை. இந்த ஆட்சியின் போதும் மக்கள் வீதியில் இறங்கி போராடும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. மக்கள் இவர்களை நம்புவதில் எந்தப் பயனும் இல்லை. நாம் கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டுக்கான கடனை அடைத்துள்ளோம். பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்தும் நாட்டை கடன் நெருக்கடிக்குள் தள்ளும் சூழலை உருவாக்கவில்லை. ஆனால் தற்போது அவ்வாறல்ல, மிகக் குறுகிய காலத்தில் அரசு வேலைத்திட்டம் ஒன்று இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

இந்த முறை பொதுத் தேர்தலில் மக்கள் சரியான தீர்மானம் எடுக்க வேண்டும். இந்த நாட்டை இராணுவ ஆட்சிக்குள் தள்ள முயற்சிக்கும் தலைவர்களை நம்பி ஏமாறாது ஜனநாயகத்தை பலப்படுத்தும் அணியின் பக்கம் மக்கள் கைகோர்க்க வேண்டும். நாம் சகல இன மத மக்களின் கட்சிகளையும் உள்ளடக்கி சகல மக்களையும் பாதுகாக்கும் ஆட்சியை உருவாக்க முயற்சிக்கின்றோம். மாறாக ராஜபக்ஷவினரின் தனி சிங்கள பௌத்த கொள்கை எனக் கூறிக்கொண்டு சிறுபான்மை மக்களை அடக்குமுறைக்குள் தள்ளும் நடவடிக்கைகளை நாம் ஒருபோதும் செய்யவில்லை. என்றார். (எ)

## விலைகளை குறைப்பதில் அரசு கவனம்

அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைப்பது தொடர்பாக அரசு கவனம் செலுத்தியுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடிய வாழ்க்கைச் செலவுக் குழுவில் இது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிகரிப்போருக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் உற்பத்தியாளர்களின் அறுவடைகளை கொழும்பு உள்ளிட்ட முக்கிய இடங்களுக்கு எடுத்துச்செல்வதற்கு தேவை

# கடலட்டை, சங்கு பிடிப்பை கட்டுப்படுத்த கோரிக்கை

## முல்லைத்தீவு கடற்றொழில் கிராமிய அமைப்புக்கள் மனு

*முல்லைத்தீவு, மார்ச் 8*

*வெளிமாவட்டங்களிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்து கடல் அட்டை மற்றும் சங்கு பிடிப்பவர்களால், மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று தெரிவித்த கரையோர மீனவ அமைப்புக்கள், இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி அதிகாரிகளிடம் மனுக்கொடுத்துள்ளன.*

மாத்தளன், பொக்கணை, இரணைப்பாலை, ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு, தேவிபுரம், சுதந்திரபுரம் கடற்றொழில் கிராமிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச செயலாளர், மாவட்டச் செயலர், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளுக்கு கடந்த வியாழக்கிழமை மனுக் கொடுத்துள்ளனர்.

மனுவில், அம்பலவன் பொக்கணை கிராமத்தில் வெளி மாவட்டத்திலிருந்து கடந்தகாலங்களில் பிரதேச செயலரின் அனுமதி இன்றி வாடி அமைத்து கடல் அட்டை, சங்கு பிடித்தார்கள். எமது பிரதேசத்தில் கடற்றொழில் செய்வதாயின் பிரதேச செயலகத்தில் அனுமதிபெற்று தொழில் செய்ய வேண்டும். ஆனால் வெளிமாவட்டங்களிலிருந்து வந்தவர்கள் இதனை பெறாமலே கடலட்டை, சங்கு என்பனவற்றைப் பிடி த்தார்கள்.

இவர்களின் வருகையால் எமது மக்களின் வாழ்வாதார தொழில்களான கரைவலை மற்றும் சிறு கைத்தொழில்கள் பாதிப்படைந்துள்ளன. இதேவேளை, கிரா மத்தில் கலாசார சீர்கேடு, போதைப் பொருள் பாவனைகளும் சூழல் மாசடைதல், பாலியல் துஷ்பிரயோகங்களும் நடைபெற்று வருகின்றன.

கிராம மக்களின் நலன் கரு அவர்களின் வாழ்வாதாரத் மேம்படுத்தவும் இனிவரும் கால களில் வெளிமாவட்டங்க இருந்துவரும் கடலட்டை, சங் என்பன பிடிப்பவர்களைத் த செய்யுமாறும் கேட்டுக்கொள்கி றோம் என்று கோரியுள்ளன

"இது குறித்து சம்பந்தப்பட்ட க றொழில் பங்குதாரர்களையு அதிகாரிகளையும் அழைத் மாவட்டச் செயலகத்தில் கூட் நடத்தி தீர்மானம் எடுக்கப் என்று முல்லைத்தீவு மாவட்ட திக செயலர் க.கனகேஸ் தெரிவித்தார். (சு

## வல்லப்பட்டை எண்ணெய் கடத்த முயன்றவர் கைது

வல்லப்பட்டை எண்ணெயை சட்டவிரோதமான முறையில் நாட்டிலிருந்து கடத்திச் செல்ல முற்பட்ட சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்கவில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த வல்லபட்டை எண்ணெயின் பெறுமதி சுமார் 10 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று டுபாய் நோக்கிப் பயணிக்கவிருந்த விமானத்தில் இவற்றைக் கடத்திச் செல்ல முயன்றபோதே, விமான நிலைய சுங்கப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அந்த நபரிடமிருந்து நான்கு போத்தல்களில் அடைக்கப்பட்ட 625 கிராம் வல்லப்பட்டை எண்ணெயையும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## இத்தாலி இராஜதந்திரியும் யாழ்.முதல்வரும் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட்டுக்கும் இலங்கைக்கான இத்தாலி நாட்டின் தூதுவர் ரிற்றா ஜி.மனெல்லா ஆகியோருக்கிடையிலான விஷேட சந்திப்பு மாநகர முதல்வர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போரின் பின்னரான வடக்கு கிழக்கு மக்களின் நிலைமைகள் தொடர்பாக தூதுவர் வினவினார். அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். தமிழ் மக்களின் ஒற்றுமையையும், நாடாளுமன்றில் உள்ள பலத்தையும் சிதைக்க புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ் உதிரிக் கட்சிகளின் போக்குகள் குறித்து மக்கள் மிகுந்த தெளிவுடனே இருக்கின்றார்கள் என்பதை அவருக்குத் தெரிவித்தேன் என்று முதல்வரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்திப்பில் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், மாநகர செயலாளர் அ.சீராளன் ஆகியோர் கலந்து

## அரச நிறுவன நியமனத்தி அரசியல் விருப்பு நீக்கமா

### ஜனாதிபதி கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 8

அரசியல் ரீதியாக தமக்கு விருப்பமானவர்களு பதவிகளை வழங்குவதற்கான இடமாக அரச வனங்களைப் பயன்படுத்திய யுகத்தை மாற் தற்கு முடிந்துள்ளது என்று ஜனாதிபதி கோத்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனியார் நிறுவனங்களைப் பலப்படுத்தி அவற் இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டுவந்த அ வம் வாய்ந்தவர்கள் இன்று எவ்வித சலுகை மின்றி அரச நிறுவனங்களைக் கட்டியெழுப் தற்கு தம்முடன் இணைந்திருக்கின்றனர் என ஜனாதிபதி தெரிவித்தார்.

சில அரச நிறுவனங்களுக்குப் புதிதாக நியமி பட்டுள்ள தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் உறுப்பினர்களுடன் ஜனாதிபதி அலுவலகத் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்பே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டு மக்கள் தனக்கு விடுத்த சவாலை வெ கொள்வதற்கு அனைத்து அரச அதிகாரிக ஒன்றிணைய வேண்டும்.

அரச நிறுவனங்கள் பலமாகவும் முறையாக மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதன் மூ பல்வேறு பிரச்சினைகளுக்கு வெற்றிகர முகங்கொடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி வித்தார் என்று அவருடைய ஊடகப் பிரிவு வித்தது.

இதேவேளை, இலங்கை வங்கியின் பொது மையாளர் அரசியல் காரணங்களால் நீக்கப்ப என்றும் புதிதாக மற்றொருவர் நியமிக்கப்ப என்று தெரிவித்த வங்கியின் ஊழியர் சங்கத் அரசின் இத்தகைய செயற்பாட்டைக் கண் நேற்றுமுன்தினம் நாடு முழுவதும் பணிப்பு ணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்று குறிப்பிட்ட

# கோத்தாபயவின் அரசை மண்டியிட வைப்போம்!

## புதிய கட்சியை ஆரம்பித்து குமார வெல்கம சூளுரை

கொழும்பு, மார்ச் 8

எதிர்க் கட்சிகளெல்லாம் ஓரணியில் திரண்டு பொதுத் தேர்தலை எதிர்கொண்டால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசை மண்டியிட்டு மண்கௌவ வைக்கமுடியும் என்று புதிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் குமார வெல்கம சூளுரைத்துள்ளார்.

புதிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை புறக்கோட்டையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு தலைமையேற்று உரையாற்றுகையிலேயே குமார வெல்கம இவ்வாறு சூளுரைத்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் ஆசியுடனேயே நாம் புதிய கட்சியை ஆரம்பித்துள்ளோம். எனவே, தற்போது வீழ்ச்சியை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை என்றாவது ஒருநாள் மீட்டெடுப்போம். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பாதுகாத்தார். அதன் பின்னர் சந்திரிகா அம்மையார் வழிநடத்தினார். மஹிந்த ராஜபக்ஷ தலைவராக இருக்கும்போதும் கட்சி சிறப்பாக செயற்பட்டது.

2015 ஆம் ஆண்டிலேயே எமது கட்சி காட்டிக்கொடுக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே நானும் வெளியேறினேன். இன்று சுதந்திரக்கட்சி எந்த நிலையில் உள்ளது? கட்சியின் தலைவரையே மாற்றுமாறு கட்சியிலுள்ளகீழ் நிலை உறுப்பினர்கள் விமர்சிக்கின்றனர்.

அதேவேளை, பலமானதொரு எதிரணியை உருவாக்குவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால் அரசாங்கத்தை மண்டியிடவைக்கமுடியும். நாடாளுமன்றத்தில் இடைக்கால கணக்கறிக்கைவந்தபோது எதிர்க்கட்சிகளின் பலத்தை காட்டினோம். பொதுத் தேர்தலிலும் ஒன்றாக செயற்பட்டால் அரசை ஆட்டங்காண வைக்கமுடியும். என்றார். (எ- 44)

# கம்மன்பிலவின் நூல் வெளியீடு!

கொழும்பு, மார்ச் 8

பிவிதுறு ஹெல உருமயவின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எழுதிய 'மஹிந்த சுலங்கின் கோடாபிஷேகயட் நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நடைபெற்றது.

2015 ஜனவரி 8 ஆம் திகதி அதிகாரத்துக்கு வந்த அரசை மாற்றி கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்கும் வரையிலான பயணம் 'மஹிந்த சுலங்கின் கோடாபிஷேகயட' நூலின் உள்ளடக்கமாகும்.

நூல் மகாசங்கத்தினருக்கு கையளிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதிக்கும், அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் வாசுதேவ நாநாயக்கார ஆகியோருக்கும் கையளிக்கப்பட்டன.

கலாநிதி புஞ்சி நிலமே மீகஸ்வத்த நூல் பற்றிய அறிமுகத்தை முன்வைத்தார். அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார மற்றும் விமல் வீரவன்ச தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

நாரபிட்டிஹேன்பிட்ட அபயராமையின் விகாராதிபதி சங்கைக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர், மகாசங்கத்தினர், அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)

# மட்டு. மாவட்டத்துக்கு 4 எம்.பிக்கள் தேவை!

## ஒன்றுபட்டு வாக்களிக்குமாறு துரைரெத்தினம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் விகிதாசார அடிப்படையில் 4 தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு தமிழ் மக்கள் தயாராக வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் இரு தடவைகள் நாடாளுமன்றத் தேர்தலில் 4 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பல தடவைகள் தேர்தல்களில் நாம் விகிதாசாரத்துக்கு ஏற்றவாறு தமிழ் பிரதிநிதித்துவம் பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த மாவட்டத்துக்கென 5 தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். இனவாத அரசின் கைக்கூலிகள் வாக்குகளைப் பிரிப்பதற்காகத் தேர்தலில் வேட்பாளர்களாக இறங்கித் தமிழ் வாக்குகளைப் பிரிப்பதாலேயே தமிழர்களுடைய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைகின்றது.

தமிழர்களாகிய நாங்கள் நான்கு நாடாளுமன்ற தமிழ் பிரதிநிதிகளைப் பெறவேண்டுமாயின் கடந்த காலத்தில் விட்ட தவறுகளை இத் தேர்தலிலும் விட்டுவிடக் கூடாது. முதலில் ஒற்றுமையாகத் தேர்தலில் களமிறங்க வேண்டும். என்றார். (எ-150)

# தேர்தல் ஆணைக்குழுவின் கடமைக்காக சுற்றுநிருபம்!

## கண்டிக்கின்றார் ஹூல்

யாழ்ப்பாணம், மார்ச் 8

தேர்தல் ஆணைக்குழுவின் கடமை தொடர்பில் ஜனாதிபதி செயலகம் சுற்று நிருபம் அனுப்புவது ஆணைக்குழுவின் தரத்தைக் குறைப்பதாகவே கருதப்படவேண்டியுள்ளதாக ஆணைக்குழுவின் உறுப்பினர் இரட்ணஜீவன் எச். ஹூல் தெரிவித்தார்.

தேர்தல் பணிக்கு வழங்கப்படும் வாகனங்களின் விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலகம் கோரியிருப்பது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் கடமைக்காக தேவைப்படும் வாகனங்களை அரச திணைக்களங்கள், செயலகங்களில் இருந்து கோரிப்பெறுவது தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அது ஒரு வழமையான செயற்பாடும்கூட. இம்முறை அவ்வாறான விவரங்களைத் தருமாறு கோருவது ஆணைக்குழுவின் அதிகாரத்தையும், தரத்தையும் குறைப்பதாகவே கருதப்பட வேண்டியுள்ளது - என்றார். (ம-105)

# போதையால் வரும் ஆபத்து மாணவருக்குக் கருத்தமர்வு



மன்னார், மார்ச் 8

பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் ஆபத்துக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்தமர்வு மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தேசிய சமாதானப் பேரவை மற்றும் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் அன்ரன் மெடோசன் பெரேரா தலைமையில் இது நடைபெற்றது.

செயலமர்வில் மடு வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட 15 பாடசாலைகளைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் போதைப் பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பாக மாணவர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டிய விடயங்கள், சட்ட ரீதியான ஏற்பாடுகள் தொடர்பாக சட்ட ஆலோசனைகள் மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்கு வளவாளர்களாக மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், பொது சுகாதார பரிசோதகர், பிரதேச செயலக நன்னடத்தை அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

பயிற்சியில் கலந்துகொண்ட மாணவர்கள் செயலமர்வு தொடர்பான சமர்ப்பணங்களை பாடசாலை பொது ஒன்றுகூடலில் ஏனைய மாணவர்கள் முன்னிலையில் சமர்பிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-56)

# எட்வின் முன்பள்ளி விளையாட்டு விழா



முல்லைத்தீவு, மார்ச் 8

முல்லைத்தீவு எட்வின் முன்பள்ளியின் இந்த வருடத்துக்கான விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட பிரதம கணக்காளர் றெஜினோல்ட் கலந்துகொண்டார். சிவில் பாதுகாப்புத் திணைக்கள முல்லை மாவட்ட முன்பள்ளிகளின் மாவட்ட இணைப்பாளர் சிவநேசன், ஐ.நா இணைய முகாமைத்துவ பணிப்பாளர் நவநீதன், மருத்துவர் விதுரன், சட்டத்தரணி திருமதி சுபா, பிரதேச சபை உறுப்பினர் இமக்குலேற்றா, முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலை உப அதிபர் திருமதி உதயதர்சிகா ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ம)

# அனைவரையும் இணைத்து பயணிப்பதற்குச் சம்மதம்!

## அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 8

பலமான சமூக கட்டமைப்பு ஒன்றையும், உறுதியான பொருளாதார கொள்கையொன்றையும் உருவாக்கி நாட்டைக் கட்டியெழுப்ப தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து பயணிக்கும் கொள்கையை வகுக்க தயாராக இருக்கின்றோம். தேசிய மக்கள் சக்தி பலமான எதிர்க்கட்சியாக உருவாக்க மக்களின் ஆதரவைக் கோருகின்றோம் என்று தெரிவித்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த முறை தேர்தலில் சகல மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி போட்டியிடும். இந்தத் தேர்தலில் எமக்கு இலக்கும், நோக்கமும் உள்ளன. இந்த ஆட்சியும் இதற்கு முன்னர் முன்னெடுத்த ஆட்சியினரும் தம்மால் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியாது என்பதை நிரூபித்துள்ளனர்.

இந்த முறை ஜனாதிபதி தேர்தலின் போதும் இதற்கு முன்னரும் ஆட்சியாளர்கள் மக்களுக்கு பல வாக்குறுதிகளை கொடுத்தனர். இந்தக் காலத்தில் இந்த நாட்டின் பொருளாதார கொள்கையும், மக்களின் சமூக தன்மைக்கும் அமைய இனியும் இந்த ஆட்சியாளர்களுடன் முன்னோக்கிச்செல்லமுடியாது என்பது தெரிந்து விட்டது.

நாட்டின் ஆரோக்கியமான சமூகமொன்றையும், பலமான பொருளாதார கொள்கையையும் கொண்ட புதிய சமூக கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க நாம் தயாராக உள்ளோம்.

அதேபோல் நாடாளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சி ஒன்று அவசியமாகின்றது. அதற்கான பலமான அணியொன்றை எமக்கு வழங்க வேண்டும் என மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். - என்றார். (எ)

## சூழலைப் பாதிக்காது கருங்கல் அகழுங்கள்

### பிரதமர் பணிப்பு

கொழும்பு, மார்ச் 8

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் கருங்கல் அகழ்வை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

அரச காணிகளில் கருங்கல் அகழ்வு தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் தனியார் காணிகளில் கருங்கல் அகழ்வு தொழிலில் ஈடுபடுபவர்களின் பிரச்சினை தொடர்பில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கருங்கல் அகழ்வு அனுமதி பத்திரம் வழங்குதல், குத்தகை வழங்குதல் மற்றும் அறவிடுதலின்போது நேரியல் முறையில் குழு அமைக்கப்படும். குழு அறிக்கை இன்னும் இரண்டு வாரங்களில் பெறப்படும்.

அரச காணிகளில் மேற்கொள்ளப்படும் கருங்கல் அகழ்வு மற்றும் தனியார் இடங்களில் மேற்கொள்ளப்படும் கருங்கல் அகழ்வுக்கு குத்தகை வழங்குதல் மற்றும் அறவிடுதலின் போது முறையான மற்றும் இலகுவான முறையை ஏற்படுத்த வேண்டும்.- என்றார். (எ)

## சுனாமி ஒத்திகை நிகழ்வு



முல்லைத்தீவு, மார்ச் 8

பாடசாலை மாணவர்களுக்கான சுனாமி ஒத்திகை நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மாவட்டத்தைச் சேர்ந்த சுனாமி அனர்த்த ஆபத்துள்ள 6 பாடசாலைகளில் இந்த ஒத்திகை நிகழ்வு நடைபெற்றது.

நிழ்வில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம், முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலை, கள்ளப்பாடு அ.த.க பாடசாலை, உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து மாணவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு பிரதான இடைத்தங்கல் முகாமாக பிரகடனப்படுத்தப்பட்ட முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலையில் ஒன்றுசேர்க்கப்பட்டனர்.

நிகழ்வில் இடர் முகாமைத்துவ பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர், முப்படையினர் மற்றும் பொலிஸ், இ.போ.சபையினர், மருத்துவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-222)

## சீனாவுக்கான விமான சேவை நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 8

இலங்கை - சீனாவுக்கு இடையிலான விமான சேவைகளை இந்த மாதம் 10ஆம் திகதி முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை தற்காலிகமாக நிறுத்தவுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் நேற்று அறிவித்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 30 வரையில் சவூதி ஜெத்தாவுக்கான விமான சேவைகளை நிறுத்துவதற்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானசேவை நிறுவனம் தீர்மானித்துள்ளது. (எ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

முல்லைத்தீவு, மார்ச் 8

முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலய பழைய மாணவர்சங்க பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-222)

## மாமனிதர் சிவநேசனின் 12ஆவது நினைவேந்தல்



மருதங்கேணி, மார்ச் 8

மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் வடமராட்சி நெல்லியடி மாலிசந்தி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் த.துசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

பொது ஈகச் சுடர்களை சிவநேசனின் புதல்விகள் ஏற்றினர். அவருடைய துணைவி சோதிமலர் மலர்மாலை அணிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஆனந்தராசா உட்பட பலரும் மாலை அணிவித்தனர்.

முன்னணியின் சட்ட ஆலோசகர்களான க.சுகாஸ், சி.காண்டீபன் ஆகியோர் உரையாற்றினர். முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர். (த-60)

## கொரோனா விழிப்புணர்வு



வவுனியா, மார்ச் 08

வவுனியாவில் 'கொரோனா' வைரஸ் தாக்கத்திலிருந்து தப்பிப்பது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் இ.நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வவுனியா மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.ஜே.எர்சன் றோய் கலந்துகொண்டு விளக்கங்களை வழங்கினார். (ம-110)

# 68 ஆண்டுகளுக்குப் பின்னர் சரணடைந்த சுதந்திரக்கட்சி

கொழும்பு, மார்ச் 8

**68 ஆண்டுகளுக்கு பிறகு 'தலைமை' அந்தஸ்தை இழந்து, பிரதமர் வேட்பாளர் பதவியையும் பறிகொடுத்து 'சரணடைந்த' நிலையில் இம்முறை பொதுத்தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.**

1952ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் கை சின்னத்திலும், கடைசியாக 2015ஆம் ஆண்டுநடைபெற்ற தேர்தலில் வெற்றிலை சின்னத்திலும் போட்டியிட்டது.

'கதிரை' மற்றும் 'வெற்றிலை' ஆகிய சின்னங்களின்கீழும் சுதந்திரக்கட்சி பொதுத்தேர்தல்களை எதிர்கொண்டிருந்தாலும் - கூட்டணியின் தலைமைப் பதவி , பிரதமர் வேட்பாளர் ஆகியவற்றை பங்காளிகளுக்கு விட்டுக்கொடுத்ததில்லை.

68வருடங்களுக்குபிறகுமேற்படிஇரு விடயங்களையும்விட்டுக்கொடுத்தது மட்டுமல்லாது, கூட்டணி என்ற போர்வையில் 'மொட்டி'டம் சரணடைந்துள்ளது.

தேர்தல்களில் சுதந்திரக்கட்சி கடந்துவந்த பாதை ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து 1951 ஆம் ஆண்டு வெளியேறிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, 1952 செப்ரெம்பர் 2 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்கினார்.

1952 இல் நடைபெற்ற இலங்கையின் 2ஆவது பொதுத்தேர்தலில் முதன்முறையாக போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 15.52 சதவீத வாக்குகளைப்பெற்று 9 ஆசனங்களுடன் எதிர்க்கட்சியானது.

அதன்பின்னர் 1956 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 39.53 சதவீத வாக்குகளுடன் 51 ஆசனங்களை வென்று ஆட்சியையும் கைப்பற்றும் அளவுக்கு அது வளர்ச்சி கண்டது. அதாவதுஐ.தே.கவிலிருந்து வெளியேறி 5 ஆண்டுகளுக்குள் பண்டாரநாயக்க இலங்கையின் பிரதமரானார்.

1959 செப்ரெம்பர் 26 ஆம் திகதி பண்டாரநாயக்க (60 வயது) சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பின்னர் தற்காலிக தலைவராக பொலன்னறுவை மாவட்டத்தை சேர்ந்த சி.பி.டி சில்வா நியமிக்கப்பட்டிருந்த நிலையில், சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவி பண்டாரநாயக்கவின் மனைவியான ஸ்ரீமாவிடம் கையளிக்கப்பட்டது. அவரும் கட்சியை வெற்றிகரமாக வழிநடத்தினார்.

1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் 1982 ஆம் ஆண்டே முதலாவது தேர்தல் நடைபெற்றது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிக்கப்பட்டதால் சுதந்திரக்கட்சியின் சார்பில் கை சின்னத்தில் கொப்பேகடுவவே போட்டியிட்டார்.

1988 இல் நடைபெற்ற இரண்டாவது ஜனாதிபதி தேர்தலிலும் சுதந்திரக்கட்சி கை சின்னத்தில் களமிறங்கியது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க போட்டியிட்டார். 89 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் கை சின்னத்திலேயே சுதந்திரக் கட்சி போட்டியிட்டது.

1994 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கூட்டணி அமைத்து கதிரை சின்னத்தில் போட்டியிட்டது. பிரதமர் சந்திரிகா களம் கண்டார். இறுதியில் ஐ.தே.கவின் 17 ஆண்டுகால ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது.

2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சியின் தலைவர் சந்திரிகா தலைமையிலான கூட்டணியே கதிரை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

2001 டிசெம்பர் 05 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் சுதந்திரக்கட்சி சார்பிலேயே பிரதமர் வேட்பாளர் நிறுத்தப்பட்டார்.

2004ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டதால் அந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றிலை சின்னத்தில் போட்டியிட்டது.

அதன்பின்னர் 2010, 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் வெற்றிலை சின்னத்தில் களமிறங்கியது. சுதந்திரக் கட்சி சார்பிலேயே பிரதமர் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். இந்த முறை மூன்றாம் அணியும் இணைந்து போட்டியிட வேண்டிய நிலைக்கு சுதந்திரக்கட்சி தள்ளப்பட்டுள்ளது. (எ-44)



## மனிதவள அபிவிருத்திக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாகத்தின் வியாபார முகாமைத்துவ கற்கைகள் பீடமானது இலங்கையின் மனிதவள அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கல்விசார் கூட்டுறவு அறிவுப் பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாடு மூலம் திறமையான மனிதவள முகாமைத்துவ நிபுணர்களை விருத்தி செய்வதன் பொருட்டு சி.ஐ.பி.எம் அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பம்மைமடுவில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாகத்தில் நேற்றையதினம் கைச்சாத்திடப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியான க.கந்தசாமி மற்றும் சி.ஐ.பி.எம் நிறுவனத்தின் தலைவரான தம்மிக பெர்னாண்டோ ஆகிய இருவராலும் வவுனியா வளாகத்தின் முதல்வர் ரி.மங்களேஸ்வரன், வியாபார முகாமைத்துவ பீடாதிபதி நந்தகோபன், முகாமைத்துவ தலைவர் கொட்வின் பிலிப், சி.ஐ.பி.எம் நிறுவனத்தின் தலைவர் நீல் போககலந்தே, கல்வி விவகார பணிப்பாளர் வீரதுங்க மற்றும் ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தேசியமற்றும் சர்வதேச மனிதவளத்தின் பயன்பாட்டை மேம்படுத்துவதன் பொருட்டு மனிதவள முகாமைத்துவத்தின் மூலதத்துவம் நுட்பங்கள் மற்றும் நடைமுறைகள் போன்றவற்றை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதை கருத்தில்கொண்டு பொது விருப்புகளை பின்பற்றுவதற்காக இரு நிறுவனங்களும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தன. (ம-110)

## மாணவர்கள் இடைவிலகல் மன்னாரில் மிகவும் அதிகம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

மன்னார் மாவட்டத்தில் மாணவர்கள் இடை விலகும் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுவதாக சுட்டிக்காட்டும் நிலையில் குறித்த விவரத்தினை மாகாணக் கல்வி அமைச்சின் புள்ளிவிவரமும் உறுதி செய்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நகரை உள்ளடக்கிய மன்னார் கல்வி வலயத்தில் 2009ஆம் ஆண்டு தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களின் எண்ணிக்கையானது ஆயிரத்து 707 என வலயக் கல்வி அலுவலகம் உறுதி செய்கின்றது. இந்த நிலையில் 2009ஆம் ஆண்டு தரம் ஒன்றில் இணைந்த மாணவர்கள் 2019ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணப் பரீட்சை எழுதியிருக்க வேண்டும். ஆனால் ஆயிரத்து 207 பேர் மட்டுமே அவ்வாறு பரீட்சை எழுதியுள்ளனர். ஒப்பீட்டளவில் 500 மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. சிலர் வேறு வலயங்களுக்கு பாடசாலை மாற்றம் பெற்றிருந்தாலும் பெருமளவான மாணவர்கள் இடை விலகவே வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. (ம-105)

## தென்மராட்சியில் 3 அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொடிகாமம், மார்ச் 8

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றிய மூன்று அதிகாரிகள் வெவ்வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி கல்வி நிலையத்தில் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய அ.பிரேமதாஸ் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப் பணிப்பாளராகவும், தென்மராட்சி கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி சிவத்திரை சிவநாதன் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் தென்மராட்சி கல்வி வலயத்தின் விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய அ.நிருபராணி வடமாகாணத்தின் கல்வித் திணைக்களத்தின் விஞ்ஞானபாட உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-159)

## வவுனியாவில் மருத்துவ முகாம்

வவுனியா, மார்ச் 8

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில் கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் இடம்பெற்ற மருத்துவ முகாமில் 150 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வவுனியா வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது.



வவுனியா மாவட்டத்தில் பெருகிவரும், சிறுநீரக நோயின் தாக்கம் காரணமாக பலர் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். நாள் பட்ட சிறுநீரக நோய்கள், தொற்றா நோய்கள், பற்சிகிச்சைகள் தொடர்பான இலவச சேவைகளை உள்ளடக்கிய மருத்துவப்பரிசோதனை முகாம் கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் வவுனியா வர்த்தகர் சங்கத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது. வர்த்தக உரிமையாளர்கள், ஊழியர்கள் என 150பேருக்கு மேற்பட்டவர்கள் பயன்பெற்ற இலவச மருத்துவ முகாம் நேற்றுப் பிற்பகலுடன் முடிவுற்றுள்ளது.

வவுனியா சுகாதார வைத்திய பணிமனையின் தொற்றா நோய் தடுப்பு பிரிவு வைத்தியர் சுதர்சினி, நாள் பட்ட சிறுநீரக நோய் தடுப்பு பிரிவு மாமடுவ வைத்தியர் பிரசன்னா, நாள் பட்ட சிறுநீரக நோய் தடுப்பு பிரிவு சுகாதார வைத்திய பணிமனை வைத்தியர் ராஜகருண, வைத்தியர் நிரோசன் அல்விஸ் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடமாடும் பற்சிகிச்சை பிரிவு வைத்தியர் ஆகியோர் இலவச மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர். (ந-110)

## அரச செலவினத்துக்கு ஜனாதிபதி அனுமதி

கொழும்பு, மார்ச் 8

அரசின் செலவுகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அனுமதி வழங்கியுள்ளார்.

ஜனாதிபதிக்கு அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் அடுத்த மூன்று மாதங்களுக்கு தேர்தல் செலவுகள் உள்ளிட்ட அரசின் செலவுகளை மேற்கொள்வதற்கு திறைசேரி செயலாளருக்கு அதிகாரமளித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகார பூர்வமாக அனுமதி வழங்கியுள்ளார். அதற்கமைய அமைச்சுகளுக்கு அரசால் செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைகள் மற்றும் ஏனைய செலவுகளைமேற்கொள்ள முடியுமாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.(ஏ)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 - 09 - 1945



மறைவு 10 - 02 - 2020

# அமரர் ஆறுமுகம் சபாநாதன்

(ஸ்தாபகர் சிற்றி ரேட் கோப்பிரேசன் - வவுனியா)

கடந்த 10.02.2020 அன்று எமது குடும்பத்தலைவர் மறைந்த செய்தியறிந்து விரைந்து வந்து எமது ஆறாத்துயருள் ஆழ்ந்திருந்த எமக்கு ஆதரவு தந்து எம் துயரில் பங்கேற்று அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்கெடுத்து துயர்பகிர்ந்த உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் எம் சிரம் தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரில் வருகை தந்தும் தொலைபேசி மூலமாகவும் தமது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்க இயலாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.03.2020) திங்கட்கிழமை காலை 7மணிக்கு கல்லாற் றிலும் வீட்டுக்கிரியைகள் 11.03.2020 புதன்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்திலும் இடம்பெறும்

இந்த அழைப்பை எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்று 11.03.2020 புதன்கிழமை எமது இல்லத் தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 57. 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.
0775144041
குடும்பத்தினர்.
(CS.213449) (13.17)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் வாயு அடுப்பு திருத்துவதற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை. தொடர்பு கொள்வதற்கு **077 947 1384** என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும். (CS/31760)(13.17)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1993 பிறந்த **UK PR** உள்ள படித்து தொழில் பார்க்கும் மகளிற்கு **UK** / உள்ளூர் மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு -076 998 0693

# மரண அறிவித்தல்கள்



## திருமதி சிவசோதிமலர் தங்கராஜா (குஞ்சு)

மலேசியாவை பிறப்பிடமாகவும், உடுவில் மற்றும் கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசோதிமலர் தங்கராஜா (குஞ்சு) 06.03.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சவுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புக் குரிய மருமகளும், அமரர் தங்கராஜாவின் (சின்னத்தம்பி- ஸ்தாபகர் முருகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்-ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) அன்புக்குரிய மனைவியும், மைதிலியின் (மஞ்சு-ஆஸ்திரேலியா) அன்புத் தாயாரும், சுஜிதரனின் (ஆஸ்திரேலியா) பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவகாமசுந்தரி, புஸ்பம், சண்முக நாதன் மற்றும் நேசமலர் (கனடா), பரம்சோதிமலர் (கொழும்பு), சரோஜினிதேவி (குருநாகல்), பரமநாதன் (அப்பு- உடுவில்), ஜெகநாதன் (ஆத்தை-கனடா), பத்மாவதி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் தர்மராஜா( கம்பஹா), விக்னராஜா (முருகன் மோட்டோர்ஸ்), லிங்கராஜா (கனடா), பத்மராஜா (முருகன் மோட்டோர்ஸ்) ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2020) திங்கட்கிழமை அஞ்சலிக்காக காலை 9.30 முதல் மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பின்னர் 2 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37, உருத்திரா மாவத்தை, கொழும்பு-06.
076 674 2403
தகவல்: குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



## அமரர் இராமர் சின்னம்மா (சின்னபெட்டை)

(கைதடி தெற்கு, கைதடி.)

அன்பின் இருப்பிடமே
அரவணைப்பின் உறைவிடமே
ஆறுதல் தரும் தெய்வமே
ஆறாத் துயரில் நாம் மீள முடியாமல்
தவிக்கின்றோம்

கடந்த 07.02.2020 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.03.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

கைதடி தெற்கு, கைதடி.
(CS/31685) (11.17)
குடும்பத்தினர்.

தோற்றம் 17 . 02 . 1965



மறைவு 05 . 03 . 2020

## அப்புத்துரை கிருஸ்ணமூர்த்தி

சங்கானை ஆஸ்பத்திரிவீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் LUZERN ஐ வசிப்பிடமாக வும் கொண்ட அப்புத்துரை கிருஸ்ணமூர்த்தி 05.03.2020 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - மீனாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவராசா மற்றும் பூமலர் (நெதர்லாண்ட்) ஆகியோரின் அன்பு மருமகனும், சுதாதினியின் அன்புக் கணவரும், கீர்த்திகா (சுவிஸ்), கரணியா (சுவிஸ்), கர்சனா (சுவிஸ்), தர்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பவல்லி, மாருதப்புரவல்லி, காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், சாவித்திரி மற்றும் பானுமதி, பாலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுமதி (சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் சுகந்தினி (சுவிஸ்), சுகர்னா (நெதர்லாண்ட்), சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஆஸ்பத்திரி வீதி
சங்கானை.

தொடர்பு: குமரன் - 077 443 4969
நடராசா - 077 615 4699

(cs 31750) (13.17)

### கச்சதீவு...

லேயே கலந்து கொண்டிருந்தனர். இலங்கையிலிருந்து 4 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டவர்களும், இந்தியாவிலிருந்து 2 ஆயிரத்து 500 க்கு மேற்பட்டவர்களும் கலந்து கொண்டனர். எனினும் கடந்த வருடங்களை விட இம்முறை திருவிழா வில் அதிகளவான பக்தர்கள் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வருடாந்தத் திருவிழாவின் கொடியேற்றம் மாலை 4.45 மணிக்கு ஆரம்பமானது. நேற்றுக் காலை 8 மணியளவில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதை அடுத்து, திருவிழா நிறைவடைந்தது.

யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம், காலி மறைமாவட்ட ஆயர் ரேமன் விக்ரமசிங்க ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

திருவிழாவில் இலங்கை, இந்தியக் குருமுதல்வர்கள், அருட்சகோதரர்கள், கடற்படை அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (க)

### கச்சதீவில்...

முதற்கட்டமாக உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டது. சுமார் 9 பேருக்குக் காய்ச்சல் இருந்தமையால் அவர்களுக்கு மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்குரிய மேலதிக நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டனர். (க)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**இராசரத்தினம் பாலகிருஷ்ணன்**
('பாலா' சினிமா உரிமையாளர் - சாவகச்சேரி)

மண்ணில் 24.11.1960
விண்ணில் 07.02.2020

கற்பனையில் கூட நாம் எண்ணவில்லை - சட்டென
கணப்பொழுதில் எம்மை விட்டுப் பிரிவாய் என்று
இற்றைவரை நம்பமுடியவில்லை - இன்றுடன்
நாள் முப்பத்தொன்று கடந்ததென்று
நாள் பல கடந்தாலும் தேயாது உன் நினைவு
சுற்றவரும் உற்றவரும் ஏங்கி நிற்க - என்றும்
நற்றவனின் பாதமதை நலமே பற்ற
மறையும் காலமதில் மாறாத உன் நினைவில்
இறையை உனக்காய் வேண்டி

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (08.03.2020)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருதடி வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

(CS 31741) (13.17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னப்பொடியன் யோகசிங்கம்

(ஆங்கில ஆலோசகர், ஓய்வுபெற்ற அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான், அரச அங்கீகாரம்பெற்ற தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர்)



பிறப்பு 23.10.1939
இறப்பு 06.03.2020

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் யோகசிங்கம் 06.03.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பற்குணம், வேலையா, காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் இரத்தினசிங்கம், சிவபாதசுந்தரம், விஜயபாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுனேத்திரா (ராதா - ஆங்கில ஆசிரிய ஆலோசகர், யாழ். வலயம்), பாலேந்திரா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சத்தியேந்திரா மற்றும் சுபத்திரா, Dr. உருத்திரா (MOH உப்புவெளி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(CS 31761) (11.17)

தகவல்:-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருநாவுக்கரசு மங்கையர்க்கரசி



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மங்கையர்க்கரசி கடந்த 03.03.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தில்லைமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராசசேகரம் மற்றும் புஸ்பராணி, தனலட்சுமி, இராசகுலசேகரன், காலஞ்சென்ற இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் சந்தானலட்சுமி, காலஞ்சென்ற யோகராசா மற்றும் சாரதாதேவி, தவமணி, சரோஜினிதேவி, மாலினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.03.2020 வியாழக்கிழமை பிற்பகல் 12 - 2.30 மணிவரை HENDON GREMATORIUM, HOLDERS HILL ROAD, MILL.HILL LONDON NW7 INB இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

51/2, சேச் லேன்,
உடுவில்.

(CS 31730) (12.17)

தகவல்:
சகோதரி - இ.தனலட்சுமி (ராசு)

### திருமதி ஐயம்பிள்ளை சிவக்கொழுந்து
(மரகதம் ஆச்சி)



ஊர்காவற்றுறை, கரம்பனைப் பிறப்பிடமாகவும், வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயம்பிள்ளை சிவக்கொழுந்து (மரகதம் ஆச்சி) 06.03.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு - சீராத்தை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், சாம்பசிவம், சண்முகநாதன், தருமலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, புஸ்பராணி, மங்களராணி, கனகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவாஜினி - சிவானந்தம், ரமேஸ் - கவிதினி, வசிராவ் - ரேணுஜா, கோவர்தனி - அமுல்யகரன், விஜி - விஜயேந்திரன், சதீஸ்,உஷாந்தி, மதுஷன், திலோத்தம்மா, கலைப்பிரியா - கௌரிதாஷன், தர்சினி - கௌசிக், கிருசாந்தி - ஜோகிதாஸ் ஆகியோரின் பேர்த்தியும், புருசோத், மதுஜினி, வர்ஷிதா, திக்சிகா, ஹரனிகா, டுசாறினி, டுசானா, சகானா, அனாமிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10, மணியளவில் வேலணையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.

### சுப்பர் செல்வராசா



பலாலியைப் பிறப்பிடமாகவும், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் செல்வராசா நேற்று (07.03.2020) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பர் ஆச்சிப்பிளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், நவமலரின் அன்பு கணவரும், பிரியங்காவின் (தேசிய கல்வியியல் கல்லூரி-கோப்பாய்) அன்புத் தந்தையும், செல்லம்மா, காலஞ்சென்றவர்களான சின்னதங்கச்சி நாகேஸ்வரி, நாகராசா நகுலேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரரும், விஸ்வலிங்கம் பரமராசா, காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணண் மற்றும் முருகையா, கணேசமூர்த்தி, கௌரி, புஸ்பரஞ்சினி, தயாவதி, நந்தகுமார் (கனடா), தர்மலீலா, தர்மராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேந்திரம், ஜீவதயா (கனடா), மகேந்திரம், பிரியா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 31762) (10)

0777 167 253

தகவல்: குடும்பத்தினர்.



# தொடரை வென்றது பங்களாதேஷ் அணி



சிம்பாப்வேக்கு எதிரான 3ஆவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி 123 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பங்களாதேஷ் – சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் இறுதி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி சைல்ஹெட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தமிம் இக்பால், லிட்டான்தாஸ் களமிறங்கி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி ரன்களைக் குவித்தனர். 33.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 182 ரன்கள் எடுத்திருந்த போது மழை பெய்தது. இதனால் ஆட்டம் 43 ஓவர்கள் கொண்டதாக குறைக்கப்பட்டது.

தொடர்ந்து ஆட்டம் தொடங்கியதும் இருவரும் சதம் கடந்து அசத்தினர். லிட்டான் தாஸ் 3ஆவது சதத்தையும், தமிம் இக்பால் 13 ஆவது சதத்தையும் எட்டினர். அணி 292 ரன்கள் பெற்ற போதே முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. லிட்டான் தாஸ் 176 ரன்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். ஒரு நாள் போட்டியில் வங்காளதேச வீரர் ஒருவரின் அதிகபட்ச ரன் இதுவாகும். முன்னைய ஆட்டத்தில் தமிம் இக்பால் 158 ரன்கள் எடுத்ததே இதற்கு முன்பு அதிகபட்சமாக இருந்தது. அதனை லிட்டான் தாஸ் முறியடித்தார். மேலும் விக்கெட் ஒன்றுக்கு வங்கதேச இணை ஒன்றின் சிறந்த இணைப்பாட்டம் இதுவாகும். நிர்ணயிக்கப்பட்ட 43 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 3 விக்கெட்டுக்கு 322 ரன்களைக் குவித்தது. தமிம் இக்பால் 128 ரன்கள் பெற்றார்.

பின்னர் டக்வொர்த் லூயிஸ் விதிமுறைப்படி 43 ஓவர்களில் 342 ரன்கள் எடுக்க வேண்டும் என்று சிம்பாப்வேக்கு இலக்கு அமைக்கப்பட்டது. அதை நோக்கி ஆடிய சிம்பாப்வே அணி 37.3 ஓவர்களில் 218 ரன்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ரன்களால் தோல்வியைத் தழுவியது. இதனால் வங்காளதேச அணி தொடரை 3:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இந்த ஆட்டத்துடன் பங்களாதேஷ் அணியின் கப்டன் பொறுப்பில் இருந்து மோர்டசா விலகினார். மோர்டசா தலைமையில் வங்காளதேச அணிக்கு கிடைத்த 50ஆவது வெற்றி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# கஸ்ரோ,விஸ்மித்தின் இணைப்பாட்டத்தால் மகுடம் சூடியது சென்.பற்றிக்ஸ் கல்லூரி




யாழ்ப்பாணம்,மார்ச் 8

கஸ்ரோ,ரவிந்து விஸ்மித் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் உதவியுடன் 28ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரை வென்றது யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 28 ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடர் நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் செற்ப ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 77 ஓட்டங்களுக்குள் 8 இலக்குகளை இழந்தது.9ஆவது இலக்குக்காக இணைந்த கஸ்ரோ,ரவிந்து விஸ்மித் 146 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று தமது அணியை சரிவிலிருந்து மீட்டனர். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் கஸ்ரோ 74 ஓட்டங்களையும், ரவிந்துவிஸ்மித் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பிரிந்தன்,விஸ்ணுகாந்தலா 3 இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 45.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்று 69 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அணி சார்பில் கௌசிகன் 40 ஓட்டங்களையும், மதுஷன் 33 ஓட்டங்களையும்,வலகிஸ்சன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் டிலக்சன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

சகல துறை ஆட்டநாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் டிலக்சன் ,ஆட்டநாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் ரவிந்து விஸ்சுமித், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் கஸ்ரோ,சிறந்த பந்து வீச்சாளராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர் பி.பிரிந்தன், சிறந்த களத்தடுப்பாளராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர் எ.கௌசிகன், ஸ்பிரிட் ஓவ் கிரிக்கெட் விருதை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர் மதுஷன், மற்றும் சென்.பற்றிக்கல்லூரி அணி வீரன் கீர்த்தன், சிறந்த இணைப்பாட்டத்தை வெளிப்படுத்திய வீரர்களுக்கான விருதை சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான கஸ்ரோ,ரவிந்து விஸ்சுமித் ஆகியோர் பெற்றனர்.



படங்கள் - ஐ.சிவசாந்தன்

# சென்.ஜோன்ஸிடம் மண்டியிட்டது மத்தி




யாழ்ப்பாணம், மார்ச் 8

இன்னிங்ஸ் மற்றும் 17 ஓட்டங்களால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அபார வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

நேற்றைய இறுதி நாள் ஆட்டத்தில் மத்திய கல்லூரி அணி மதிய போசன இடைவேளைக்கு முன்பாகவே சகல இலக்குகளையும் இழந்து சென்.ஜோன்ஸ் கல்லூரியிடம் சரணடைந்தது. 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் சென்.ஜோன்ஸ் கல்லூரி மீண்டும் ஒரு இன்னிங்ஸ் வெற்றியை மத்திய கல்லூரி மைதானத்தில் வைத்தே பெற்றுக் கொண்டுள்ளது.

114 ஆவ்து வடக்கின் போர் ஆட்டம் கடந்த வியாழக் கிழமை ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, மத்திய கல்லூரியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. களமிறங்கிய அந்த அணி சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திராணியற்று 150 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பதிலளித்து ஆடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 291 ஓட்டங்களை அனைத்து இலக்குகளையும் இழந்து பெற்றுக் கொண்டது.

141 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை மத்திய கல்லூரி நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பித்தது. ஆரம்பத்திலேயே அந்த அணி தடுமாறத் தொடங்கியது. முன்வரிசை வீரர்களை விரைந்து பவிலியனுக்கு அனுப்பியது சென்.ஜோன்ஸ் கல்லூரி. 26 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறியது மத்திய கல்லூரி. அதன் பின்னர் சஞ்சயன், இந்துயன் இணை சிறப்பாக ஆடி இரண்டாம் நாள் ஆட்டத்தை தக்க வைத்தது. ஆட்ட நேர முடிவில் 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை சிறப்பாக ஆரம்பித்தது மத்திய கல்லூரி. சஞ்சயன், இந்துயன் இணை பொறுப்பாக ஆடியது. சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வியூகங்கள் தகர்க்கப்பட்டன. ஒரு கட்டத்தில் மத்திய கல்லூரி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இந்துயன் அரைச் சதம் கடந்து ஆடினார்.

82 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில், விதூசனின் சுழலில் சிக்கி இந்துயன் ஆட்டமிழந்தார். 3 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 56 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவர் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த அணித் தலைவர் வியாஸ்காந் 3 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 2 ஓட்டங்களுடன் சரணின் சுழலில் டினோஸனின் அபார பிடியெடுப்பில் பவிலியனுக்கு அனுப்பப்பட்டார். மறுமுனையில் பொறுப்பாக ஆடிக் கொண்டிருந்த சஞ்சயன் 103 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சரணின் சுழலில் சிக்கி ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் களம்புகுந்த மத்திய கல்லூரி வீரர்கள், மைதானத்துக்கு வருவதும் பவிலியன் திரும்புவதுமாக இருந்தனர். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அச்சுறுத்தும் வகையிலான களத்தடுப்பை அமைத்து, சுழல் பந்து வீச்சில் இலகுவாக இலக்குகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தது. மத்திய கல்லூரியின் இறுதி ஏழு இலக்குகளும் 16 ஓட்டங்களுக்குள் இழக்கப்பட்டது. இறுதியில் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 17 ஓட்டங்களால் சரித்திர வெற்றியை சென்.ஜோன்ஸ் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில், சரண் 5 இலக்குகளையும், விதூசன் 3 இலக்குகளையும், டினோஸன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.



இந்தப் போட்டியில் கிடைத்த வெற்றியுடன், 2018 ஆம் ஆண்டில் வடக்கின் சமர் வெற்றிக் கிண்ணத்தை தக்கவைத்த, யாழ். மத்திய கல்லூரியிடம் இருந்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இந்த ஆண்டுக்கான கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் சுழல் பந்துவீச்சாளரான சரண் தெரிவானார். (ஒ.5.23)




சிறந்த பந்துவீச்சாளர், ஆட்டநாயகன் விருது




சிறந்த களத்தடுப்பாளர் சபேஸன் (சென்.ஜோன்ஸ்)




சிறந்த இலக்குக் காப்பாளர் பிரணவன் (சென்.ஜோன்ஸ்)




சிறந்த துடுப்பாட்ட வீரர், இந்துஜன் (யாழ். மத்தி)




சிறந்த சகலதுறை வீரர் டினோஸன் (சென்.ஜோன்ஸ்)

## விற்பனைக்குண்டு

ஆட்டுக்கடாய்கள் விற்பனைக்கு உண்டு.

**076 317 0789** (CS/31754) (II.17)

## விற்பனைக்கு

குறைந்த காலம் பாவனையில் இருந்த நல்ல நிலையில் உள்ள சாதாரண சிங்கர் தையல் மெசின் விற்பனைக்குண்டு.

**077 805 2520**

## ஆடுகள் விற்பனைக்கு

மறி, கிடாய் ஆடுகள் விற்பனைக்கு உண்டு.

**077 527 1673** (CS/31734) (II.17)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 ஆம் ஆண்டு பிறந்த. குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை. ரேவதி 4ம் பாதம் - கிரகபாவம் 42¾

**076 243 4146**

## விற்பனைக்கு

புத்தம் புதிய சிசில் ( **Sisil**) குளிர்சாதனப் பெட்டி ஒன்று உடன்விற்பனைக்குண்டு.

**077 349 5827** (CS/31753) (II.17)

## வீடு வாடகைக்கு விடப்படும்

இல.50, மஞ்சவன லேன் கொக்குவிலில் அமைந்துள்ள நான்கு அறைகள், பாக்கிங் மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். கம்பனிகளுக்கும் வழங்கப்படும்.

**077 772 7763, 077 201 4448**

## வேலையாள் தேவை

வயோதிபரைப் பராமரிப்பதற்குப் பகுதிநேர ஊழியர் தேவை. நல்லூர், அரியாலையில் வசிப்போர் மட்டும் அழைக்கவும். (CS/31751) (II.17)

**077 765 7374**

## வீடு வாடகைக்கு

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் 2 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

**076 427 9505, 071 377 4860**







**DFCC கிரடிட் கார்ட் மூலம் செலுத்தப்படும் ஒவ்வொரு கொடுப்பனவின் 1% CashBack உங்கள் DFCC சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்படும்.**

உங்கள் DFCC கிரடிட் கார்ட்டைப் பெற்றுக் கொள்வதற்கு 076 76 84 333 இற்கு மிஸ்ட் கோல் ஒன்றைத் தாருங்கள்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது




24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## GERMANY NETHERLAND SWISS

போன்ற நாடுகளில் படிப்பதற்கான College மற்றும் University Admission Bank Balance, Sponsor Letter ஏற்பாடு செய்து தர...

ஆரம்ப தகைமை O/L மட்டும் | முற்பணம் இல்லை | NO IELTS | 2020க்கான விண்ணப்பமுடிவு 15th Mar 2020

- Visiting Visa / Dependent Visa போன்ற விசாக்களுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு Sponsor Letter / Hotel Booking போன்றவை ஏற்பாடு செய்தல். (குடும்பத்தோடு போவதற்கும் வெளிநாட்டில் இருக்கும் குடும்பத்துடன் போய் சேருவதற்கும் விண்ணப்பித்துத் தருதல்)
- விண்ணப்பிப்பவர்களுக்கு Germany/ Netherland/ Swiss போன்ற நாடுகளில் தொழில் பெற்றுத் தருதல்.
- முதல் விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 21 நாட்களுக்குள் மீள விண்ணப்பித்துத் தருதல்.
- Student Visa விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு Part Time Job, PR இற்கு விண்ணப்பிக்க வழிசெய்தல்
- குறைந்த கட்டணத்தில் விண்ணப்பித்துத் தருதல்.

17 வருட சேவை | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் Reg. No. PV00210651

NW SKYLINE INTERNATIONAL COLLEGE (PVT) LTD
077 33 47 332
011 59 44 243
22 Srimahabodhi Road, Dehiwala

## காணி மற்றும் கடை தேவை

சாவகச்சேரி நகரில் காணி மற்றும் கடை தேவை.

077 410 9151, 077 948 8963

## வேலைக்கு ஆள்தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள புடைவைக் கடைக்கு விற்பனையாளர் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

077 724 3461

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் இயங்கிக் கொண்டிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், சிறுவர்களுக்குமான பொருள்கள் விற்பனை செய்யும் நிறுவனத்-துக்குப் பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை.

021 221 3323, 077 013 2035, 076 264 8766

## கார் விற்பனைக்கு

Perodua Axia கார் விற்பனைக்கு. 47,500 கிலோ மீற்றர். 2016 மொடல் ஓட்டோ 32 லட்சம் விலை பேசலாம்.

077 775 1788

## வீடு விற்பனை

யாழ். கந்தர்மடத்தில் 2 பரப்புக் காணியுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 360 4403

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை தெஹிவளை, கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களில் 3 படுக்கை அறைகள் கொண்ட Luxury Apartment Air Conditoin, Hot water, Gym, Swimming pool, Intercom, வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கட்டுமான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இலகு தவணை முறை கட்டண முறையில் விற்பனைக்குண்டு.

இந்திரன் - 071 975 8873

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் கரவெட்டியில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. இக்காணி யாழ்ப்பாணம், பருத்தித்துறை பஸ் பயணிக்கும் மெயின் வீதியை முகப்பாக கொண்டது. இவ்விடம் கடை, வீடு, Super Market கல்யாண மண்டபம் கட்டுவதற்கு உகந்தது. கிணறு உண்டு.

No Brokers தொடர்பு:072-2006293

## உழவு இயந்திரம் தேவை

மகேந்திரா 575 உழவு இயந்திரம் தேவை.

077 463 6254

## வீடு விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்டம் சந்திக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு (1½ பரப்பும் 3 குளியும்) விற்பனைக்கு.

077 587 2734, 077 962 8689

## வேலையாள்கள் தேவை (கொக்குவில்)

வாகன ஓட்டும் அனுபவத்துடனான விற்பனையாளர் இருவர் தேவை. சம்பளம் பேசி தீர்க்கப்படும்.

075 735 1477

## கடை வாடகைக்கு

வர்த்தக நடவடிக்கைகளுக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற சகல வசதிகளையும் கொண்ட நான்கு மாடி கடை வாடகைக்கு உண்டு.

077 494 9320, 077 703 3648

## மணமகள் தேவை

யாழ் இந்து உயர்குலம் கனடா வதிவிட வசதியுள்ள 90 பூசம் சதயல்க்கணம், 4செவ்வாய், 6ல் குரு சந்திரன் கேது, 8ல் புதன் சூரியன் சுக்கிரன், 11 சனி, 12 ராகு கிரகநிலையுடைய மணமகனுக்கு 98, இருந்து 2000 வரை அழகான மணமகள் தேவை. இலங்கை வருவார்

0044 7404954562

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபலமான சுற்றுலாத்துறை Hotel ஒன்றுக்கு Accounts Assistant வேலைவாய்ப்பு உண்டு. AAT, CMA,CIMA, CA partly qualification விரும்பத்தக்கது.

077 227 5240, 077 036 0555

## உடன் விற்பனைக்கு

Original Heidelberg Einfarben Offset Order Letter set
Size - "18x25 ¼" 46x64 cm
Long box, Red button, Cray color,
Price - 1950000/=

077 840 9900,076 755 0082

## மணமகள் தேவை

யாழ் இந்து உயர்குலம் 90 பூசம் கனடா pr,84 மகம் மெக்கானிக் இஞ்சினியர் லண்டன் no pr, மணமகன் மாருக்கு உள்நாட்டு வெளிநாட்டு மணமகளை எதிர் பார்க்கிறோம்.

0044 7424092585

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 மகம், கிரகபாவம் 33 ¼ 9இல் சூரியன் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

077 902 0669

## மணமகள் தேவை

யாழ்.நற்குலத்தைச் சேர்ந்த நாற்பது வயதுடைய சொந்தமாக (நகை) தொழில் செய்யும் ஒருவருக்கு மணமகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

Phone / Whatsapp/ IMO No- 077 876 8760
Viber No - 077 726 9097

## கட்டடம் வாடகைக்கு விடப்படும்

3 தொகுதிகளைக் கொண்ட கட்டடம் முருகண்டி பிள்ளையார் கோயில் பக்கமாகவும், இலங்கை வங்கிக்கு அருகிலும், P.P.T பஸ் தரிப்பிடம் முன்பாகவும் அமைந்துள்ளது.

076 128 0754, 076 460 0907



# பயிற்சியை முடித்த பட்டதாரிகளுக்கு தென்னிலங்கையில் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடமாகாணத்திலுள்ள திணைக்களங்களில் ஒரு வருடம் பயிற்சி பெற்ற பட்டதாரி பயிலுநர்களுக்கு தென்னிலங்கையில் உள்ள அமைச்சு மற்றும் திணைக்களங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து அவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கல் என்ற பெயரில் 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20 ஆம் திகதி ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி பயிலுநர்களின் ஒரு வருட பயிற்சி காலம் நிறைவடைந்து 6 மாதங்களும் பூர்த்தியாகியுள்ள நிலையில், அவர்களுக்கு பெப்ரவரி 27 ஆம் திகதியிடப்பட்டு நிரந்தர நியமன கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தை குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த பெரும்பாலானவர்கள் தென்னிலங்கையில் உள்ள அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். அங்கு சென்று பணியாற்றுவதில் தாங்கள் பல்வேறு ரீதியான சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமது பயிற்சி காலம் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவடைந்தமையால் அந்த மாதத்தில் இருந்தே நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், மாறாக இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்தே நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்றது என தமது நியமன கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே பயிற்சிக் காலத்தை நிறைவுசெய்த பட்டதாரிகளுக்கு நேற்றுமுன்தினம் தொடக்கம் நிரந்தர நியமன கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. கடிதம் கிடைத்தவுடன் உரிய அமைச்சு அல்லது திணைக்களத்தில் ஒப்பமிடுமாறு கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தென்னிலங்கையில் உள்ள அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு செல்லும்போது, தேர்தல் காலம் என்பதால் அங்கு ஒப்பமிட முடியாது என தாங்கள் திருப்பி அனுப்பப்படும் வாய்ப்பு உள்ளதாக அவர்கள் கருதுகின்றனர். இருப்பினும் இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு தலையிடாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஒ,5)

## தமிழ்...

தேடுதலில் சில நவீன தொடர்பாடல் கருவிகளும், ஒரு தொகை சக்திவாய்ந்த வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டன.

தற்போது ஜேர்மனி கடவுச்சீட்டை கொண்டுள்ள முன்னாள் புலி போராளி ஒருவர் கைது செய்யப்பட்டதை அடுத்து, எஞ்சியவர்கள், வீடு ஒன்றில் தங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டனர். மேற்குலக நாடுகள் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வசிக்கும் புலிகளின் முன்னாள் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்தக் குழுவுக்கு நிதி உதவி வழங்கியதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த உறுப்பினர்கள் உயர்சக்தி வெடி பொருள்களைப் பயன்படுத்துவது குறித்து சிறப்புப் பயிற்சியைப் பெற்றுள்ளனர் என்றும், அதற்கு மலேசியா மற்றும் இந்தியாவில் உள்ள முன்னாள் புலிகள் தலைவர்கள் நிதி மற்றும் பிற உதவிகளை வழங்கியுள்ளனர் என்றும் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இவர்கள் 'ட்ரோன்' கமராவில் குண்டைப் பொருத்தி, அதனை வெடிக்க வைப்பதன் மூலம் இந்தக் கொலையை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய பயங்கரவாத வலையமைப்பைக் கண்டுபிடிப்பதற்காக இலங்கையின் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளின் உதவியை நாடவுள்ளனர் என்று அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் கொழும்பு ஆங்கில நாளிதழிடம் உறுதிப்படுத்தியுள்ளன.

பிந்திய நிலைமைகளை அடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளோம், குறிப்பாக வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ,5)

## ஒரு...

ஆணையாளரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஒரு இலட்சம் குடும்பங்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் நோக்கத்தைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டம் 3 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது என்றும் அதனை தொடர்ந்தும் முன்னெடுக்க அனுமதிக்குமாறு திட்டத்துக்குப் பொறுப்பான பல்நோக்கு அபிவிருத்தி செயலணி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் மற்றும் செயற்பாடுகளை விளக்கி தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேற்றுமுன்தினம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ள பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நந்த மல்லவாரச்சி, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலும் வேட்புமனு கோரப்படாதிருப்பதால் இந்த விடயத்துக்கு அனுமதியளிக்குமாறு கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்காக வருகை தந்தவர்களிடையே தகைமைகளை கொண்டுள்ள ஒரு இலட்சம் பேரை ஆள்சேர்ப்பு செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு ஆள்சேர்ப்பு செய்யப்படுவது குறைந்த கல்வித் தகைமைகளையும் திறன்களையும் கொண்ட வறிய குடும்பங்களிலிருந்தாகும். இந்தப் பணி தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பிருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதனை முன்னெடுப்பதற்கு அனுமதிக்குமாறு பணிப்பாளர் நாயகம் நந்த மல்லவராச்சி தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

## இந்தியாவில்....

தப் படகுகளில் ஆலயத்துக்குச் சென்றவர்கள் மீண்டும் ஊர் திரும்ப முடியாமல் அந்தரித்தனர். அதேவேளை, குறிகாட்டுவானிலிருந்து சென்ற படகுகள் கடும் காற்றுக் காரணமாக நெடுந்தீவில் நேற்று மாலை கரையொதுங்கியது. அவர்களும் இன்றைய தினமே யாழ்ப்பாணத்தை வந்தடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கச்சதீவுக்கு கடலில் டிங்கிப் படகுகள் கட்டப்பட்டிருந்தன. அவை கடும் காற்றுக் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு தமிழகத்தில் கரையொதுங்கின. இது தொடர்பில் இந்திய கடற்படையினருடன் இலங்கைக் கடற்படையினர் பேச்சு நடத்தினர். நேற்று இரவு அந்தப் படகுகள் மீளவும் கச்சதீவுக்கு கொண்டு வரப்பட்டது. அவற்றைப் பொறுப்பேற்ற கடற்படையினர் உரிமையாளர்களிடம் கையளிப்பதற்காக இலங்கைக் கரையோரத்துக்கு அவற்றை நேற்று இரவு கொண்டுவந்து சேர்த்தனர். (ஒ,5,105)

## யானைச்...

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் நேற்றுத் தாம் அறிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

எனினும், இந்தத் தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சியின் மையச் செயற்குழுவின் தீர்மானத்துக்கு எதிரானது என சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

'இது ஒரு துரதிர்ஷ்டவசமான தீர்மானம். இந்தத்தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ஒரு சிலருடையது' எனவும் சஜித் அணியினர் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ,5,22)

## பட்டதாரிகளே...

கூறினார்.

**கேள்வி-** பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்குவதைத் தேர்தல்கள் ஆணைக்குழு நிறுத்தியுள்ளதே?

**பந்துல குணவர்தன** - அரசியலற்ற ஒரு வேலைத்திட்டத்தையே பிழையாக சமூகமயப்படுத்த முயற்சிக்கின்றனர். தான் அதிகாரத்துக்கு வந்தவுடன் பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறுகிறார். ஏற்கனவே ஜனாதிபதி செயலகம் பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை அனுப்பி விட்டது. ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதியே அவ்வாறு நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்போது கட்சி, நிறம் பார்க்கப்படவில்லை. இது அமைச்சரவையில் கலந்துரையாடி மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஆகும். பயிலுநர்களாக இணைத்துக் கொண்டு தலைமைத்துவப் பயிற்சி மற்றும் இடரீதியான பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் இருபதாயிரம் ரூபாய் வழங்கப்படும். இந்தப் பணிகள் இடம்பெறும்போது தான் தேர்தல்கள் ஆணைக்குழு பட்டதாரிகளின் பயிற்சியை நிறுத்தியுள்ளது.

**பிரதமர்-** தேர்தல்கள் ஆணைக்குழு தலையிட்டு பயிற்சியை நிறுத்திய போதிலும் இணைத்துக்கொண்ட பட்டதாரிகளுக்குச் சம்பளம் வழங்க வேண்டும். சம்பளம் கிடைக்கும். பயிற்சி இல்லாமற் போகும்.

**பந்துல குணவர்தன** - அதிகாரிகள் அச்சப்படுகின்றனர். தேர்தல்கள் ஆணைக்குழு கூறுவதனையே அதிகாரிகள் செய்கின்றனர். நியமனக் கடிதம் கிடைத்தவுடன் நியமனத்தைப் பொறுப்பேற்றதாக பிரதேச செயலகத்தில் கையொப்பமிட வேண்டும். நியமனம் கிடைக்காவிடின் பிரதேச செயலாளருக்கு மேன்முறையீடுகளை அனுப்பி வைக்க வேண்டும்.

**கேள்வி-** பட்டதாரிகள் இது தொடர்பாக நீதிமன்றத்தை நாடுவதற்கான வாய்ப்பு உள்ளது தானே?

**பிரதமர்** - நீதிமன்றத்தை நாடி ஏன் அந்தளவு செலவு செய்ய வேண்டும். சம்பளத்தை எடுத்துக்கொண்டு இரண்டு மாத காலம் வீட்டில் இருந்து விட்டு அதன் பின்பு தொழிலுக்கு வருவதே அந்தப் பிள்ளைகளுக்கு நன்மை பயக்கும், என்றார். (ஒ,5)

## ஆள்சேர்ப்பு...

கள் கிடைப்பது தாமதமாவதையிட்டு அச்சமடையத் தேவையில்லை.

நியமனம் கிடைக்கப்பெற்று 3 தினங்களுக்குள் தமது பிரதேச செயலர் அலுவலகத்துக்கு அறிக்கையிட வேண்டுமென நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இதுவரை நியமனக் கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் அது குறித்து ஐயப்படத் தேவையில்லை. தற்போது நியமனக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் பிரதேச செயலருக்கு அறிக்கையிட வேண்டும். அவர்களது வருகையை பிரதேச செயலர் பதிவு செய்வார். கடிதம் கிடைக்கப்பெற்று 7 நாள்களுக்குள் பயிற்சிக்கு சமூகமளிக்காதவர்கள் அந்த நியமனங்களை நிராகரித்ததாக கருதப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதுவும் செல்லுபடியானதாக கொள்ளப்படமாட்டாதென அரசு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கேற்ப பொதுத் தேர்தல் நடைபெற்று ஐந்து தினங்களுக்குப் பின்னர் பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். அதுபற்றி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள். மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலரினால் அறிவிக்கப்படும்.

விண்ணப்பங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டிருந்த உறுதிப்படுத்தப்பட் வேண்டிய பட்ட மற்றும் டிப்ளோமா சான்றிதழ்களை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதற்காக நீண்டகாலம் செலவாகின. மிகவும் வெளிப்படைத் தன்மையுடனும் நியாயமான முறையிலும் பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டதாரிகள் இதற்காக விண்ணப்பித்திருந்தனர். அறிவிக்கப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதன் பின்னர் 45 ஆயிரத்து 585 பேர் நியமனத்துக்காக தகைமை பெற்றுள்ளனர், என்றுள்ளது. (ஒ,5)

## கொரோனா...

யிட்டு பரிசோதனைகளை மேற்கொண்டு கொரோனா தாக்கம் இல்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னரே நிலைமை வழமைக்குத் திரும்பியது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் நீர்க்குழாய் பொருத்துவதற்காக சீனத் தொழிலாளர்கள் நுணாவில் பகுதியில் வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கியுள்ளனர். இதற்குப் பொறுப்பான புதிய அதிகாரி கடந்த மாதம் கொழும்புக்குச் சென்று பரிசோதனைகளை முடித்துக் கொண்டு கடந்த மூன்றாம் திகதி மீண்டும் வந்து கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். இதன் பின்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் பொறியியலாளர் ஒருவர் அந்தப் பணியிலிருந்து திடீரென விலகியுள்ளார். இதனையடுத்து கொரோனா நோயாளி அங்கு தங்கியுள்ளதாக வதந்தி பரவியுள்ளது. இதனையடுத்தே சுகாதாரத் திணைக்களத்தினர் அங்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு கொரோனா இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். (ஒ,5,9)

ஓம் சரவணபவ



### யாழ்ப்பாணம் - நெடுந்தீவு

# கரமத்தை கந்தன் தேவஸ்தானம்

# சித்திரத்தேர் வெள்ளோட்டமும் தேர்த்திருவிழாவும்

## இன்று (08.03.2020) ஞாயிற்றுக்கிழமை

### ஆசிச்செய்தி

மகோற்சவத்தின் சிறப்பு அம்சமாகப் போற்றப்படுவது தேர்த் திருவிழாவாகும் "ஊர் கூடித் தேர்வடம் பிடித்து தேர் இழுத்தோம்" என்பது பழமொழி" இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்றாகிய அழித்தல் தொழிலைக்குறிக்கின்றது. ஆன்மாவாகிய உயிரைப் பற்றி இருக்கின்ற ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அழிக்கின்ற தத்துவத்தை மனிதர்களாகிய எமக்கு விளக்கி வைத்தார்கள் எம் பெரியோர்கள்

உலகத்தில் உயர்ந்த இடமாக உள்ளது மலையாகும் மலையும் மலைசார்ந்த இடமாக உள்ள இடம் குறிஞ்சியாகும் குறிஞ்சி இடத்தின் தெய்வமாக முருகப்பெருமான் உள்ளார். அதுமட்டு மின்றி தமிழ் மக்கள் எங்கு வசிக்கின்றார்களோ அங்கெல்லாம் முருகன் வாழ்கின்றார். முருகன் தமிழ்க் கடவுளாகவும் திகழ் கின்றார்.

இலங்கையில் வடமாகாணத்தின் வடபால் எழுவை தீவுகளின் ஒன்றாகிய நெடுந்தீவின் மேற்கு கிராமத்தின் கரமத்தை என்னும் சிறப்பு பொருந்திய கந்தசுவாமி ஆலயம் அமைந் துள்ளது. அவ் ஆலயத்தில் வருடா வருடம் மாசி மாதத்தில் தேர்த் திருவிழா நடைபெறுவது வழக்கமாகும்.

இவ்வருடமாகிய விரோதி வருஷம் மாசிமாதம் (8-03-2020) ஞாயிற்றுக்கிழமை புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத்தேரில் வள்ளி தெய்வானை உடனுறை சண்முகநாதப்பெருமான் அமர்ந்து வீதிவலம் வர இருக்கின்றார்.

அக்கிராமத்தில் பிறந்து வளர்ந்து இப்பெழுது கனடா துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகியாகவும் பிரதம சிவாச்சாரியாராகவும் திகழ்கின்ற சிவஸ்ரீ தியாகராஜ குருக்கள் கணேசசாமிக்குருக்கள் ஐயா அவர்களின் பொருள் உதவியோடு திருவாளர் இ. பிரபாகரன் சிற்பாச்சாரியார் அவர்களின் கைவண்ணத்தில் உருவாகிய அழகி சித்திரத்தேர் ஓடுவதனால் உலகத்தில் உள்ள மக்களின் மனங்கள் நல்ல எண்ணங்களாக மாற எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருளோடு குருவின் ஆசிகளும் உரித்தாகுக.

**சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக்குருக்கள்**
**மகோற்சவக்குரு, ஊரெழு**

### தலைவரின் வாழ்த்துச்செய்தி

புதிய தேர் ஏறி வரும் கரமத்தைகந்தா அவனியெல்லாம் அருள்பரப்பி பக்தர் மனங்களிலே தெய்வ ஒளிவீசி மகிழ்வூட்டும் கந்தா ஆகும் காலமதில் புதுத்தேரில் வடம் இழுக்க வலம் வந்தே அருள் புரிவீர் ஆனந்தமிகு விநாயகர் தம்பியே ஆறுமுகத்தானே வெவ்வினை தீர்க்கும் வேலவனே உமக்கோர் ஆசனம் அமைத் திட்ட வள்ளலே எம் குலக் குருவே உமக்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகட்டும் தேரேறி வந்து எம் வெவ்வினைகள் அறுத்து அருள் புரிய வேண்டி துதிக்கின்றோம்.

**திரு. சி.தில்லையம்பலம்**
**தலைவர்**
**ஆலய அறங்காவலர் சபை**
**நெடுந்தீவு கரமத்தைக்கந்தன் தேவஸ்தானம்**

### வாழ்த்துச்செய்தி

"மேன்மைகொள் சைவநீதி விளங்கும் உலகமெல்லாம்"
நெடுந்தீவு மேற்கு கரமத்தையில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை சண்முகப் பெருமான் சித்திரத்தேர் இன்று (08.03.2020) வலம் வருவ தையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

ஓயாது நகர்ந்து செல்லுகின்ற மானிட வாழ்விலே மனிதனால் ஆற்றப்படுகின்ற மகத்தான காரியங்களே வரலாறாகி அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டி நிற்கின்றன.

தாய்நாட்டை விட்டு அந்நிய நாட்டிற்குப் புலம்பெயர்ந்து சென் றிருந்தாலும் தாயக நினைவுகளுடன் வாழ்ந்து சண்முகப் பெருமானுக்கு இன்று அழகிய சித்திரத்தேர் ஓடும் இம்மகத் தான பெரும் பணியை ஆற்றிய சிவ ஸ்ரீ தியாகராஜ குருக்கள் கணே சானந்தா குருக்கள் அவர்களை மனதார வாழ்த்து கின்றேன். இவ்வேளையில் சித்திரத்தேரினை வடிவமைத்த சிற்பாச்சாரியார் திரு.இ.பிரபாகரன் அவர்களையும் வாழ்த்து வதுடன், ஆலய மகோற்சவகுரு சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் மற்றும் அறங்காவலர் சபையினர்க்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**F.C சத்திய சோதி ,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், நெடுந்தீவு**

### வாழ்த்துச்செய்தி

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்தனின் கமலமலர்ப்பாதங்களை மனதாரப் பணிகின்றேன். அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை முருகப்பெருமான் அழகிய சித்திரத்தேரேறி இன்று (08.03.2020) வலம் வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடை கின்றேன். இந்நாள் எம்மக்களுக்கு ஒரு பொன்னாளாகும் தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

இப்புதிய சித்திரத்தேரினை நெடுந்தீவு ஆதிசைவப் பிரா மணபரம்பரையில் வந்துதித்த சிவஸ்ரீ தியாகராஜா குருக்கள் அவர்களின் சிரேஸ்ட புத்திரனான கணேசானந்த குருக்கள் அவர்கள் முருகப்பெருமான் மீது கொண்டுள்ள மிகுந்த பக்தியும் அதீத ஆர்வமும் காரணமாக தாமாகவே முன்வந்து இப் பெரும்பணியை நிறைவேற்றித் தந்த பெருமைக்குரியவர் இம் மகத்தான கைங்கரியத்திற்கு எம் தாயக மக்கள் அனைவரும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

இவரது பணி மென்மேலும் சிறக்கவும் இத்தேரினை வடிவமைத்த சிற்பாச்சாரியார் திரு.இ.பிரபாகரன் அவர்களுக்கும் ஆலய மகோற் சவக்குரு சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக்குருக்கள் மற்றும் ஆலய அறங்காவலர் சபையினர்க்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**க.காங்கேசு, செயலாளர்**
**ஆலய அறங்காவலர் சபை**

### வாழ்த்துச்செய்தி

நான்குபக்கமும் அலைகடல் தாலாட்டும் நெடுந்தீவின் மேற்கு திசையில் தென்பால் அமைந்து அருளாட்சி புரியும் கரமத்தை முருகனுக்குப் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் தேர்த்திருவிழாவும் 08-03.2020 நடைபெறும் என்ற செய்தி நெடுந்தீவு மக்களின் உள்ளமெல்லாம் கந்தன் ஒளி பிரகாசித்து எழும் என்பதில் ஐயம் இல்லை

கரமத்தை கந்தனின் லீலைகளில் சித்திரத்தேரும் ஒன்றாகும் காலஞ்சென்ற வை. சுவாமிநாதன் என்பவரின் ஆலோசனையின் பேரில் ஏற்கனவே தனது அருகாமையில் வசித்து வந்த திரு. ஐயம்பிள்ளை பரமலிங்கம் என்பவரைக்கொண்டு இராஜகோபுரம் அமைக்கத் தூண்டுவித்து தனக்கான இராஜ கோபுரத்தை நெடுந்தீவில் முதன்முதலாக அமைக்கச்செய்து அழகு பார்த்தார். அதே போன்று நிர்வாக சபையினரும் தேர்த்திருவிழா உபய காரரும் தேருக்கு என்னசெய்யலாம் என யோசித்துக்கொண்டிருந்த போது தன்னுடைய அடியவனான உயர்திரு தி.கணேசசுவாமி குருக்களின் உள்ளத்தில் அடியவரின் தேவையை உணர்த்தி தன்க்கான ஒரு சித்திரத்தேரை அமைத்துக்கொண்டார். அதுமாத்திரமன்றி தேரைப் பாதுகாப்பதற்காக தேர் முட்டியை அமைக்கும் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டார். முருக என்றால் அழகு என்பது பொருள் முருகன் உறையும் ஆலயங்கள் எல்லாம் அழகாகவும் நேர்த் தியாகவும் திகழ்வதைக்காணலாம். கவின்நிலை இழந்த நிலையில் காணப்படும் ஆலயத்தை திருச்செந்தூர் போன்ற நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்ற எண்ணக்கருவை அன்பரிடத்தில் ஏற்படுத்தி அதற்கான வேலைத்திட்டத்தையும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார்.

திரு தி. கணேசுசுவாமி குருக்கள் அவர்கள் இளமையில் கல்வியிலும் குருகுல கல்வியிலும் சிறந்து விளங்குவதோடு குரல் வளம் நிறையப் பெற்றவர். பத்ததி வாசிக்கின்றபோது அடியார்கள் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். அத்தகைய சிம்மக்குரலோன். தந்தையார் தியாகராஜக்குருக்கள் அவர்கள் தெளிந்த ஞானம் உடையவர். பயன் சொல்வதில் வல்லவர். ஆனால் எங்கள் கணேசு சுவாமிக்குருக்கள் தாயின் சாயலை ஒத்தவர். இளமையில் ஏற்பட்ட வறுமை போன்ற பல்வேறு காரணிகளால் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற முதுமொழிக்கிணங்க கனடா நாட்டிற்கு சென்று. அங்கு தன்னை நிலைநிறுத்தி அங்கு அம்மன் ஆலயம் ஒன்றை நிறுவி அங்கு நெளுவினி சித்திவிநாயகரையும் கரமத்தைக்கந்தன் ஆலயங்களை நிறுவி தாய்நாட்டின் பெருமையை நிலை நாட்டிய பேருவகையாளன் பூநூற்சடங்கு செய்து அழகுபார்த்தது கரமத்தைகந்தன் ஆலய நிர்வாகம் குருப்பட்டம் செய்து அழகு பார்த்தது கரம்மத்தை கந்தன் ஆலய நிர்வாகம். திருக்கேதீஸ்வர குருகுலத்தில் புடம் போடப்பட்டு எடுக்கப்பட்ட முத்து தன்னை வாழவைத்த கந்தனை தான் அழகு படுத்தி பார்க்க வேண்டும் என்ற காருண்ய எண்ணத்துடன் செயற்படும் கணேசு சுவாமிக்குருக் களின் எண்ணக்கனவு நிறைவேற கந்தனின் பாதார விந்தங்களை பணிந்து அவர் என்றும் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்தி கணேச சாமிகுருக்கள் "காருண்ய வள்ளலாக என்றென்றும் வாழ வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன். வளர்க முருகன் நாமம்

**என்றும் உங்கள் தொண்டன்**
**சு.நடராசலிங்கம் (J.P)**
**பொருளாளர்**
**கரமத்தை கந்தன் நிர்வாகம்**

# கட்டுரை, பேச்சு போட்டி

யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் அனுமதியுடன் எமது சங்கத்தின் 100 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களின் மொழியாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் நடாத்தப்பட உள்ள பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி ஆகியவற்றை பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு மாணவர், மாணவி என்ற ரீதியில் ஒவ்வொரு பிரிவுக்குரிய மாணவர்களைத் தெரிவு செய்து பெயர், விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் எழுதி போட்டி நடைபெறும் மண்டபத் திற்கு கொண்டு வரும்படி தங்களை கேட்டுக்கொள்கின்றோம். கட்டுரைக்கான தலைப்பு அந்த அந்த தரத்திற்குரிய கலைத்திட்டத்துடன் தொடர்புடையவையாக போட்டி நடைபெறும் தினத் தன்று கட்டுரைக்கான தலைப்புக்கள் வழங்கப்படும்.

**போட்டி தலைப்பு**

01. முன்பள்ளி மாணவர்கள் - எனது பள்ளிக்கூடம்
02. தரம் 1 - காலை எழுந்தவுடன் படிப்பு
03. தரம் 2 - கல்விச்செல்வம்
04. தரம் 3 - சோமசுந்தரப்புலவர்
05. தரம் 4 - ஆறுமுகநாவலர்
06. தரம் 5 - சுவாமி விபுலானந்தர்
07. தரம் 6-7 - வாசிப்பே மனிதனை பூரணப்படுத்தும் (5-7 நிமிடம்)
08. தரம் 8- 9 - முறைசாராக்கல்வியின் முக்கியத்துவம் (10நிமிடம்)
09. தரம் 10-11 - சூழல் பாதுகாப்பு (10நிமிடம்)
10. தரம் 12-13 - சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பு (10 நிமிடம்)

**குறிப்பு**

1. கட்டுரைப்போட்டிகள் 09.03.2020 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். மாணவர்கள் எழுது கருவிகளுடன் மட்டும் வந்தால் போதும்
2. பேச்சுப்போட்டி தரம் 1 - தரம் 5 வரை 14.03.2020 ஆம் திகதி 9.00 மணி தொடக்கம் நடைபெறும்
3. தரம் 6-தரம் 13 வரையான மாணவர்களுக்கு 15.03.2020 ஆம் திகதி 9.00 மணிதொடக்கம் நடைபெறும்.

**போட்டிகள் நடைபெறும் இடங்கள்**

1. கோப்பாய் கோட்டம் யாழ்ப்பாணம் 2. நல்லூர் கோட்டம், யாழ்ப்பாணம்
3. யாழ்ப்பாண கோட்டம் - யாழ்ப்பாணம்

- பாடசாலை அதிபரால் பரிந்துரை செய்யப்படும் மாணவன்/ மாணவி மட்டுமே போட்டிகளில் பங்குபற்ற முடியும்.
- கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று போட்டியாளர்களும் இறுதி தெரிவிற்கு பிறிதொரு தினத்தில் அழைக்கப்படுவர்.

பரிசளிப்பு மேமாதம் 16 ஆம் திகதி சங்கத்தின் 100 ஆவது ஆண்டுவிழாவில் வழங்கப்படும்.

**ஞானபாஸ்கரோதய சங்கம் GPS வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

# Study in France

மாபெரும் கல்வி மற்றும் தகவல் கருத்தரங்கு

| 20 மார்ச் 2020 | 21 மார்ச் 2020 | 22 மார்ச் 2020 | 23 மார்ச் 2020 |
|---|---|---|---|
| வென்னப்புவ | கொழும்பு | கண்டி | யாழ்ப்பாணம் |



**பொறியியல் | வணிகம் | உயிரியல் விஞ்ஞானம்**

- உயர்கல்வியைத் தொடர உலகின் 3ஆவது பிரபல்யமான நாடு
- குறைந்த கல்வி கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவு
- உயர்கல்வியுடன் Internship வாய்ப்புக்கள்.
- உலகின் 5ஆவது மிகவும் வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தை கொண்ட நாடு.
- பகுதி நேர வேலை வாய்ப்புக்கள்.



CAMPUS FRANCE campusfrance.org

0774 464 169 | 077 440 9620

AIC

# அரிய சந்தர்ப்பம்

**VISA PROCESS AS YOUR SERVICE !**

வீசா பெற்றபின் பணத்தை செலுத்தலாம்



- WHERE YOU WANT TO GO ?
- WHICH IS YOUR DREAM COUNTRY
- WE DON'T KNOW BUT YOU KNOW

**U.K., U.S.A, AUSTRALIA, CANADA, IRELAND, FINLAND, NOREWAY, GERMANY AND MORE**

- STUDENT VISA
- BUSINESS VISA (B1+B2) CATEGORY
- VISIT VISA
- VISA PROCESS & DOCUMENTATION
- BANK BALANCE SHOWING
- AS YOUR WISH

HURRY UP !

WE SERVICE YOUR FLY !

மேலதிக விவரங்களுக்கு :

**MATIN MIGRATION VISA CENTRE**

No.20-1/1, Deanston Place, Colombo 03

Tel : 078-8171726 / 077-8505608 / 072-8060037 077-6380656 / 011-5305610

nafaiz55555@gmail.com

# VACANCIES

**MANAGER - CAREER GUIDANCE CENTRE**

We are looking for a Suitable Female Candidate to run our Career guidance Centre which is to be opened soon in Palaly Road Thirunelveli Jaffna.

**She must have the following requirements,**

1. Female with strong outgoing personality, between 25 – 35 years
2. Good Communication Skills in English & Tamil plus Computer skills
3. Should poses Motorbike driving license
4. Should be able to visit villages & DS offices to identify Suitable Candidates
5. Should be able to promote the training Centre with innovation
6. Should Provide admin support for the Training Centre
7. A person with discipline and honesty.

**RETIRED VOLUNTEER TEACHERS**

We are looking for Retired volunteer Teachers who can teach the following Courses at our Career guidance Centre in Thirunelveli Jaffna from June.

**Courses :** English, Sinhala, Speech Craft Training and Etiquette Training.

**They should have the following requirements ,**

1. Relevant qualifications
2. Excellent communication skills
3. Honest and committed individuals
4. They should be able to work 4 hours a day
5. Age - 50 Years and above

**Send your Cvs to hr@thethinnai.com with your photograph via email or Post - HRM - The Thinnai Hotel 86, Palaly Road Jaffna – 021 2030400**

# ES Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

# Wayamba Polymers (Pvt) Ltd நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை

இலங்கையில் முதல் தரமான பிளாஸ்ரிக் பொருள்களின் தயாரிப்புக்களின் முன்னணி உற்பத்தி நிறுவனத்துக்கு விற்பனைப்பிரதிநிதி தேவை

**தகைமைகள்**

1. ஆண் (வயது 25 - 45)
2. 1 - 2 வருட விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான அனுபவம்.
3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
4. சிறந்த தொடர்பாடல் திறன் உள்ளவர் விரும்பத்தக்கது.

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் கமிஷன் மற்றும் எரிபொருள் செலவு உட்பட ஏனைய படிகள் வழங்கப்படும்.

உங்கள் சுயவிவரங்களை **wayambapolymers@gmail.com** அல்லது **wykes@slt.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Wayamba Polymer (Pvt)Ltd**

**இல. 563B 1/1, நாவல வீதி, இராஜகிரிய.**

**077 365 4883 - நிரோசன்**

# அலாவிஸ் - வலன்சியா ஆட்டம் சமநிலையில்

ஐரோப்பியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்று சமநிலையில் முடிவடைந்தது.

அலாவிஸ் - வலன்சியா அணிகள் மோதிய போட்டியின் முதல் பாதி ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் வலன்சியா அணி வீரர் டானி பார்ரியோ முதலாவது கோலைப் பதிவு செய்தார். முதல் பாதி ஆட்டத்தில் வலன்சியா அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணி வீரர்களும் கோல்கள் போடுவதற்கு பல்வேறு தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டனர். இருந்தும் ஆட்டத்தின் 73ஆவது நிமிடத்தில் அலாவிஸ் அணி வீரர் மென்டிஸ் பதிலுக்கு கோல் ஒன்றைப் போட ஆட்டம் விறுவிறுப்பானது. இறுதிவரை இரு அணிகளும் மேலுமொரு கோல்களைப் போடுவதற்கு எத்தணித்த போதிலும் அது கைகூடாமல் போக இறுதியில் ஆட்டம் சமநிலையானது. அலாவிஸ் அணி வீரர்கள் 13 தடவைகள் எதிரணியின் கோல் கம்பங்களை நோக்கி பந்தை நகர்த்திய போதும் அவர்களால் ஒரு கோலே பெற முடிந்தது.



## விமான சேவை

யாழ்ப்பாணம் ⇆ கொழும்பு
திங்கள், புதன், சனிக்கிழமைகளில்
பதிவுகளுக்கு
கரிகணன்
One way Ticket 7,500/-
தொடர்புகளுக்கு 077 0111 035 | 036
077 0111 028 | 029

## பணிப்பெண் தேவை

உரும்பிராயில் சிறிய குடும்பத்திற்கு தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

TP: 077 609 5604

## காணி விற்பனைக்கு

குட்டியபுலம் வசாவிளானில் அமைந்துள்ள 80 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

076 666 4252

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு மிக அருகில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பரப்பு 80 லட்சம் (தரகர்கள் மூலம் இல்லை)

077 328 5401

## நல்லின பசுமாடுகள் விற்பனைக்கு

கிளிநொச்சியில் பிரீசியன் கலப்பின மாடுகள் மற்றும் கன்றுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்க -
077 886 6819

## Piano Classes

Piano Classes for kids will be conducted. candidates will be sent for the I.W.M.S Examinations. Those who wish to join

Please Contact :-
077 989 4594

## JCB விற்பனைக்கு

பதிவு செய்யப்பட்ட ஆண்டு - 2012
தயாரிப்பு ஆண்டு - 2002
தயாரிப்பு - இங்கிலாந்து
விலை - **4.6 M**
(பேசித்தீர்மானிக்கலாம்)
இடம் :- மன்னார்

077 474 1753

**அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கும் பிரபல உற்பத்தி தொழிற்சாலைக்குப் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. **இயந்திர இயக்குநர்** (*Machine Operator*)
   தகைமை- தொழில்நுட்ப அறிவு,முன்னனுபவம். க.பொ.த.சாதாரணத்தில் (*O/L*) சித்தி.
2. **உதவியாளர்** - முன்னனுபவம் அவசியமில்லை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை:- 20 - 40 வரை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 339 5775





நேரம் : 12.23PM - 01.50PM
காலம் : 09.03.2020, திங்கட்கிழமை
இடம் : நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்
Mob : +94 773842077
E.Mail : bannercutsjaffna@gmail.com
Add : 936, K.K.S Road, Naachimar Kovilady, Jaffna.
Cont : +94 (11)7 111 666

## காணி தேவை

தாவடிக்கும், தெல்லிப்பளைக்கும் இடையில் K.K.S வீதியில் காணி தேவை.

**10 - 15 பரப்பு**

077 078 5608, 076 410 8809

## வேலையாள் தேவை

யாழ்நகர் பிரவுண் வீதியில் உள்ள வீடொன்றிற்கு ஆண் வேலையாள் தேவை. கிளினிங், துணி துவைதல், சமையல் உதவி, வீடு பராமரிப்பு போன்ற இலகு வேலைகள்

நாள் சம்பளம் 1000/= அல்லது உணவு தங்குமிடத்துடன் 700/= ஆண் மட்டும்.

077 711 1444

## கார் விற்பனை

**Suzuki Alto, 2015, First Owner, Grey, Allow 40,000 kms, for immediate sale, 18½ Lakhs only**

Contact - 077 776 8955

## இயந்திர இயக்குநர் தேவை

யாழ் நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு **Off Set** இயந்திரம் இயக்கக் கூடிய இயந்திர இயக்குநர் தேவை.

இன்று மு.ப. 11.00 பின் தொடர்புகொள்ளவும்.
077 959 2628

## பெண் பணியாளர் தேவை

இருபாலையில் இயங்குகின்ற **Multishop** இற்கு பெண் பணியாளர் தேவை. அருகில் உள்ளோர் விரும்பத்தக்கது.

077 283 5525

**அரச மற்றும் தனியார் தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாக பெறக்கூடிய கற்கைநெறிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன.**

- GCE O/L, A/L தகைமை இல்லாத மாணவர்களுக்கு இலங்கை அரசினால் NVQ தகைமை ஊடாக GCE O/L, A/L தகைமையினை TVEC NVQ 4 ஊடாக இலங்கை அரசினால் வழங்குகின்றது.
- O/L, A/L முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தொழில் வாய்ப்பொன்றினை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் ஆகி யோர்களுக்கான தொழில்சார் கற்கை நெறிகளை அரச அங்கீகாரம் பெற்ற pebbles academy யினால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன.
- **Pre School Teachers Training முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி (NVQ) Level-4**
- 6 மாத கால கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு மற்றும் 6 மாத முன்பள்ளி ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்படும். அத்தோடு (TVEC) யின் அரச அங்கீகாரம் பெற்ற Pebbles Academy யினால் NVQ-4 சான்றிதலும் வழங்கப்படும்.
- இக் கற்கை நெறிகளை நீங்களும் கற்பதனூடாக அரச அங்கீகாரம் பெற்ற NVQ -4 சான்றிதழ்களை பெற்று அரச மற்றும் தனியார் தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாக பெற்றுக்கொள்ளுங்கள்.
- அத்தோடு ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய 3 மாத கால கற்கை நெறிகளும் ஆரம்பமாகின்றன.
  Spoken English
  * Spoken Singhala & Grammar

இக் கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் மார்ச் மாதம் 15ம் திகதி யாழ்ப்பாண நூலகத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றன. இக் கற்கை நெறிகளை நீங்களும் கற்க விரும்பினால் கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து முன்கூட்டியே உங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**

Pebbles academy
Jaffna +94 771779170/+94 775697715
Head Office +94 750847474/+94 674929 229
www.pebbles.academy / Email: info@pebbles.academy
Facebook page: Pebbles Academy
Address: Technical College Road, Akkaraipattu, Sri Lanka.

## காவலாளிகள் தேவை (Security Guard)

யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள பண்ணை ஒன்றிற்கு காவலாளிகள் மற்றும் பராமரிப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

வயதெல்லை : 30 - 60
நேர்முகத் தேர்வு : 09.03.2020 திங்கள் காலை 9.00 மணிக்கு நடைபெறும்

தொ.பேசி இல. 075 330 5500

(CS 31745) (10)

## பணிநிலை வேண்டுகை

**யாழ்.நகரில் இயங்கும் பிரபல நகை காட்சியறைக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.**

- **கணக்குப் பதிவாளர் (ஆண் / பெண்)**
  (20 முதல் 40 வயதுக்குட்பட்டவர். கணினி அறிவு விரும்பத்தக்கது)
- **விற்பனைப் பிரதிநிதி ( ஆண்/ பெண்)**
  அனுபவம் உள்ளவர். பழக விரும்புபவர்கள் (வயது - 20 - 40 வரை) ஆர்வமுள்ளவர்கள் கிழமை நாள்களில் முற்பகல் 9 மணிமுதல் 10 மணிக்குள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண்கள் விரும்பத்தக்கது. தங்குமிட வசதி இலவசம்.

முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையும் கவர்ச்சிகரமான சம்பளமும்

**நியூ மைதிலி ஜுவலர்ஸ்**
இல.38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது

| | |
|---|---|
| பிரான்ஸ் | ரூ.750/ரூ.700 |
| ஜேர்மனி | ரூ.750/ரூ.700 |
| டென்மார்க | ரூ.750/ரூ.700 |
| கொலண்ட் | ரூ.750/ரூ.700 |
| பெல்ஜியம் | ரூ.750/ரூ.700 |
| இத்தாலி | ரூ.850/ரூ.750 |
| லண்டன் | ரூ.700/ரூ.575 |

கனடா மற்றும் லண்டனுக்கு பழங்கள் மரக்கறி வகைகளை வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு அனுப்பிட தொடர்புகொள்ளவும்.

முகவர்களாக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்

கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும், யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும் பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500 | 72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கைகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500 |

## வேலையாள் தேவை

**பொதிகள் சேவை நிறுவனத்துக்கு**

18 - 30 வயதுக்குட்பட்ட பணியாளர் தேவை.

075 330 5500, 021 221 5656

## வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

யாழ். நகருக்கு மிக அண்மிய சூழலில் வண்ணார் பண்ணை வீதியில் வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. 4 படுக்கையறைகள், 2 Hall, Bathroom மாத வாடகை 30,000 ஒரு வருட முற்பணம் தேவை. வாகன தரிப்பிட வசதி உண்டு. Store ஆகவும் பயன்படுத்தலாம். (தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு:
077 9311 889, 076 8833 713

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

021 222 8093 17, Kandy Road, Jaffna

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS(Academic and General) , A1 UK Exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

*Guarnteed to 7.5 in IELTS Exam
*Pass in A1 Exam
*Exam centre

**Please contact:-**
077 780 3970/ 078 521 1351

(CS/31209) (11,17)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.